

கல்கி
KALKI டிசம்பர் 18, 1955
4 அணா

"எனக்கு பிரியமான நறுமணம்"

என்கிறார் சாவித்திரி

"லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய வாசனை உண்மையாகவே விரும்பப்படுகிறது. அதன் நறுமணம் அதிக நேரம் தேகத்தில் கமழும்"



சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப்பின் சிறந்ததாக நறுமணமாக்கப் பட்டுள்ள நுரை உலகத்தில் மிகப் பிரபலமான அழகுடைய பெண்மணிகள் சருமத்தை புத்தம் புதிதாகவும், மிருதுவாகவும், வனப்புடனும் வைத்திருக்கிறது.



உங்கள் தினசரி எழிலளிக்கும் ஸ்னானத்திற்கு பெரிய சைஸ் சோப்பை உபயோகித்து மகிழுங்கள்

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 461-50 TM

மலர் - 15
இதழ் - 20

கல்கி

மன்மத ஞு
மார்கழி 3

1955 டிசம்பர் 18

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 15 } இதழ் 20

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

{ மன்மத ௵ மார்கழி மீ 3

உலக உறவு

அமெரிக்க சர்க்காரின் முக்கிய மந்திரி டல்லெஸ் அவர்களுடைய போக்கு மிக விபரீதம் ஆய்விட்டது. ஒருபுறம் ஸோவியத் தலைவர்கள் இந்தியாவை ஏமாற்றிப் பாரத மக்களுடைய அன்பை அநியாயமாகக் கொள்ளை கொண்டு போகிறார்களே என்று வருத்தப்படுகிறார்! மற்றொருபுறம் ஒரு அவசியமும் இல்லாத சந்தர்ப்பத்தில் ஒரு பொருளும் இல்லாத முறையில் இந்திய சர்க்காரின் கோபத்தையும் பாரத மக்களுடைய வெறுப்பையும் அடைவதற்கே செய்தாற்போல், போர்ச்சுகல் அதிகாரியுடன் கூட்டுக் கையெழுத்திட்டு கோவா விஷயத்தைக் குறித்து அறிக்கை வெளியிட்டார். கெட்ட காலங்களில் துர்ப்புத்தி தோன்றுவது ஒரு இயற்கை நியதி. அமெரிக்காவுக்குக் கெட்ட காலம் என்று நாம் சொல்லவில்லை. தற்போதுள்ள சர்க்கார் வெளியேற்றப் படும் காலம் நெருங்கி வருவதற்கு அடையாளம் என்றே குறிப்பிடுகிறோம். எதிர்க் கட்சித் தலைவர் ஹாரிமன் விடுவாரா? உடனே பிடித்துக் கொண்டு அறிக்கை விட்டிருக்கிறார். மிக சாமர்த்தியமான அறிக்கையே வெளியிட்டிருக்கிறார். ருஷ்யத் தலைவர்களைப் பாரத மக்கள் சந்தேகப்பட்டு விடுவார்களோ என்று, டல்லெஸ் அவர்கள் தம் அறிக்கையை வெளியிட்டு ருஷ்யத் தலைவர்களுக்கு உதவி செய்திருக்கிறார் என்று பளிச்சென எழுதியிருக்கிறார். இது எல்லாம் அமெரிக்கர்களுடைய உள் நாட்டுக் கட்சிச் சண்டையான போதிலும், இந்தியாவைப் பொறுத்தமட்டில் தற்போதைய அமெரிக்க சர்க்கார் அரசியல் ஞானத்தோடு நடந்து கொள்ளவில்லை என்பது வருந்தத் தக்கது.

பாரத நாட்டு சர்க்கார் அமெரிக்கக் கட்சியிலுமில்லை, ருஷ்யக் கட்சியிலு மில்லை. முந்தியுமில்லை, இனியும் இல்லை. "நாங்கள் அதிகமாக உதவி செய்தோம், எங்களை விட்டு விட்டு வெறும் வாய்ப் பந்தல் போடுகிற ருஷ்யத் தலைவர்களைக் கட்டி அணைத்துக் கொண்டு பூமாரி பொழிகிறீர்களே" என்று இந்திய மக்களைக் குற்றம் சாட்டி அமெரிக்கப் பத்திரிகைகள் புலம்புகின்றன. உதவி செய்யும் எண்ணத்தின் சிறப்பை இத்தகைய கருத்துக்களும் பேச்சுகளும் தாழ்த்தி விடுகின்றன. ஊரில் ஒருவருக்கு ஒருவர் தேவையை உணர்ந்து உதவிசெய்து ஒத்து வாழ்வதற்கு 'ஒப்புரவு' என்று பெயர். ஊருக்கு உள்ள தர்மம் உலகத்துக்கும் உண்டு. உலக ஒப்புரவு என்பது ஒரு பெரிய விஷயம். அதைக் கீழ்த்தர வியாபார முறையில் நடத்திப் பயன்பெற முடியாது.

இந்தியாவின் வறுமையைப் பற்றிச் சந்தேகம் இல்லை. ஆயினும் உலகத்தின் நன்மைக்காகவும் தன்னுடைய நன்மைக்காகவும் உயர்ந்த வாழ்க்கை வாழ விரும்பு கிறது. இதற்கு உதவி செய்பவர்கள் யாராயினும் சரி, சிறுமை எண்ணங்களை விட்டு விட்டுத் தங்களால் ஆன உதவியைச் செய்வது முறை. நாம் கேட்காமலே செய்ய வேண்டும். யாருடைய உதவியையும் நாடாமல் நாம் எம்மட்டும் முன் னேற்றம் அடையலாமோ, அதற்கு முயற்சி செய்வதே மேலாகும். என்றாலும் யாரேனும் உதவி தந்தால் வேண்டாம் என்று சொல்லுவதும் ஆணவமாகும். அன்பு வழிக்கு மாறாகும். இதனாலேதான் அமெரிக்க உதவியை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். வேண்டாம் என்றாலும் சாமர்த்தியசாலிகளான அமெரிக் கர்கள் நிச்சயம் கொடுப்பார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இடையில் கோபாவேசத்தில் ஆட்சேபணைகள் கிளம்பும். சமாதானங்களும் ஏற்படும். வெளி உதவியை எவ்வளவுதூரம் பற்றி நிற்கிறோமோ அந்த அளவு நமக்கு பலக் குறைவுதான். இதை நினைவில் வைத்துக் கொண்டே தேசத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் காரியம் பார்க்க வேண்டும்.

இன்றே உதவுங்கள்!

தஞ்சை ஜில்லாவில் அடித்த பெரும் புயலினாலும், கடல் பொங்கியதினாலும் விளைந்த உயிர்ச் சேதங்களைப் படிக்கும்போது நெஞ்சு படபடக்கிறது.

ராமநாதபுரம் ஜில்லாவில் ஏரிகள் உடைப்பெடுத்துத் தண்ணீர் பெருகி மக்களைச் சூறையாடிய விதத்தைக் கேட்கும்போது கண்ணீர் பெருகுகிறது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அடித்த புயலில் வீடுகள் இடிந்தன. கூரைகள் பிய்ந்தன. அறுபது எழுபதாண்டான பெருமரங்கள் வேரோடு சாய்ந்தன. தென்னந் தோப்புகள் அழிந்தன; வாழைக் கொல்லைகள் நாசமாயின. வயல்களில் நீர் தேங்கிப் பயிர்கள் அழுகி அழிந்தன. ஏழை மக்கள் உடைமைகள், துணிகள், உணவுப் பொருள்கள் இழந்தனர்; நிர்க்கதியுற்று நின்றனர்.

இப்பொழுது அடித்த புயலிலும் மேற்கண்ட கொடுமைகள் எல்லாம் நிகழ்ந்தன. அதிகமாகவே ஏற்பட்டன. அவற்றுடன் ஆயிரக்கணக்கான பேர் தூங்கிக்கொண்டிருக்கும்போது, நிம்மதியாக இருக்கும்போது திடீரென்று வெள்ளம் வந்து, அவர்கள் உயிர் துறந்த சோகக் கதைகள் கேட்கக் கேட்க மனம் தாங்க முடியவில்லை.

பாரத சர்க்காரும் சரி, சென்னை சர்க்காரும் சரி இந்தச் சோதனையைத் திறம்படவே சமாளித்திருக்கிறார்கள். நமது முதன் மந்திரி திரு காமராஜ் அவர்கள் இப்பகுதிகளில் எல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து மக்களுக்கு ஆறுதல் மொழிகள் கூறி உடனுக்குடன் உதவியளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். என்றாலும் ஏற்பட்டுள்ள நஷ்டம் அளவிட முடியாத நிலையில் இருப்பதால் சர்க்கார் மட்டும் அதை ஈடு செய்ய முடியாது. தேசமெங்கிலுமுள்ள ஈகை இரக்கமுள்ள மக்கள் நிதி உதவி செய்ய முன் வர வேண்டும்.

உடலாலும், பொருளாலும் ஒருவரால் உதவி எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்ய வேண்டிய இச்சந்தர்ப்பத்தில் மிகக் கேவலமான உணர்ச்சி படைத்த சுயநலமிகள் இல்லாமலும் இல்லை. மக்களின் அனுதாப உணர்ச்சியைத் தங்கள் சொந்த நலனுக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறவர்களும் நம்மிடையே இருக்கவும் செய்கிறார்கள். இதைக் கருதி நமது நிதி மந்திரி, "புயல் கஷ்ட நிவாரண நிதிக்குப் பணம் திரட்டுவதாகப் போலி நபர்கள் வந்தால் ஏமாந்துவிட வேண்டாம்" என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இதை மனத்தில் கொண்டு சரியான மனிதர்களிடம், தேசத்தில் எப்பகுதியிலுள்ளவர்களும் தங்களாலான பொருளுதவியைக் காலந் தாழ்த்தாமல் செய்ய வேண்டுகிறோம். தமிழக மக்களின் இக்கஷ்டத்துக்கு உதவியவர்களுக்கெல்லாம் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இப்புயலின்போது இந்தியாவிலிருந்த ஸவூத் அராபிய நாட்டு மன்னர் இப்புயல் நிவாரண நிதிக்கு ரூ. 50,000 நன்கொடை வழங்கியிருக்கிறார் என்பதை யறிந்து மகிழ்கிறோம். இப்படியே பல நாடுகளிலிருந்தும் உதவிகள் வந்தவண்ணமிருக்கின்றன. தமிழக மக்களும் இந்தச் சமயத்தில் தங்கள் சகோதர சகோதரிகளின் கஷ்டத்துக்குப் பெரும் அளவில் உதவ முன் வர வேண்டும்! புயல் தன்னால் ஆனதை யெல்லாம் செய்து விட்டது. நாம் நம்மால் ஆனதை யெல்லாம் செய்து உதவ வேண்டும்.

சுபிட்ச வாழ்வு அளிக்கும் சிறந்த திட்டம்

சுதந்திர பாரதம் சுபிட்சப் பாதையில் அதிவிரைவாக முன்னேறி வருகிறது என்பது சென்ற வாரம் ஜவாஹர்லால் நேருஜி ஆந்திர ராஜ்யத்துக்கு விஜயம் செய்தபோது நிரூபணமாயிற்று. அங்கு உருவாகப் போகும் நாகார்ஜுன சாகர் அணைக்கட்டுக்கு நேருஜி அஸ்திவாரக் கல் நாட்டியதன் மூலம் வருங்கால சுபிட்சத்துக்கே அஸ்திவாரம் அமைத்துள்ளார் எனலாம். கிருஷ்ணா நதியின் பள்ளத்தாக்கில் கட்டப்படும் நாகார்ஜுன சாகர் திட்டம் பூர்த்தி பெற 122 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமெனில், அதனால் ஏற்படக் கூடிய பலன்களைக் கற்பனை செய்து கொள்ளலாம்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஆந்திராவில் ஆட்சி புரிந்த பௌத்த ஆச்சாரியரான நாகார்ஜுனரின் பெயர் வைக்கப்பட்டுள்ள அத்திட்டத்தின் மூலம், முப்பத்துநாலு லட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்பட்டு, அங்குள்ள லட்சக் கணக்கான மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு வழி பிறக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அணைக்கட்டிலிருந்து பிரியும் 276 மைல் நீளமுள்ள வாய்க்கால் உலகத்திலேயே பெரிய பாசன வாய்க்காலாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

"இது ஒரு புனித வைபவமாக எனக்குத் தோன்றுகிறது. இந்த அஸ்திவாரமானது இந்திய மக்களின் ஆலயத்துக்கு அமைக்கப்படும் அஸ்திவாரமாகும். இது, இன்று நாம் பாரத நாடெங்கும் நிர்மாணித்து வரும் புதிய ஆலயங்களின் ஒரு சின்னமாகும். பாரத மக்களின் வறுமையையும் துன்பத்தையும் வேலையில்லாக் கஷ்டங்களையும் ஒழித்து, அவர்கள் ஆனந்தமாகவும் சுபிட்சமாகவும் வாழ இது போன்ற ஆலயங்கள் அத்தியாவசியமானவை" என்று நேருஜி அஸ்திவாரக் கல்நாட்டு விழாவின்போது குறிப்பிட்டார்.

அவ்விதம் மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு இன்றியமையாத நாகார்ஜுன சாகர் திட்டமும், இந்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் கைக்கொண்டுள்ள மற்றும் பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களும் விரைவில் பூர்த்தியாகி, பாரத மக்களுடைய வெற்றி வாழ்க்கையின் சின்னங்களாக விளங்குமென நம்புகிறோம்.

என்ன சேதி?

ராஜாஜி தினப் பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கை:—

“எனக்குப் பல வாழ்த்துச் செய்திகளும் அன்பு மொழிகளும் வந்துள்ளன. அவற்றில் சில இதற்கு முன்னால் தெரியாதவர்களிடமிருந்தும், நான் சற்றும் எதிர்பார்க்க முடியாத இடங்களிலிருந்தும் வந்துள்ளன. இந்த அன்புக்கு நான் எவ்வளவோ நன்றியுடையவனாயிருக்கிறேன். ஆனால் இப்படி வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருப்பவர்களுக்கெல்லாம் தனித்தனியே என் நன்றியைத் தெரிவிப்பது என்பது எனக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அதனால் இப்படிப் பொதுப்படையாக யாவருக்கும் நன்றி செலுத்துவது பற்றி அன்பர்கள் என்னை மன்னிப்பார்கள் என்று நினைக்கிறேன். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இளம் நண்பர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது கடந்து செல்லும் வயசையும் ஆண்டுகளையும், தேதிகளையும் கணக்கெடுக்காமல் வேலை செய்து கொண்டிருப்பதே சிறந்தது என்று நம்புகிறவன் நான். இதே போல் நம்பிக் கழிந்து போகும் ஆண்டுகளை எண்ணாமல் அவரவர்கள் துறையில், நல்ல வேலை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

எதையும் பிசகின்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையில் ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். நான் 1879ம் ஆண்டில் பிறந்தவன் என்பதைத் தெரிந்து கொண்டதைத் தவிர நான் பிறந்த தேதி, மாதம், ஒன்றும் எனக்குத் தெரியாது. ஜாதகங்களில் மிகுந்த நம்பிக்கையுள்ள இந்நாட்டில், எப்படியோ விசித்திரமாக என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என் ஜாதகத்தை எங்கேயோ தொலைத்து விட்டார்கள். அதிலிருந்து நான் என் பிறந்த நாளைத் தெரிந்து கொள்ளாமலே நாட்களைக் கடத்தி வருகிறேன்.

இன்று ஒவ்வொருவர் மனத்திலும் நிரம்பியுள்ளது சற்றும் எதிர்பாராத விதமாகத் தமிழக ஏழை மக்களுக்கு இயற்கை விளைத்த பெருந் துயர்தான்.

பிரபஞ்சத்தில் துயரம் என்பது ஏன் இருக்கவேண்டும் என்பது யாராலும் தீர்க்க முடியவில்லை. ஆனால் ஒன்று. துன்பங்கள் ஏற்படும் போதுதான் மனிதனிடத்து உள்ளாக நிற்கும் இரக்க உணர்ச்சி எழுந்து நிற்கிறது. ஆண்களும் பெண்களும் மற்றவர்கள் துயரத்தைக் கண்டு தாங்களும் துயரமுற்று, மனிதசமுதாயம் முழுதும் ஒரு குடும்பம் என்ற உணர்ச்சி பெறுகின்றனர்.

இத்துயரைத் துடைப்பதற்குத் தமிழக மக்கள் தங்களாலான உதவியைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன். வீடிழந்து, உடைமை யிழந்து, உடை யிழந்து பரிதவிக்கும் மக்களுக்கு மீண்டும் தங்கள் வாழ்வை வகுத்துக் கொள்ள உதவுவார்கள் என்றும் மனித குலம் அனைத்தும் ஒன்று என்ற உயரிய எண்ணமும் ஆத்ம பலமும் பெறுவார்கள் என்றும் நம்புகிறேன்.”

தமிழ் விழா

இம்மாதம் 17, 18 தேதிகளில் காரைக்குடி அளகப்பா கல்லூரியில் ஏழாவது தமிழ் விழா நடத்த ஏற்பாடாகியிருந்தது. ஆனால் இயற்கை அவ்வளவையும் மாற்றி அமைக்கும்படி செய்து விட்டது. தமிழ் விழா வரவேற்புக் குழுவின் செயலாளரான திரு சா. கணேசன் அவர்கள் இது பற்றி எழுதியுள்ள 7-12-55-ந் தேதிக் கடிதத்தில் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்.

“காரைக்குடியும் சுற்று வட்டம் முழுவதும் அடை மழையாலும் கடும் புயலாலும் இது வரை அனுபவித்தறியாத அளவு பெருந் துயருற்று நிற்கிறது. ஒரு வாரமாக மின்சாரமில்லை. தண்ணீர்க் குழாய்கள் அடைபட்டுக் கிடக்கின்றன. போக்குவரத்துச் சீரழிந்து கிடக்கிறது. கல்லூரிகள், பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டு மாணக்கர்கள் யாவரும் தத்தம் இடங்களுக்குச் சென்று விட்டார்கள். மக்கள் படும்பாடு அளப்பரிது.”

இதைப் படித்து விட்டு நெஞ்சுருகாதார் யாரும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறோம்.

எதிர்பாராத விதமாகத் தடைபட்டு விட்ட தமிழ் விழாவைக் கூடிய விரைவில் நடத்தவே இருக்கிறார்கள். எல்லா வசதிகளும் ஏற்பட்டு, நிலை சீர்திருந்தியதும் தமிழ் விழா நடக்க விருக்கும் தேதிகள் அறிவிக்கப்படும்.

காஷ்மீர் பிரச்னை

“காஷ்மீர் இந்தியாவின் ஒரு பாகமேயாகும். காஷ்மீர் குடியரசு இந்தியாவைச் சேர்ந்த மாகாணங்களில் ஒன்று என்பதைக் காஷ்மீர் மக்களே முடிவு செய்து விட்டார்கள்.”

இவ்வாறு காஷ்மீருக்கு விஜயம் செய்த ருஷ்யத் தலைவர்கள் ஸ்ரீ புல்கானினும் ஸ்ரீ குருஷ்சேவும் கூறியது பாகிஸ்தானிலும் அமெரிக்காவிலும் மிகுந்த சலசலப்பை உண்டாக்கியிருக்கிறது. பூகோளம், பண்பாடு முதலிய எந்த வகையில் பார்த்தாலும் காஷ்மீர் இந்தியாவையே சேர வேண்டும் என்று ருஷ்யத் தலைவர்கள் பட்டவர்த்தனமாகக் குறிப்பிட்டிருக்-

கிறார்கள். எனினும், போர்ச்சுகலிலிருந்து மூவாயிரம் மைல் தூரத்தில் கடல்களுக்கு அப்பால் இருக்கும் கோவா போர்ச்சுகலின் மாகாணம் என்று வாய் கூசாமல் கூறத் துணிந்துள்ள அமெரிக்கா, இந்தியாவுக்கு அடுத்துள்ள காஷ்மீரை இந்தியாவுடன் எவ்விதத் தொடர்புமற்ற அன்னிய நாடாகவே கருதுகிறது. சொந்த விருப்பு வெறுப்பும் மாற்சரியமும் வல்லரசுகளின் கண்களை அவ்வளவு தூரம் மறைத்திருக்கின்றன. தென் கொரியாவில் படையெடுத்த வட கொரியா மீது ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டிய அமெரிக்காவும் பிற வல்லரசுகளும் அதே குற்றம் புரிந்த பாகிஸ்தான் விஷயத்தில் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, பாகிஸ்தானின் போக்கை மறைமுகமாக ஆதரித்தும் வருகின்றன. காஷ்மீர் விஷயத்தில் வல்லரசுகள் விருப்பு வெறுப்புமின்றி நேர்மையுடன் நடந்து கொண்டிருந்தால், காஷ்மீர் பிரச்னை இவ்வளவு தூரம் முற்றியிராது. எனவே, இந் நிலையில் மிகவும் வல்லமையும் செல்வாக்கும் உள்ள ருஷ்யத் தலைவர்கள் காஷ்மீரைப் பற்றித் தங்களுடைய மனத்தில் தோன்றிய கருத்தை ஒளிவுமறைவின்றிக் கூற முன் வந்ததை உலக நீதியில் அக்கறை கொண்ட சகலரும் கூர்ந்து கவனிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ ஆட்லியின் ராஜிநாமா

சென்ற வாரம் நிகழ்ந்த உலக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்களில் பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் ஸ்ரீ ஆட்லியின் ராஜிநாமாவும் ஒன்றாகும். தொழிற் கட்சித் தலைவர் பதவியை ஸ்ரீ ஆட்லி ராஜிநாமா செய்ததன் மூலம், அவர் தமக்கும் தமது கட்சிக்கும் மாத்திரமல்ல, பிரிட்டனுக்கே பெருமையைத் தேடிக் கொண்டுள்ளார். உலகில் ஜனநாயக முறையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சி எவ்விதம் இயங்க வேண்டும் என்பதற்கு ஸ்ரீ ஆட்லியின் அரசியல் வாழ்க்கை ஒரு சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் தொழிற் கட்சி உருக்குலையும் தறுவாயில் இருந்தபோது, அக் கட்சித் தலைமைப் பதவியை நடத்தும் பொறுப்பு ஸ்ரீ ஆட்லியின் தலையில் சுமந்தது.

பிரிட்டிஷ் சர்க்கார் பிரதம மந்திரி பதவியை வகித்த ஸ்ரீ ஆட்லியைப் பொதுவாக உலகமும், குறிப்பாகப் பாரத நாடும் மறக்கவே முடியாது. ஸ்ரீ ஆட்லியின் பதவி காலத்தில் தான் பாரத நாடு, பர்மா, இலங்கை முதலிய நாடுகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைந்தன. உலகிலேயே அவ்விதம் ஒரு புதிய சகாப்தம் ஏற்படும்படி செய்த பெருமையில் ஸ்ரீ ஆட்லிக்கு முக்கிய பங்கு உண்டு. பிரிட்டனுக்கு மாத்திரமல்ல, சர்வதேச ஜனநாயக சித்தாந்தத்துக்கே ஸ்ரீ ஆட்லி புரிந்துள்ள அரிய தொண்டுகளைப் பாராட்டி பிரிட்டிஷ் மகாராணி எலிஸபத் அவருக்கு 'பிரபு' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளார். தமது எழுபத்திரண்டாவது வயதில் அரசியலிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கும் ஸ்ரீ ஆட்லி நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்றே பாரத மக்கள் பிரார்த்திப்பார்கள்.

பதிற்றுப் பத்து விழா

"பதிற்றுப் பத்து" என்று சொன்னவுடனே 'இது என்ன சொல், பல் உடைகிறதே!' என்று சொல்லுபவர்கள் இன்று யாருமே இருக்க மாட்டார்கள். இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியவர்கள் 'தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக'த்தார் என்று சொன்னால் புகழ்ச்சியில்லை. நீண்ட காலமாகவே பல தமிழ்

அட்டைப்பட விளக்கம்

திருமணக் கோலம்!

"பொண்ணு வருது பொண்ணு வருது
பொட்டி வண்டியிலே!

மாப்பிள்ளை வருது மாப்பிள்ளை வருது
மாட்டு வண்டியிலே!"

என்ற கிராமப் பாடல் நமது நாட்டு நாடோடிப் பாடல்களின் களிப்பெல்லாம் பூரணமாக நிரம்பிய ஒரு திருமண வாழ்த்து.

கிராமச் சாலையிலே செல்லும் மாட்டு வண்டியில் நாட்டுப்புற மணமக்களை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார், இந்த இதழ் அட்டையில் ஓவியர் ராஜம்.

கண்ணனுகை யார் வருவாரோ ?



இலக்கிய நூல்களைப் பதிப்பித்து மிக மலிவான விலைக்கு விற்றுத் தமிழ்த் தொண்டு செய்து புகழ் பெற்றவர்கள்.

மறைய இருந்த பல சங்க நூல்களைத் தமிழ் மக்களுக்குத் தேடித் தந்த பெருமை காலஞ் சென்ற மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதய்யர் அவர்களைச் சாரும். அவர்கள் அளித்த அருமையான நூல்களில் ஒன்று "பதிற்றுப் பத்து".

சங்க காலத்துப் பத்து சேர மன்னர்களைப் பற்றிய நூல் இது. ஆனால் சாமிநாதய்யர் அவர்களுக்குக் கிடைத்துள்ள எட்டில் எட்டு அரசர்களைப் பற்றியே இருந்தன. அவைதான் இன்றும் வழங்கி வருகின்றன. கிடைத்துள்ள பதிற்றுப் பத்துச் செய்யுட்களுக்கு சொல்லுக்குச் சொல் பதவுரை, பொழிப்புரை, சரித்திர குறிப்புக்கள், விசேஷ உரைகள் ஆகிய பல விளக்கங்கள் எழுதியவர் திரு அவ்வை சு. துரைசாமி பிள்ளையவர்கள். அதைப் பிரசுரித்தவர்கள் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்தான்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை ராஜாஜி ஹாலில் டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார் அவர்கள் தலைமையில், கிடைத்துள்ள எட்டுப் பாடல்களையும் பற்றி எட்டுத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு விரிவுரை நிகழ்த்திப் பழம் சேர மன்னர்களைப் பற்றித் தமிழ்ப் பெரு மக்கள் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ள ஒரு அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

புலவர்கள் நிகழ்த்திய விரிவுரைகளைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டார்கள் இம் மகாநாட்டில்.

"தமிழில் எல்லாம் இருக்கிறது. ஆகவே இனி அதில் நமக்கு அதிகம் வேண்டியது ஒன்றுமில்லை என்று கருதுவது மொழியின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகும்" என்று எச்சரித்திருக்கிறார் மகாநாட்டைத் திறந்து வைத்த கல்வி மந்திரி அவர்கள்.

பதிற்றுப்பத்து, புறநானூறு போன்ற சங்க நூல்கள் நம் முன்னோர்கள் எவ்வளவு உயர்ந்த பண்பாட்டோடு வாழ்க்கை நடத்தினார்கள் என்பதை அறிவுறுத்துகின்றன. அதற்கு ஏற்ப வாழ்ந்து மேலும் மேலும் நமது மொழியை வளர்க்கப் பாடுபட வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

பேராசிரியர் கல்கி நினைவு நாள்



பேராசிரியர் கல்கியின் நினைவு நாளைத் தமிழ் மக்கள் சென்ற நாலாம் தேதியிலிருந்து தொடர்ந்து கொண்டாடி வருகிறார்கள்.

ஏழாம் தேதி தென் சென்னை வாலிபர் சங்கத்தின் சார்பில் மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் கல்கியின் நினைவு நாளைக் கொண்டாடினார்கள். இந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீமதி விஜயலட்சுமி தலைமை வகித்தார். திரு கல்கியின் நினைவு நாளை யொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மந்திரி கனம் பக்தவத்ஸலம் பரிசுகள் வழங்கி, கல்கி அவர்களைப் பற்றி அருமையான சொற்பொழிவு ஆற்றினார். அவருக்குப் பிறகு திருவாளர்கள் சிவஞான கிராமணியார், கி. வா. ஜகன்னாதன், கு. ராஜவேலு, எஸ். டி. சுந்தரம், சின்ன அண்ணாமலை, புத்தனேரி சுப்பிரமணியம், ஜி. உமாபதி, பகீரதன் ஆகியோர் பேசினார்கள்.

ஐந்தாம் தேதி நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கியும், பிரார்த்தனைகள் செய்தும் கல்கியின் நினைவு நாளைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

பத்தாம் தேதி பெரம்பூர் மாதர் சங்கத்தார் கல்கியின் நினைவு நாளைச் சிறப்பாக நடத்தினார்கள். "கல்கி" ஆசிரியர் திரு சோமு அவர்கள் திரு கல்கியின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். திருமதிகள் மேனகா ரகுபதி, சரோஜினி, பத்மா சுப்பிரமணியம், வசந்தா ராமமூர்த்தி, கமலா கிருஷ்ணன் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள். திருமதி ஆனந்தி பாரதியார் பாட்டுப் போட்டியில் பரிசு பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பதினோராம் தேதி மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் 'இலக்கியக் கழகத்தார்' கல்கியின் நினைவு நாளைக் கொண்டாடினார்கள். திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் தலைமை வகித்துச் சிறப்பித்தார். திருவாளர்கள் ஏ. ஜி. வெங்கடாச்சாரியார், சாண்டில்யன், சச்சிதானந்தம் பிள்ளை, நாரண துரைக்-

கண்ணன், கொத்தமங்கலம் சுப்பு, எஸ். டி. சுந்தரம், ஜீவானந்தம் முதலியோர் கல்கியின் சிறப்புக்களை எடுத்துக் கூறினர்கள்.

தமிழ் எழுத்தாளர் சங்கமும், தென் சென்னை வாலிபர் சங்கமும் கொண்டாடிய கல்கி நினைவு நாள் காட்சிகள் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

மேலே: தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கல்கி நினைவு நாள் விழாவில் ராஜாஜி, நாமக்கல் கவிஞர், சிவஞான கிராமணியார் முதலியோர் பேசினர்கள். ராஜா ஸர் முத்தையாச் செட்டியார், "கல்கி" ஆசிரியர் திரு சோமு, திரு எஸ். டி. சுந்தரம் ஆகியோர்கள் பேசுவதையும், விழாவில் திறந்துவைத்த கல்கியின் உருவச் சிலையையும், விழாவில் கலந்து கொண்ட தமிழ் அன்பர்களையும் காணலாம்.

கல்கியின் திரு உருவச் சிலையை எழுத்தாளர் சங்கத்துக்கு வழங்கிய திரு எஸ். டி. சுந்தரம் கல்கியின்மீது ஒரு பாமாலையை இயற்றியளித்து குறிப்பிட வேண்டும். அவர் பாடிய கவிகளில்,

இலக்கியமாம் பெருங்களத்தில்
இணையற்ற போர்வீரன்
பரணிபுகழ் பாடுமுன்பே
படைத்தலைவன் பறந்துவிட்டான்
வீணைவிட்டு எழுந்திருந்து
விண்சென்ற நாதத்தை
வேய்ங்குழலின் கீதத்தை
வானெல்லாம் தேடுகிறோம்.

என்ற வரிகள் இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

கீழே: தென் சென்னை வாலிபர் சங்கத்தில் மந்திரி கனம் பக்தவத்சலம் திரு கல்கியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்.

இலங்கைப் பிரதமரின் இரக்க சித்தம்

இலங்கையில் இருக்கும் இந்தியர்களில் பெரும்பாலோர் தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம் ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள். இந்த ஜில்லாக்களில் புயல் கொடுமையினாலும் பேய் மழையினாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வர்ணிக்க முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கும் உயிர் பொருள் சேதங்களுக்கும் உட்பட்டிருப்பது இலங்கை இந்தியர்களுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருக்கிறது. இந்தியாவிலிருக்கும் தங்கள் குடும்பங்களின் கதி என்னவாயிற்றோ என்று இவர்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்.

கஷ்டப்படும் குடும்பங்களுக்கு ஏதாவது பணமனுப்பியாவது உதவலாமென்றால் அதற்கு இலங்கையின் செலவாணிக் கட்டுப்பாடு சட்டம் அனுமதிப்பதாயில்லை. இமிகிரேஷன் சட்டத்தின்படி இந்தியாவுக்குப் போய்க் குடும்பங்களைப் பார்த்து விட்டாவது வரலாமென்றால் பெரும்பாலானவர்கள் அடியோடு பிழைப்பைக் கைவிட்டுப் போக வேண்டிய நிலைமையிலிருக்கிறார்களே தவிர, இலங்கைக்குத் திரும்பி வரக் கூடிய நிலைமையில் இல்லை. இருதலைக்கொள்ளி எறும்பைப் போன்ற நிலையில் தத்தளிக்கும் இலங்கை இந்தியப் பிரஜைகளுக்குப் பிரதம மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலை மனிதாபிமானத்துடன் சில வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார். இந்தியர் சம்பந்தமாக அவர் செய்யும் இதர காரியங்களைக் குறிப்பிடும் பொழுது அவர் செய்த ஒரு மேலான உபகாரத்தையும் நாம் இங்கு குறிப்பிட்டுப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கொழும்பிலுள்ள அன்பு மார்க்க சங்கத் தலைவர் அன்பர் பூபதி தாஸர் தலைமையில் ஸ்ரீ எஸ். ஆர். எம். வள்ளியப்பச் செட்டியார் முதலான பல பிரமுகர்கள் அடங்கிய ஒரு தூது கோஷ்டி உதவி மந்திரியைப் பேட்டி கண்டு தங்களுடைய சங்கடமான நிலைமையையும் தென்னிந்தியாவில் சூறாவளி செய்த கொடுமையையும் எடுத்துரைத்தார்கள். பிரதமர் மிகவும் அனுதாபத்தோடு கேட்டுவிட்டு இலங்கை இந்தியர்கள் ஒவ்வொருவரும் இந்தியாவில் கஷ்டப்படும் தங்கள் குடும்பங்களுக்கு அந்தக் குடும்பங்கள் இருக்கும் பகுதியின் கலெக்டர் மூலமாகத் தலா ரூ. 200 வரையில் அனுப்ப அனுமதி அளித்திருக்கிறார். இந்தத் தொகை இலங்கை மத்திய வங்கியின் மூலமாக இந்தியாவில் சம்பந்தப்பட்ட பகுதிகளின் கலெக்டர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் விலாசதாரர்களுக்கு அனுப்பப்படும். பந்துக்கள் மட்டுமில்லாமல் இதர நண்பர்களும் இலங்கையர்களும்கூட இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கஷ்டப்படுவோருக்கு நிவாரண உதவியளிக்கலாம். உதவியளிக்க விரும்புவோர் முழு விவரங்களையும் தெரிவித்து, தலைவர், அன்பு மார்க்கச் சங்கம், 224 லேயார்ட்ஸ் பிராட்வே, கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

அரிசி நன்கொடை

தென்னிந்தியாவில் வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்கு உதவுவதற்காக இலங்கையிடம் கடனாக அரிசி கேட்க வேண்டுமெனச் சென்னை சர்க்கார் இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருந்ததல்லவா! இச்செய்தி கிடைத்தவுடன் தென்னிந்தியாவுக்கு உடனே ஓராயிரம் டன் அரிசியை நன்கொடையாக அனுப்பிக் கொடுப்பதென்று இலங்கை தீர்மானித்திருக்கிறது. இந்த நன்கொடை அடுத்தவாரம் இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட ஜனங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.

இது ஒருபுறமிருக்க, தென்னிந்தியாவில் வீசிய அதே கோரப் புயல் வட இலங்கையிலும் வீசி யாழ்ப்பாணக் குடா நாட்டில் பெருவாரியான சேதத்தை விளைவித்திருக்கிறது. பயிர்த் தொழிலையே நம்பி வாழும் பல ஆயிரம் எளிய விவசாயிகள் பயிர்களை இழந்து தவிக்கிறார்கள். அநேகம் குடும்பங்கள் வீடுகளை இழந்து நிற்க இடமில்லாமல் தத்தளிக்கின்றனர். இவர்களுக்குக் கஷ்ட நிவாரணமளிப்பதற்காகப் பிரபல கொழும்பு தினசரிப் பத்திரிகையான "வீரகேசரி", பிரதம மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலையின் ஆயிரம் ரூபாய் நன்கொடையுடன் ஒரு நிவாரண நிதியை ஆரம்பித்திருக்கிறது. யாழ்ப்பாண மக்களின் துயரைத் துடைக்க ஜாதிமத வகுப்பு பேதமில்லாமல் எல்லோரும் தாராளமாக நன்கொடை வழங்கி வருகின்றனர்.

— ரஜனி

மூன்றாவது பரிசு

பழி



அவன் ஒரு ரிக்ஷாக்காரன். அவனைப் போல் நூற்றுக்கணக்கானவர் அந்த நகரில் ரிக்ஷா இழுத்துப் பிழைத்து வந்தனர். அவனுக்குப் பெயர் ஒன்றும் கிடையாது. அவனை எல்லோரும் "ஏ! ரிக்ஷா!" என்றே கூப்பிட்டு வந்தனர்.

ஒரு அழகான வாலிபன் நாகரிக உடையில் அவனுடைய ரிக்ஷாவில் ஓர் இளம் யுவதியுடன் உட்கார்ந்திருந்தான். அவர்கள் இருவரும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் நெருங்கி உட்கார்ந்திருப்பதை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த ரிக்ஷாக்காரன் ரிக்ஷாவைக் கடற்கரை ஓரமாக இழுத்துப் போய்க் கொண்டிருந்தான். வண்டியில் உட்கார்ந்திருந்த யுவன் ரிக்ஷாவை வலப்புறமாக எடுத்துக் கொண்டு போகச் சொன்னான்.

கடற்கரையின் மென்மையான காற்று, ரிக்ஷா வேகமாக இழுக்கப்பட்டுச் செல்லும் போது உண்டாகிற குறுகுறுப்பு, வலது பக்கத்திலுள்ள பாதி இருள், சந்திரனின் குளுமை இவைகளெல்லாம் அந்தத் தம்பதிகளுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தன போலும். அந்த ;ரிக்ஷாக்காரன் இவைகளை எல்லாம் உணராமல் கடந்த ஒரு மணி நேரமாக அவனுடைய ரிக்ஷாவை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்கு வண்டியில் உட்கார்ந்திருப்பவர்களைத் திருப்தி செய்வதற்காகவும், அதே சமயம் பாதையின் சட்டமிட்ட வரம்பிற்குள் இருக்கவும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய கூலியைப் பற்றிப் பேசவில்லை. இளம் தம்பதிகள் சாதாரணமாக இறங்கிப் போகும்போது திருப்திப்படும் வண்ணம் கொடுப்பார்களென்று அவனுக்குத் தெரியும்.

அவனுடைய எண்ணமெல்லாம் அவன் மனைவியைப் பற்றியும், அவனுடைய ஒரே குழந்தையைப் பற்றியும் சுழன்று' கொண்டிருந்தது. அந்த நினைவு அவனையும் அறியாமல் அவனை அந்த இளம் தம்பதிகளைப் பார்க்கச் செய்தது. அவனுடைய நினைவு மூன்று வருஷங்கள் பின்னோக்கிச் செல்ல அவன் முகத்தில் புன்னகை அரும்பியது.

மூன்று வருடங்களுக்கு முன் அவன் மரணப் படுக்கையில் இருக்கும் தன் தாயைப் பார்க்கச் சென்றபோது காத்தாயியை,—அவள் தான் அவன் மனைவி—சந்தித்தான். அவளும்

கல்கி திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி

இ. ரா. பா. சாரதி.

இவனுடைய பலம் பொருந்திய சரீரத்தைக் கண்டும் அவனுடைய நல்ல குணத்துக்காக வும் மணம் புரிந்து கொண்டான்.

திடீரென அவனுக்குத் தன் குடிசையைப் பத்து மணிக்கு முன் அடைய வேண்டு மென ஞாபகம் வந்தது. கடைக்காரன் கடையைப் பத்து மணிக்குள் மூடி விடு வான். அவன் மனைவி, அவனுடைய அன்றையக் கூலிக்குச் சாமான் வாங்கி வரு வதற்காக அவனை எதிர்பார்த்துக் கொண் டிருப்பாள். ரிக்ஷாவின் சொந்தக்காரர் கூட ரிக்ஷாவின் வாடகைக்காகக் காத்துக் கொண் டிருப்பார். அவனுக்கு அன்றையச் சாப்பாடு அந்த இளம் தம்பதிகளின் கையில் இருந்தது. அவர்கள் கொடுப்பதுதான் அவனுக்கு அன் றைய வரும்படி. இந்த எண்ணம் அவனை மறுபடியும் அவர்கள் பக்கம் திரும்பச்செய்தது. அதைக் கண்ட அவ் வாலிபன், "இந்தப் பக்கம் ஏனடா திரும்புகிறாய்! பேசாமல் வண்டியை இழுத்துக் கொண்டு போ!" என்று கோபத் துடன் கூறினான்.

சிறிது நேரங் கழித்து அந்த வண்டியை வாலிபன் நிறுத்தச் சொன்னான். வண்டியி லிருந்து இறங்கியவுடன் அவன் விரித்த கையில் எட்டணா நாணயத்தை விட்டெறிந்தான். ரிக்ஷாக்காரனின் முகம் மாறியது. இரண்டு மணி நேரம் இரண்டு பேரை வண்டியில் இழுத்ததற்கு எட்டணாக் கூலிதான் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. அதிலும் அந்த இரண்டு மணி நேரத்தில் அந்தத் தம்பதிகள் அடைந்த அந்த இன்பத்துக்கு எட்டணா மிகக் குறைவான கூலியாக அவனுக்குத் தென் பட்டது. மேலும் அவனுக்குக் குறைந்தது இரண்டு ரூபாயாவது வேண்டியிருந்தது. மெதுவாக அவன் தனக்கு வெகு குறைவாகக் கூலி கொடுக்கப்பட்டதெனக் கூற ஆரம்பித் தான். அந்த வாலிபனுக்கு அந்தப் பெண்ணின் முன் தான் பணத்தில் கருத்துடையவன் என்று ஒரு ரிக்ஷாக்காரனால் சுட்டிக் காட்டப்படு வதைப் பொறுக்க முடியவில்லை. அதனால் அவனை அடிக்கக் கையை ஓங்கினான். அதே சமயம் காற்று வாங்க அங்கே வந்து கொண் டிருந்த இரு தனவந்தர்கள் 'என்ன விஷயம்!' என்று விசாரித்தனர்.

விஷயத்தை அறிந்த அவர்களில் ஒருவர், "நான் இந்த நகரத்தில் முப்பது வருடங் களாக இருக்கிறேன். எட்டணாவுக்கு மேல் ரிக்ஷாவுக்குக் கூலி கொடுத்தது கிடை யாது" என்றார்.

மற்றவர், "இந்த ரிக்ஷாக்காரர்களே எப்பவும் இப்படித்தான். இளம் தம்பதிகளை





"ஏமாற்றுவது அவர்களுடைய வேலை" எனத் தமது அனுபவத்தைத் தெரிவித்தார். ரிக்ஷாக்காரனுக்கு அவனுடைய வாழ்நாள் முழுவதும் பிறர்தான் அவனுக்காக எல்லா விஷயத்திலும் தீர்மானிப்பது என்பது தெரியும். ஏழையாய் இருப்பதனால் உண்டாகும் ஒரு நிலை அது. ரிக்ஷாக்காரனால் மேலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏமாற்றத்தினால் அவன் திடீரெனச் சோர்ந்து போனதாக எண்ணினான். நாயர் கடையில் ஒரு கோப்பை "சாயா" குடிக்க அவன் ஆவல் அதிகமாயிற்று. அதே சமயம் காத்தாயியின் முகம் அவன் கண் முன்னே வர அவன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு தன் சேரியை நோக்கி வேகமாக ஓடினான்.

* * *

எதிர்பார்த்தபடி, காத்தாயியும், ரிக்ஷாவின் சொந்தக்காரனும் அவன் வருகைக்காக ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தனர். ரிக்ஷாவின் சொந்தக்காரருக்கு நாலரை ரூபாய் பாக்கி அவன் தரவேண்டும்.

காத்தாயி அவனைக் கண்டவுடன் "ஏன் இவ்வளவு நேரம்!" எனக் கேட்டுக் கொண்டே தன் கையை நீட்டினாள். அவன் கையில் அவன் தன்னிடமிருந்த எட்டணாவைக் கொடுத்து, "இதுதான் இன்றைய வரும்படி." என்றான். கடைக்குப் போகும் அவசரம் அவளுக்கு. அதனால்தான் கோபத்தை அடக்கிக் கொண்டு வேகமாகச் சென்று விட்டாள்.

உடனே அவன் ரிக்ஷாவின் சொந்தக்காரரிடம் தன்னுடைய நிலைமையை விளக்க ஆரம்பித்தான். அதே சமயம் ஆக்ரோஷத்துடன் திரும்பி வந்த காத்தாயி, "கடவுள் தான் உனக்குக் கூலி கொடுக்க வேண்டும். எவ்வளவு கெட்ட எண்ணமிருந்தால் இந்த மாதிரி ஒரு செல்லாத எட்டணாவை என்னிடம் கொடுத்து ஏமாற்றுவாய். அதுவும் உன்னுடைய ஒரே பெண் கண் விழியாமல் ஜுரமாய்ப் படுத்துக் கொண்டிருக்கும் போது, மருந்துதான் வாங்க முடியாது என்றால் கஞ்சி கூடக் கொடுக்க முடியாது போல் இருக்கிறதே" எனக் கத்திக் கண்ணீர் விட ஆரம்பித்தாள். நிலைமையைக் கண்ட ரிக்ஷாவின் சொந்தக்காரர் தம்மிடம் ஏதாவது பணம் கேட்கப் போகிறார்கள் என்று நழுவி விட்டார். ரிக்ஷாக்காரன் அந்த இடத்தில் மேலும் இருப்பதற்கு மனம் துணியாமல் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு சென்றான்.

இது அவன் முதல் தடவையாக இருக்கப் போகும் பட்டினி இரவு அல்ல.

இதே போல் கடந்த இரண்டு ஆண்டுகளில் அநேக தடவைகள் நேர்ந்திருக்கின்றன. ஆனால் இன்று அவனுடைய ஒரே பெண் குழந்தை ஜுரத் தாபத்தினால் வாடிக்கொண்டிருக்கிறது. இந்த எண்ணம் அவனைப் பைத்தியம் பிடித்தவன் போல் ஆக்கி விட்டது. ரிக்ஷாவை விட்டு விட்டு அதனுடைய மெத்தையைத் தலையணையாக உபயோகித்துப் படுக்க அப்புறப் படுத்தினான். அவனுடைய கண்களுக்குத் திடீரென்று பளபளப்பாக ஒருவஸ்து தென்பட்டது. எடுத்துப் பார்த்த போது அது ஒரு காதில் மாட்டும் பொன் அணியாக இருந்தது. அதை அன்று மாலை அவன் வண்டியில் சவாரி செய்த அந்தப் பெண்ணின் காதில் பார்த்த ஞாபகம் அவனுக்கு வந்தது. உடனுக்குடனேயே அவனுடைய மனத்தில் அந்த மாதிரி ஒரு கஞ்சனுக்கு இந்த மாதிரி ஒரு நஷ்டம் ஏற்பட்டதைப் பற்றித் திருப்தி ஏற்பட்டது. அதைத் தன்னுடைய வெற்றிலைப் பையில் அடக்கிக் கொண்டான். அவன் மனத்தில் எந்தவிதமான சலனமுமில்லை. அவன் நித்திரையில் ஆழ்ந்து போனான்.

* * *

மறுநாள் காலை காத்தாயி அவன் இருக்கும் இடத்தை நோக்கி ஓடி வந்தாள். குழந்தைக்கு ஜுரம் முற்றி விட்டது. பக்கத்துத் தெருவில் புதிதாக ஒரு இளம் டாக்டர் வந்திருப்பதாகவும், அவர் வெகு நல்லவர் என்றும் தெரிவித்து அவனை அவரிடம் போகச் சொன்னாள். அவனுக்கோ நல்ல பசி. அதே சமயம் அவனுக்குத் தன்னைப் போல் பசியால் வாடும் மனைவியின் மனத்தை வருத்தப்படுத்த இஷ்டப்படாமல் தன்னுடைய ரிக்ஷாவை எடுத்துக் கொண்டு அந்த டாக்டரின் தெருவை நோக்கி ஓடினான். திடீரென அவன் தன் வெற்றிலைப் பையைத் தொட்ட பொழுது புதிய பலம் உண்டாயிற்று. எப்படியிருந்தாலும் அன்று அவன் தன் மனைவியைத் திருப்திப்படுத்துவது என்று எண்ணியிருந்தான்.

டாக்டர் வீட்டை அடைந்த பொழுது அங்கு ஒரு பெரிய கூட்டம் காத்திருந்தது. அவன் தன் முறை வருவதற்காகக் காத்திருந்து டாக்டரின் அறையில் நுழைந்தான். அங்கே அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த டாக்டர் வேறு யாருமில்லை. அன்றைய முன் தினம் அவனுடைய வண்டியில் இரண்டு மணி நேரம் சவாரி செய்து விட்டு, செல்லாத எட்டணாவைக் கொடுத்துச் சென்ற அதே வாலிபன் தான்.

அவனையும் அறியாமல் அவன் தன்னுடைய வெற்றிலைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அதை அந்த டாக்டரும் பார்த்து விட்டார். அவனைக் கண்டதும் டாக்டர், "என்ன விஷயம்!" என்று கேட்டார். கேவலம் ஒரு ரிக்ஷாக்காரனை அவர் ஞாபகம் வைத்திருக்கவில்லை. டாக்டரிடம் தன் மகளின் நிலைமையைக் கூறி உடனே அவளை வந்து பார்க்க வேண்டுமென வேண்டிக் கொண்டான்.

டாக்டர், "பணம் கொண்டு வந்திருக்கிறாயா!" என்று கேட்டார். அவன் தன் நிலையை விளக்கிக் கூறி மீண்டும் வேண்டிக் கொண்டான். அதேசமயம் அவனுக்கு அந்தப் பொன் காதணியின் ஞாபகம் வர அவன் அதைத் தான் கண்ட விதத்தைப் பற்றிக் கூறினான். அதைக் கண்டவுடன் அந்த டாக்டரின் முகம் மலர்ந்தது. வேறொன்றும் பேசாமல் அவர் அதைத் தன்னுடைய பைக்குள் போட்டுக் கொண்டார். உடனே அவர் அந்த ரிக்ஷாக்காரனை அவன் பணம் கொண்டு வராததினால் வேறொரு டாக்டரிடம் போகும்படி கூறிவிட்டார். ரிக்ஷாக்காரனின் மனம் கொதித்தது.

அவன் அழமாட்டாக் குறையாக, "சாமி! நீங்கள்தான் இந்த ஏழையின்மீது தயை கொள்ள வேண்டும்" என்றான். டாக்டர் அதற்கு "எனக்குத் தருமத்துக்கு நேரமில்லை" என வெகுண்டு கூறினார்.

ரிக்ஷாக்காரனுக்கு ஒரு தடவையாவது தன் எண்ணத்தைக் கூற வேண்டும் எனத் தோன்றிற்று. தான் இரண்டு தடவை வஞ்சிக்கப்பட்டதைப் பற்றி, அவன் கோபமடைந்தான். உடனே, "சாமி நேற்றிரவு செல்லாத காசைக் கொடுத்து என்னை ஏமாற்றினீர்கள். அதனால் தான், என் மனைவி, என் குழந்தை எல்லோரும் பட்டினி கிடக்க நேரிட்டது. இன்று காணாமல் போன உங்களுடைய ஒரு பொன் அணியை நேர்மையுடன் திருப்பிக் கொண்டு கொடுத்தேன். அப்படியிருந்தும் நீங்கள் எனக்கு உதவிசெய்ய முன் வரவில்லை. அதை நினைத்துப் பார்த்து உதவி செய்யுங்கள்" என்றான்.


டாக்டரின் அழகான முகம் கோபத்தினால் வெந்தது. "என்ன சொன்னாய்! நீ கொடுத்திராவிட்டால் உன்னைப் போலீசில் பிடித்துக் கொடுத்து உன்னை அடி அடியென அடித்திருப்பேன். அப்பொழுது நீயும் அதைக் கக்கியிருப்பாய்" எனச் சொல்லித் தன்னுடைய வேலைக்காரனைக் கூப்பிட்டு வெளியே தள்ளச் சொன்னார். வழக்கப் பிரகாரம் ரிக்ஷாக்காரன் பிறருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது.

ரிக்ஷாக்காரன் மெதுவாகத் தன் குடிசையை நோக்கிச் சென்றான். அங்கு அவனுடைய காத்தாயி பசியாலும், ஜுரத்தினாலும் வாடும் தன்னுடைய குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். தனியே திரும்பின தன் கணவனைக் கண்டவுடன் அவளுக்கு விஷயம் ஒருவாறு புரிந்து விட்டது.

அவள், அவனை நகராட்சி வைத்திய சாலையிலிருந்தாவது மருந்து வாங்கிவர அனுப்பினாள். "போகும் போது வண்டியை ஓட்டிக் கொண்டு போய் ஏதாவது கிராக்கி கிடைத்தால் வரும் போது மருந்துடன் சிறிது ரொட்டியும் வாங்கி வா" என்று கூறினாள். ரிக்ஷாக்காரன் அவள் சொன்னதை ஏற்றுக் கொண்டு வண்டியை இழுத்துக் கொண்டு சென்றான்.

அவன் தன் கஷ்டத்தை எண்ணியவனாய்ப் போய்க் கொண்டிருக்கும்போது "ஏ, ரிக்ஷா!" என்று யாரோ கூப்பிடுவது அவன் காதில் விழுந்தது. வண்டியை நிறுத்தினான். வண்டியைக் கூப்பிட்டவர் ஏறினவுடன் அவர் யார் என்று கூடப் பார்க்காமல் வண்டியை இழுக்கத் தலைப்பட்டான். அவரும் அவனை வேகமாகப் போகச் சொன்னார். இவனும் அவரை எங்கு போகிறீரென்று கேட்கவில்லை.

எல்லாம் ஒரு வினாடியில் நடந்து விட்டது. ரிக்ஷாக்காரன் தான் நகராட்சி வைத்தியசாலை வரைதான் இழுத்து வர முடியும் என்று சொல்லித் தன் தலையைப் பின்பக்கம் திருப்பினான். அதே சமயம் தன் வண்டியில் உட்கார்ந்திருப்பவர் அந்த வாலிப டாக்டரைத் தவிர வேறு யாருமில்லை எனக் கண்டவுடன் அவன் இருதயத்தில் கத்தியைச் செருகுவது போல் [illegible] இருந்தது. அவனுக்கு இந்த டாக்டர் மறுபடியும் தன்னுடைய மகனின் க்ஷேமத்தில் குறுக்கிடுவதாகத் தோன்றியது. அதே சமயத்தில் அவன் மகன் அந்தச் செல்லாத எட்



டனுக் காசினுல் முதல் நாள் இரவு பட்டினி இருக்க நேரிட்டது என்ற நினைவு அவன் தலையை யாரோ சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. அவன் கை வெலவெலத்தது. அடுத்த கணம் வண்டி குடை சாய்ந்தது.

ஒரு போலீஸ்காரர் எங்கிருந்தோ ஓடி வந்தார். ரிக்ஷாவைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. வந்த போலீஸ்காரர் வாட்டசாட்டத்துக்குப் பேர்போன அந்த ஊர் போலீஸ் படையைச் சேர்ந்தவர். அவர் ரிக்ஷாக்காரனைத் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி, "குடித்திருக்கிறாயா!" என்று அவன் முகத்தருகே கத்தினுர். ரிக்ஷாக்காரனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. இதற்கு நடுவில் கூட்டத்திலிருந்த ஒருவர் "ஐயோ, பாவம்! இந்த ரிக்ஷாக்காரன் தன்னுடைய அஜாக்கிரதையினுல் இந்த வாலிபனைக் கொன்று விட்டிருப்பானே. இந்த வாலிபன் புண்ணியத்தைச் செய்திருக்க வேண்டும். அவனுடைய பூஜாபலன்தான் அவனைக் காப்பாற்றியது. இந்தமாதிரிக் குடிகார ரிக்ஷா இழுப்பவர்களை நன்ருக உதைக்க வேண்டும்" என்ருர். கூட்டத்திலிருந்து எங்கிருந்தோ "உதை கொடு. கக்கி விடுவான்" என்று ஒரு குரல் கேட்டது. அந்தப் போலீஸ்காரருக்குத் திடீரென்று தான் மக்களின் சேவகர் என ஞாபகம் வந்தது. அதனுல் உடனே எங்கிருந்தோ வந்த அந்தக் குரலுக்குச் சந்தோஷத்துடன் மரியாதை செய்தார். கீழேயிருந்த டாக்டர் கூட்டத்தை நோக்கிச் சொன்னுர்: "இந்த மனிதன் என்னிடம் தன் குழந்தை வெகு நோயாகப் படுத்துக் கொண்டிருப்பதாகக் கூறினுன். நான் 'இதர நோயாளிகளைக் கவனித்து விட்டு வருகிறேன்' என்றேன். அவனுக்கு நான் வர மறுத்து விட்டதாக என்மேல் கோபம். ஒரு டாக்டரின் கடமை என்ற எண்ணத்தினுல் உந்தப்பட்டு நான் சிறிது நேரங்கழித்து அவன் வண்டியிலேயே ஏறி அவன் குழந்தைக்காக ஒரு விசேஷ மருந்து வாங்கப் போய்க் கொண்டிருக்கும்போது அவன் என் எண்ணத்தை அறியாமல் தன் ஆத்திரத்தினுல் தன் வஞ்சத்தை இம்மாதிரித் தீர்த்துக் கொண்டான்" எனத் தம்முடைய சேவை மனப்பான்மையைத் தெரிவித்தார்!

கூட்டம் அவருடைய வார்த்தையை உண்மை என்று நம்பிற்று. ஏன் ரிக்ஷாக்காரன் கூட அது உண்மையாக இருக்குமென நம்பத் தொடங்கித் தன்னையே வெறுக்க ஆரம்பித்தான். கூட்டத்தில் யாரோ ஒருவர் "தன் வினை தன்னைச் சுடும்" என்ருர். போலீஸ்காரர் ரிக்ஷாக்காரனைப் போலீஸ் தாணுவுக்கு அழைத்துச் சென்ருர். மற்றொரு ரிக்ஷாக்காரன் காத்தாயிக்கு விஷயத்தை எடுத்துச் சென்ருன்.

* * *

நீதி ஸ்தலத்தில் கூட்டமில்லை. ரிக்ஷாக்காரனுக்காக வாதாட வக்கீல் இல்லை. விசாரணைக்கான குற்றம் "வேண்டுமென்று காயம் ஏற்படுத்தியது" என்பது. போலீஸ் தரப்பில் நான்கு சாட்சிகள். குற்றவாளியின் தரப்பில் சாட்சியில்லை. மேன்மை பொருந்திய கனம் கோர்ட்டார் முதலில் டாக்டரின் சாட்சியத்தைக் கேட்டார். டாக்டரின் ஏழு வருட பல்

கலைக் கழகப் படிப்பு, நல்ல பிறப்பு இவைகள் டாக்டரின் சாட்சியத்தை உண்மையென நீதிபதிக்குப் புலப்படுத்தியது.

அடுத்த சாட்சியான போலீஸ்காரர் சட்டத்தின் காவலாளர். அவருக்குத் தெரியும் சட்டத்தை மீறுபவர்களின் நிலை. சட்டத்தை மீறினவனைக் கண்டு பிடித்த அவருடைய சாட்சியத்தில் கோர்ட்டாருக்குச் சந்தேகம் இல்லை. மூன்றாவது சாட்சி கடவுள் பக்தராகத் தோன்றிய ஒருவர். அவரைக் கண்டவுடன் கனம் நீதிபதிக்கு அவருடைய நியாய மனப்பான்மையில் அதிக நம்பிக்கை தோன்றியது. அவர் தம் சாட்சியத்தில் தாம் முன்னால் கூட்டத்தில் சொன்னபடி 'தன் வினை தன்னைச் சுடும், கெடுவான் கேடு நினைப்பான்' என்பதை விளக்கிக் கூறி எப்படிக் குற்றவாளி தண்டனைக்குட்பட வேண்டும் எனக் கூறினார். நாலாவது சாட்சியாகக் காத்தாயியே விசாரிக்கப்பட்டாள். போலீஸ் தரப்பில், எப்படிக் குற்றவாளி அவளெதிரில் அந்த டாக்டர் மீது வஞ்சம் தீர்க்கப் போவதாகச் சபதம் செய்தான் என அவள் பிரமாணத்தின் கீழ் சொல்ல வேண்டும் என வாதிக்கப்பட்டது. அவள் சாட்சியம் செல்லுமா, செல்லாதா என்பது கோர்ட்டாரைப் பொறுத்தது.

காத்தாயி கூண்டில் நின்றாள். ரிக்ஷாக்காரன் போலீஸ் லாக்கப்பில் இருந்த இந்த நாட்களில் அவனுடைய மகள் இறந்து விட்டாள். அவள் துக்கத்திலும், பட்டினி நாட்களிலும் அவன் தன் கணவன் குழந்தையின் நோயைக்கூடக் கவனியாமல் டாக்டரின் மீது தன் வஞ்சத்தைத் தீர்க்க முற்பட்டான் என்று நம்பியிருந்தாள். அவள் கண்களில், அவன் என்ன வேண்டுமானாலும் செய்திருப்பான் எனத் தோன்றிற்று. அவள் மனத்தில் அநுதாபம் என்பதே மறைந்து போயிருந்தது. அவள் போலீஸ் தரப்பில் கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் கச்சிதமாகப் பதில் கூறினாள். அத்துடன் போலீஸ் தரப்பில் திருப்திகரமாகச் சாட்சியங்களின் விசாரணை முடிக்கப்பட்டது.

மேன்மை பொருந்திய நீதிபதி குற்றவாளிக்கு அவன் தரப்பில் பேச அனுமதி யளித்தார். ரிக்ஷாக்காரன் சொன்னான்: "என்னுடைய வாழ்நாட்களில் எனக்காக எல்லோரும் தீர்மானித்தார்கள்! முன்னால் விசாரித்த மூன்று சாட்சியங்களும் என்னைவிட மேம்பட்டவர்கள். என்னை அறிந்த என் மனைவியும் என்னைக் குற்றவாளி எனக் கூறினாள். அவர்கள் எல்லோரையும் விட எனக்கு ஒன்றும் தெரிந்திருக்க முடியாது. அதனால் நான் குற்றவாளி தான் என நானும் நம்புகிறேன்" என்றான்.

மேன்மை தங்கிய நீதிபதி அவர்களும், மற்றவர்களும் இந்தப் புகழ்ச்சியான வார்த்தைகளினால் சந்தோஷமடைந்தனர். நீதிபதி தான் முன்னாலேயே நிச்சயம் செய்து விட்டாரே! அவர் வாயிலிருந்து, "இரண்டு வருடக் கடுங்காவல்" என்று தீர்ப்பு வெளி வந்தது.

நீதி ஸ்தலம் கலைந்தது. காத்தாயி ரிக்ஷாக்காரனை மௌனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ரிக்ஷாக்காரனைப் போலீஸ்காரர்கள் வெளியேற்றிய பொழுது, தான் இரண்டு வருஷம் கிராமத்தில் அவனுக்காகக் காத்திருப்பதாகக் கூறினாள். இருவரின் மனத்திலும் சலனமுமில்லை. வெறுப்புமில்லை!

துளசி மணம்

“கல்கி”யில் பாலர் பகுதியை இவ்வாரம் ராஜாஜி அவர்கள் “துளசி மணம்” என்ற கதையுடன் ஆரம்பித்திருக்கிறார்.

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கு வெகு அழகான கதைகள் பலபேர் எழுதியிருக்கிறார்கள். நீதிக் கதைகள்தான். ஆனால் நீதி உள்ளே பதுங்கி யிருப்பது தெரியாமலே குழந்தைகளின் மனத்தில் ஏறிவிடும். மேனாட்டில் 'Holy Bible' லில் இயேசுநாதர் சொல்லிய பல உவமைக் கதைகள் உள்ளன. உயர்ந்த கருத்து மறைந்துள்ள கதைகள். அதேமாதிரி நம் குழந்தைகளுக்கும் யாராவது கதைகள் எழுத வேண்டும் என்று பலர் ஆசைப்பட்டது உண்டு. அந்த ஆசை நிறைவேறி விட்டது.

முதல் கதை 'துளசி மணம்' தலைப்பே என்ன அழகா யிருக்கிறது! துளசி யென்றால் குழந்தைகளுக்கு வீட்டில் அம்மா துளசி மடத்துக்குத் தண்ணீர் விட்டு விளக்கேற்றி, சுற்றி வருவது ஞாபகம் வரலாம். கோவிலுக்குச் சென்று பிரசாதம் என்று அதை வாங்கிச் சாப்பிடுவதும் நினைவு வரலாம். அதற்கு மணம் ஏற்பட்டதற்குக் காரணம் வேண்டாமா! அதைத்தான் ராஜாஜி எடுத்துச் சொல்லுகிறார்.

கதை ஒரே பக்கம். ஆனால் பல கருத்துக்கள்! செடிகள், மிருகங்கள் பேசுவது என்றாலே குழந்தைகள் ரஸிப்பார்கள். ஆகையால் ரோஜாச் செடியும் துளசிச் செடியும் பேசிக் கொள்வதாகச் சிறு கதை ஆரம்பமாகிறது.

பள்ளிக்கூடங்களில் பணக்கார வீட்டுக் குழந்தையும் ஏழைக் குடும்பக் குழந்தையும் சேர்ந்து வாசிப்பார்கள். பணக்கார வீட்டுக் குழந்தை ஒரு நாளுக்கு ஒரு பேனா, பென்சில், புத்தகம் என்று எடுத்துக் கொண்டு ஜம்பமாக வரும். அதேபோல் மற்றக் குழந்தை கொண்டு வர முடியாததைப் பார்த்து ஏளனமாய் 'ஏன் உனக்கு இல்லை, இதோ என்னைப் பார்!' என்று பரிகசித்துப் பேசும். ஏழைக் குழந்தை வயதில் சிறிதானாலும் நிலைமையின் காரணத்தால் வீட்டுக் கஷ்டங்களை ஒருவாறு புரிந்து கொண்டு திருப்தியுடன் இருந்து விட்டு, பணக்காரக் குழந்தை சொன்னதைக் கவனிக்காமல் படிப்பிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து விடும். கடைசியில் பரீட்சை சமயத்தில் எந்தக் குழந்தை முதலாவதாகத் தேறியது என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

இந்த சம்பவம் 'துளசி மணம்' என்னும் கதையைப் படிக்கும்பொழுது நம் பெரியவர்களுக்குத் தோன்றுகிறது அல்லவா!

'ரோஜாச் செடி'யின் சம்பாஷணையை வாசித்து, குழந்தைகளுக்கு வெளிப் பகட்டை விடத் தன்னடக்கமே மேல் என்று தன்னறியாமலேயே தோன்றலா மல்லவா!

அடுத்தபடியாக எப்பொழுதும் சுகத்தையே அனுபவித்துக் கொண்டு பிறர் கஷ்டங்களை அறியாதவர்களை எடுத்துக் காட்டுவது போல அரசன் 'ரோஜா மாலைகளையே பார்த்தவன்'— 'முள் இருப்பதே தெரியாதவன்' எல்லாவற்றையும் பிடுங்கி எறியச் சொன்னதைப் படிக்கும் பொழுது நம் பெரியவர்களுக்கே பாடம் கற்பிப்பது போலல்லவா தோன்றுகிறது! அதில்தான் எத்தகைய புத்திமதி அடங்கியிருக்கிறது!

கடைசியாகத் தன்னைப் பரிகசித்த செடியின் கதியைப் பார்த்துத் தூய்மையான துளசி சந்தோஷப் படாமல் மிகவும் வருத்தப் பட்டது. அத்தகைய உயர்ந்த மனப்பான்மையைக் காட்டும் அவ் வருத்தம் துளசிக்குத் தனி சோபையை அளித்தது எப்படி! முன்பு இருந்த வாசனையை விடப் பன்மடங்கு ஜாஸ்தியாகி விட்டது. கடவுள் அப்படிக் கொடுத்தார் என்று வைத்துக் கொள்வோம்.

ஆகையால் சாதாரணமாகப் பிறர்—அதுவும் நம்மையே ஏசியவர்கள் – இடறி விழுவதைப் பார்த்துச் சந்தோஷப் படுவதைக் காட்டிலும் அவர்கள் அறியாமையைக்கண்டு மனம் கசிவது தான் தூய்மை என்பது அழகாய்த் தெரிகிறது!

'அணிலுக்கு முதுகில் ஏன் கோடுகள் இருக்கின்றன!' என்று கேட்டு அதற்குக் குழந்தைகளுக்கு ஏற்ற ஒரு கதை யுண்டு.

ராமாயணத்தில் ஸ்ரீராமர் லங்கைக்குச் செல்லுவதற்கு ஸேது பந்தனம் கட்டும் பொழுது அணில்கள் கூட்டம் கூட்டமாக பகவானுக்குத் தன்னால் ஆன சிறிய உதவியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்தனவாம். வந்து மணலில் புரண்டு புரண்டு பிறகு போய் நன்றாய் உதறிக் கொண்டு மணலை அவருக்குச் சேர்த்தனவாம்! இதைக் கண்டு சந்தோஷித்த ஸ்ரீராமர் அச்சிறிய பிராணிகளின் முதுகின் மேல் ஆசையாகத் தடவிக் கொடுத்தாராம். அவர் விரல்களின் ரேகைதான் அவைகள் என்பது கதை—

அதேபோல இனிமேல் நாமெல்லோருக்கும் துளசிக்கு மணம் ஏன் அதிகம் என்று தெரியும் அல்லவா!

அத்தகைய மணம் பெற்ற துளசியானபடியால்தானே ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு சத்தியபாமாவின் கர்வத்தை அடக்க உதவி செய்தது!

ஒரு சமயம் நாரத முனிவர் பாமாவை ஸ்ரீ கிருஷ்ண பகவான் எடைக்குப் பொன் வேண்டுமென்று கேட்டாராம். ஆகையால் பாமா ஒரு தராசில் பகவானையும் மற்றொரு தராசில் தன் செல்வம் அனைத்தையும் வைத்தாளாம். எவ்வளவு செல்வம் வைத்தும் ஈடு செய்ய முடியாமல் தவித்தாளாம். அப்பொழுது பகவான் ருக்மணி தேவியைக் கூப்பிட்டு எடை போடச் சொன்னாராம். ஸ்ரீ ருக்மிணி தேவி மிகவும் பக்தியுடன் வந்து அவரை வலம் வந்து தராசுத் தட்டிலிருந்த செல்வத்துக்குப் பதில் ஒரு துளசி தளத்தை வைத்தாளாம். உடனே என்ன ஆச்சரியம்! பகவான் இடை குறைந்து துளசிதளம் இருந்ததட்டு கீழே இறங்கியதாம்! அத்தகைய துளசியல்லவோ அது!

இப்பகுதி பாலருக்கு மட்டுமன்றி, பெரியவர் சிந்தனைக்கும் நிறைய இடம் கொடுக்கிறது. என்றும் பொக்கிஷமாக வைத்துக் கொள்ள வேண்டிய தொடர் ஆரம்பமானதைக் கண்டு மகிழ்கிறோம். இன்னும் இதேபோல அநேக கதைகளை நமக்கும், நம் குழந்தைகளுக்கும் கொடுக்கக் கடவுள் ராஜாஜி அவர்களுக்குத் திட ஆரோக்கியமும், ஆயுளும் அளிக்க இறைவனை நாம் பிரார்த்தனை செய்வோமாக!

லாயிட் ரோடு
சென்னை
11—12—55

சுந்தரம்
(ஸ்ரீமதி ஏ. வி. ராமன்)





பொங்கல் வெளியீடு
பாரகன் பிக்சர்ஸ்
நான் பெற்ற செல்வம்
டைரக்ஷன்..
கதை, வசனம்..
இசை..
ஸ்டுடியோ..
K.சோமு * A.P.நாகராஜன் * G.ராமநாதன் * சென்ட்ரல் கோவை
உலக உரிமையாளர்...டைமண்ட் பிலிம்ஸ், 15. மக்கிக்கல்ஸ் ரோடு, சென்னை-10

புனர் வசுவா? ரோஹிணியா?

சோமு

“ராஜாஜியின் பிறந்த தினம் டிஸம்பர் எட்டாந் தேதி என்று சொல்கிறார்களே, இது சரியா?”

“ராஜாஜியின் ஜன்ம நட்சத்திரம் ரோஹிணி என்கிறார்களே, அவருடைய நட்சத்திரம் ஸ்ரீராமருடைய நட்சத்திரம் என்றும் சொல்கிறார்களே, ராமர் நட்சத்திரம் புனர்வசு ஆயிற்றே, எது சரி?”

இவ்வாறெல்லாம் சென்ற இரண்டு வாரங்களாகப் பல கேள்விகள் கேட்டு நமது காரியாலயத்துக்குக் ‘கல்கி’ அன்பர்களிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. டிஸம்பர் எட்டாந் தேதி தான் ராஜாஜி பிறந்த தினம் என்று யாரோ சொல்லிப் பலரும் குறித்துக் கொண்டிருப்பதாக இந்தக் கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது.

சென்ற வியாழக் கிழமையன்று வழக்கம் போல் நான் ராஜாஜி வீட்டுக்குப் போயிருந்த போது வழக்கத்துக்குப் புதுமையாக அவர்களுடைய அறையில் ஒரு காட்சியைப் பார்த்தேன். எப்பொழுதுமே ராஜாஜி பிரம்பினால் பின்னப்பட்ட ஒரு சாய்வு நாற்காலியில் இருந்து கொண்டு, அதன் கைப் பிடியின் மேல் காகிதக் கட்டை வைத்து எழுதிக் கொண்டிருப்பார்கள். கடிதங்களுக்குப் பதில், பாரத மக்களுக்கு அறவுரைகள், உலகத்துக்கு அறிக்கைகள், பாரத நாட்டுக்கான திட்டங்கள், வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகன், பாலர்களுக்கான உருவகக் கதைகள்,—எல்லாம் அந்தச் சாய்வு நாற்காலியின் கைப் பிடிக்கு மேலே உண்டாகும் சிருஷ்டிகள்தான்! இந்த மாதிரி மேஜை இல்லாமல் எழுதுவது எப்படி முடியும் என்று என்னைக் கேட்காதீர்கள். ராஜாஜிக்கு அது தினப்படியான பழக்கம்! இதைத் தினமும் பார்த்து அதிசயப்படுகிற நான், அன்றைக்குச் சாய்வு நாற்காலியில் இருந்த ராஜாஜி ஒன்றுமே செய்யாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்ததைக் கண்டு சுற்று முற்றும் பார்த்தேன்! பழக் கூடைகளும் ரோஜாப் பூ மாலைகளுமாக அறையில் நிறைந்து கிடந்தன!

“இன்றைக்கு என்னுடைய பிறந்த நாள் என்று எல்லாரும் சொல்கிறார்கள். இல்லை, இன்று என்னுடைய பிறந்த நாள் இல்லை, என்று சொன்னால், பிடிவாதமாக நம்ப மாட்டோம் என்கிறார்கள். இதெல்லாம் அந்தப் பிடிவாதத்தினால் உண்டானவை!” என்று ராஜாஜி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தபால் மூட்டையும் வந்து சேர்ந்தது! நண்பர்களிடமிருந்து வந்த வாழ்த்துக் கடிதங்கள்!

உலகின் பல பகுதிகளில் இருந்தும் வந்த அத்தனை கடிதங்களுக்கும் தனித் தனியாகப் பதில் எழுதுவது கஷ்டம் அல்லவா? இதைப் பற்றி ராஜாஜி தினப் பத்திரிகைகளிலே கொடுத்துள்ள அறிக்கையை நேயர்கள் படித்திருக்கக் கூடும். இது சம்பந்தமாக ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வேதாந்த தேசிகர் என்னும் தூப்பல் வேங்கடநாதரை ‘ஸர்வ தந்திர சுதந்திரர்’ என்று எல்லாரும் அழைப்பதுண்டு. பண்டிதராக இருந்தாலும் எல்லாத் தொழில்களையும் தாமே செய்யத் தெரிந்தவர் அவர். நமக்குத் தெரிந்தவரை இந்தக் காலத்தில் இந்த அடைமொழிக்கு ஏற்ற ஒருவர் ராஜாஜி. பென்சில் சீவுவது, படுக்கையோ மூட்டையோ கட்டுவது, ஊசியில் நூலைக் கோத்துக் கிழிந்து போன துணியைத் தைப்பது, கை விதானத்திலேயே கடிதக் கவரைத் தூக்கிப் பார்த்து அதற்கு இத்தனை அணா ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் என்று நிர்ணயித்து ஒட்டுவது—இப்படி எத்தனையோ காரியங்கள், பிறருக்கு வேலை கொடுக்காமல் தாமே தமது கையால் செய்து கொள்வார் ராஜாஜி! ஆயினும் அப்படிப்பட்டவர், பிறந்த தினக் கடிதங்களுக்கு மொத்தமாகப் பத்திரிகையில் பதில் அளித்துவிட்டார். இது அவருடைய தேக நிலையை ஒருவாறு காட்டுகிறது.

* * *

ராஜாஜி பிறந்தது பகுதான்ய வருஷம். ஆங்கிலக் கணக்குப்படி 1879ம் ஆண்டு. இந்த விவரம் தமிழ் நாட்டுக்கு முதன் முதல் எப்படித் தெரிய வந்தது என்றால், 1938 ஏப்ரல் மாதம் பதின்மூன்றாந் தேதி பகுதான்ய வருஷப் பிறப்பு வந்ததல்லவா? அன்று சென்னையில் ஒரு விழாவுக்கு ராஜாஜி தலைமை தாங்கினார். விழா ‘ஆனந்த விகடன்’ காரியாலயத்தில் நடந்தது. அந்த ஆண்டில் ஆனந்தவிகடன் நடத்திய இலக்கியப் போட்டியில் தங்கப் பதக்கம் பரிசு பெற்றவர்களுக்கு மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தமது கையினால் பதக்கத்தை வழங்கினார். ராஜாஜி அப்பொழுது சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரி. அவர் விழாவுக்குத் தலைமை வகித்தார். பரிசு பெற்றவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் விழாவுக்குச்



தகைமையொளி வீசும் பாரத ரத்தினங்கள்! சமீபத்தில் ராஜாஜி தில்லி சென்றிருந்தபோது, நேருஜியை அன்போடு கொஞ்சி மகிழ்கிறார்.

சென்றிருந்தேன். ராஜாஜி தமது தலைமை உரையை ஆரம்பித்தார்:

“இன்று பகுதான்ய வருஷத்தின் ஆரம்ப நாள். இதை நினைக்கும்போது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இதே பகுதான்ய வருஷத்திலேதான் நான் பிறந்தேன் என்ற விஷயத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்!”

இப்படி அவர் சொன்னதும் அங்கே கூடியிருந்த ஜனங்களின் ஆரவாரத்தைச் சொல்லி முடியாது. தினப் பத்திரிகைகள் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் தலைப்புப் போட்டு இந்தச் செய்தியைப் பிரசுரம் செய்தன!

ராஜாஜி பிறந்தது பகுதான்ய வருஷம் என்று தெரிந்து விட்டது. பிறந்த மாதம் எது? தேதி எது?—என்ற சர்ச்சை மறுநாளிலிருந்து எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது. நண்பர்களும், தொண்டர்களும் அன்றிலிருந்து ஆராய ஆரம்பித்தார்கள். இன்றைக்கும் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். காரணம், ராஜாஜிக்குமே தெரியாது, தாம் பிறந்தது எந்தத் தேதியில் என்று!

ஜாதகங்களைப் பெரிதும் கவனிக்கும் நமது தமிழ் நாட்டில், ராஜாஜியின் ஜாதகம் எப்படியோ காணாமற் போய் விட்டது என்பதை ராஜாஜியே தமது பத்திரிகைச் செய்தியில் வெளியிட்டிருக்கிறார். இத்தனை நாளும் தமது நண்பர்களிடமும் இதைச் சொல்லி வந்திருக்கிறார். ஆனாலும் நண்பர்களில் சிலர் ஆராய்ச்சியை அப்படியே விட்டு விடவில்லை. எங்கெங்கோ யார் யாரிடமோ ஜாதகத்தைத் தேடிப் பார்த்து ஏதோ ஒரு வகையில் நிச்சயம் செய்து, டிஸம்பர் எட்டாந்தேதிதான் ராஜாஜியின் ஜனன தினம் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

ராஜாஜியின் ஜன்ம நட்சத்திரம் புனர்வசு என்றும், பிறந்த மாதம் தமிழ்க் கணக்குப்படி கார்த்திகை என்றும் தெரிகிறது. இத்தனைதான் தம்முடைய பிறந்த தினத்தைப் பற்றி ராஜாஜி சொல்லும் விஷயங்கள். சிலர் ரோஹிணி நட்சத்திரம் என்று எண்ணி வருகிறார்கள். இது தவறு. இதைப் பற்றி ராஜாஜியிடம் ஒருவர் பிரஸ்தாபித்தபோது, அவர் மௌனமாகச் சிரித்தார். “கண்ணன் பிறந்தது ரோஹிணி. நான் பிறந்தது ஸ்ரீ ராமன் பிறந்த புனர்வசு!” என்று சிரித்துக் கொண்டே சொன்னார்!

ராஜாஜியின் ஜாதகம் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுகிற அன்பர்களுக்கு ஒரு விஷயத்தை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ராஜாஜியின் ஜாதகம் பாரத நாட்டின் ஜாதகம். சமாதானத்தை விரும்பும் உலக மக்களின் ஜாதகம். அணுகுண்டின் ஜாதகத்தோடு முனைந்து பிணைந்து விட்ட ஒரு ஜாதகம் அது! சோதிடர்களிடம் இதைத் தேடிப் போகவேண்டியது அவசியமா என்ன!

எழுபத்தாறு வயது பூர்த்தியாகிறுன்ன நமது தலைவர் இன்றும் பிறர் உதவியை நாடாமல் நித்தம் காலை ஏழு மணியிலிருந்து இரவு வரையில் இளைஞர்கள் எல்லாம்

பார்த்துப் பொறுமைப்படும்படியான அளவுக்குச் சுறுசுறுப்பாக இருக்கிறார். சில பொதுக் கூட்டங்களுக்கும் போய் வருகிறார். இதைச் சாக்காக வைத்துக்கொண்டு உள்ளூரிலும் வெளியூரிலும் விழாக்களுக்கும் சபைகளுக்கும் வரும்படி பல அன்பர்கள் ராஜாஜியை அடிக்கடி அழைத்துக் கடிதம் எழுதி வருகிறார்கள். அவரை அப்படி யெல்லாம் சிரமத்துக்கு உள்ளாக்குவதால் பல சமயங்களில் அவருடைய உடல் நலம் கெடுகிறது. இதற்கு இடம் கொடுக்காமல் நம்மிடையே அவர் திடகாத்திரத்தோடு நீடூழி வாழ்ந்து நாட்டுக்கு வேண்டிய நல் வழிகளை வகுத்துத் தந்து கொண்டிருக்கும்படி ஒத்துழைப்பது ஒன்றே இப்போது நாம் நமக்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய முக்கிய கடமை.

* * *

சில நாட்களுக்குமுன்பு திருத்துறைப்பூண்டி முசாபரி பங்களாவில் நாங்கள் தங்கியிருந்த போது, ஒரு நண்பர் ராஜாஜியைப் பார்க்க வந்தார். நீண்ட நாளைக்குப் பிறகு பார்க்கிறார் அவர்.

“என்ன இது! மிகவும் மெலிந்து விட்டீர்களே!” என்று கேட்டார், ராஜாஜியைப் பார்த்து.

அங்கே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு தினசரிக் காலண்டரைச் சுட்டிக் காட்டி ராஜாஜி சொன்னார் :—

“ஜனவரி மாசம் இந்தக் காலண்டரைப் பார்த்தால் தடியாக இருக்கும். நீங்கள் டிஸம்பரில் அல்லவா பார்க்கிறீர்கள்! ஏடுகள் கிழிக்கப்பட்டு மெலிந்துதானே இருக்கும்!”

இந்தப் பதிலைக் கேட்டு அதில் உள்ள ஹாஸ்யத்துக்குச் சிரித்த போதிலும், உள்ளத்தில் வருத்தம் அடைந்தேன்.

“என்ன நான் சொல்வது மனசுக்குக் கஷ்டமாக இருக்கிறதோ! வயசாகிறது என்பது உண்மைதானே?” என்று குறும்புப் புன்னகையோடு என்னைப் பார்த்துக் கேட்டார் ராஜாஜி. இதற்கு என்ன பதில் சொல்வது?

உண்மையில் சிலருக்கு வயதே ஆகக் கூடாது என்று ஆசைப்படுகிறோம். அவர்கள் எப்பொழுதும் இளைஞராகவே நம்மோடு இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். முடிந்தால் வருஷத்துக்கு ஒரு வயது குறைய வேண்டும் என்றுகூட எண்ணுவோம். அந்த வகையைச் சேர்ந்தவர் ராஜாஜி.

“பிரார்த்தனை செய்யுங்கள். அது ஒன்றே நற்பலனைப் பெறும் வழி!” என்பது ராஜாஜியின் சித்தாந்தம். அந்த சித்தாந்தப்படி “எங்கள் ராஜாஜி என்றும் இளைஞராக எங்களிடையே வாழ வேண்டும்!” என்று பிரார்த்தனை செய்வோமாக!

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

5

எல்லா ஜீவராசிகளுடனும் ஒன்றி நிற்கும் நிலையை அடைய ஆசைப்படுகிறேன். சகல ஜீவன்களும் நானும் ஒன்று என்று உணர முயல்கிறேன். மனிதப் பிறப்பு மட்டுமல்ல, ஊர்ந்து செல்லும் புழுவின் உயிருடனும் ஒன்றுபட ஆசைப்படுகிறேன். ஊர்ந்து செல்லும் புழுக்களும் நானும் ஒரே பரம்பொருளினின்று உண்டானோம் — உயிரானது எந்த வடிவம் கொண்டு நின்றாலும் ஒன்றுதானே?

[யங் இந்தியா 4-4-29]

முக்திக்கு ஆசைப்படுகிறேன். அது வைகுண்டத்தில்தான் நான் அடைய முடியும். அதை அடைவதற்கு உலகத்தை விட்டுக் காட்டுக்குப் போய்த் தவம் செய்ய வேண்டியதில்லை. மலைக் குகையில் வாசம் செய்ய வேண்டியதும் இல்லை. என் உள்ளத்திலேயே ஒரு குகை இருக்கிறது. அதை அறிந்தேனானால், அதிலே தனித்திருந்து தவம் செய்ய முடியும். மலைக் குகையில் இருப்பவனும் உலக நினைவுகளை மறந்துவிடாமல், ஆகாயக் கோட்டைகள் கட்டி அநுபவித்துக் கொண்டு இருக்கலாம். அரமனையில் வசிப்பவனும்—ஜனகனைப் போன்ற ஒரு ராஜயோகி—எந்த மனக் கோட்டையிலாவது மோகத்திலாவது சிக்காமல் இருக்கலாம். மலைக் குகையில் உடலை மட்டும் வைத்து, மனத்தால் உலகம் எல்லாம் திரிந்து அலைவதும் உண்டு. அப்படித் திரிகிறவனுக்கு சாந்தி இல்லை. ராஜ மாளிகையில் சகல வைபவங்களுக்கும் இடையில் ஜனகன் தன் உள்ளத்தை சாந்தி நிலையில் நிறுத்திக் கொண்டான். என்னைப் பொறுத்தமட்டில் முக்திக்கு நான் கண்டவழி நாட்டுக்கு உழைத்து வருவதே ஆகும். இடையறாத உழைப்பை நாட்டுக்குச் செலுத்தி அதன் மூலம் உலகத்துக்குப் பணியாற்றுவதே நான் கண்ட முக்தி மார்க்கம். உலகத்திலுள்ள உயிர்களோடு ஒன்றுபட்டுப் போவதே என் ஆசை.

[யங் இந்தியா 3-4-24]

ராஜாஜி

காந்தியம் என்று ஒரு தனி மார்க்கம் இல்லை. என்னுடைய பெயரில் ஒரு தனி மார்க்கத்தை விட்டுப் போக நான் விரும்பவில்லை. ஒரு புது சமயத்தையோ கொள்கையையோ நான் கண்டு உபதேசிக்கவுமில்லை. சாதாரணமாக இருந்து வந்த பெரியோர்கள் கண்ட பழைய உண்மைகளைத் தினசரி வாழ்க்கையிலும், செய்யும் காரியங்களிலும், செலுத்திப் பார்க்கலாம் என்பது தான் என்னுடைய முயற்சி. சத்தியமும் ஜீவகாருண்யமும் புதிய விஷயங்கள் அல்ல. நம்முடைய ஆறுகளையும் மலைகளையும் போல் மிகப் பழமையானதும், பழகி வந்ததுமான தத்துவங்கள். நான் புதிதாகச் செய்வது என்னவென்றால், இந்தப் பழைய தத்துவங்களை வைத்து என்னால் ஆன அளவு பிரயோகப் பரீட்சை விஸ்தாரமாகச் செய்து வருகிறேன். இவ்வளவே. இந்தப் பிரயோகத்தில் சில சமயம் தவறும் செய்திருக்கிறேன். தவறு செய்ததன் பயனைத் திருத்தம் அடைந்து அறிவும் பெற்றிருக்கிறேன். வாழ்க்கையும் தினசரி விவகாரங்களும் என்னைப் பொறுத்தமட்டில் சத்தியம் அஹிம்சை இந்தத் தத்துவங்களின் சோதனைக் களங்களாகி விட்டன. சத்தியம் அஹிம்சை இந்தக் கொள்கையில் எனக்குள்ள பக்தியானது உறுதி யடைந்து வளர்ந்து வருகிறது.

[ஹரிஜன் 28—3—36]

வட இந்திய யாத்திரை. 21

நாலாயிரம் ஆண்டுகளுக்கு

மக்கள் ஆனந்தமாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பன்வர் கடமை தவறாமல் அரசாண்டு வருகிறார். இந்த அமைதியான சூழ்நிலையும், மக்களின் உல்லாச வாழ்க்கையும் இயற்கைக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. எல்லையற்றுப் பரந்து விரிந்து கிடக்கும் நீல வானம் சினம் கொண்டது போலச் செக்கச் செவேல் என்று சிவந்துவிட்டது. கடல் திடீரென்று குமுறிப் பொங்க ஆரம்பித்தது. புயல் காற்று நூறாயிரம் பேய்களுக்கு வெறி பிடித்ததுபோல் வீசத் தொடங்கி விட்டது.

காற்றின் வேகம் ஊரைச் சூறையாடுகிறது. மரங்கள் ஒன்றோடு ஒன்று மோதி ஒடிந்து சாய்கின்றன. வீடுகள் காற்றின் வேகம் தாங்காமல் நொறுங்கி விழுகின்றன. மழை 'சோ'வென்று பெய்கிறது. மழையும் புயலுமாக ஆயிரக்கணக்கான உயிர்களை அழிக்கத் தொடங்கி விட்டன. மாடு கன்றுகள், மான்கள், குதிரைகள், பறவைகள் எல்லாம் செத்து மடிந்தன. மனிதர்களின் அழிவுக்கு எல்லை கோல முடியவில்லை. ஊழி முடிவு இப்படித் தான் இருக்குமோ என்று நினைத்து நடுங்கும் படி இருந்தது புயலின் திருவிளையாடல். நேற்று வரை ஆனந்தமாக இருந்த ஊர் இன்று மண் மேடாகி விட்டது. எஞ்சி இருந்த மக்கள் அங்கு வாழ முடியாமல் அந்த ஊரைக் காலி செய்து விட்டு எங்கேயோ சென்று விடுகின்றனர்.

காலம் மாறுகிறது. இன்னொரு மக்கள் கூட்



முன்னால்!

பகீரதன்

டம் வந்து புயலும் மழையும் அடித்துக் காலியான கிராமத்தில், ஏற்கனவே ஊர் இருந்து அழிந்து போன இடத்தில் மறு படியும் வீடு வாசல்கள் கட்டிக் கொண்டு வாழுகின்றனர். கலையை, நாகரிகத்தை, பண்பாட்டை எல்லாம் வளர்க்கின்றனர். பல காரணங்களால் மீண்டும் அதே ஊர் அழிக்கப்படுகிறது. வேறு வழி யின்றி மக்கள் ஊரைக் காலி செய்கின்றனர். ஊர் கேட்பாரற்று அழிந்து வெறும் மண் மேடாகி விடுகிறது.

இவ்வாறு மனிதர்களாலும், கால மாறு தல்களாலும் உண்டாக்கப்பட்டு உயர்ந்த மண் குன்று ஒன்று ரூபரில் இருக்கிறது. இப்பொழுது இருக்கும் ரூபர் நகரத்துக்கு அருகில் சுமார் எண்பது அடி உயரத்தில் அந்த மண் குன்று இருக்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மக்கள் ஒரே இடத் தில் வாழ்ந்து மறைந்து மீண்டும் உணர்ச்சி பெற்று அதே இடத்தில் குடியேறி வருவ தால் அவர்கள் உண்டாக்கி வைத்த சரித் திர முக்கியத்துவமான மண் மேடு இது.

இந்த மண் மேட்டை யாரோ எதற் காகவோ வெட்டினார்கள். அதில் சந்திர குப்தன் காலத்து நாணயங்கள் கிடைத் தன. அந்த நாணயங்கள் சர்க்காருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. நமது சுதந்திர சர்க்கார் உடனே அந்த மண் மேட்டில் வேறு ஏதாவது அதிசயமான பொருள்கள் கிடைக்கின்றனவா என்று கண்டுபிடிப் பதற்காகப் புராதனப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு அந்த மண் மேட்டைத் தோண்டி ஆராய்ச்சி செய்யும்படி சொன்னார்கள்.

புதை பொருள் இலாக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ரூபரில் உள்ள அந்த மண் மேட்டைத் தோண்டித் தோண்டி ஆராய ஆரம்பித்தார்கள். சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிருந்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன் பிருந்த முகலாயர் காலம் வரையில் உள்ள சரித்திர சம்பந்தமான தொடர்பை அந்த மண் மேட்டில் கண்டார்கள்.

இப்பொழுது பாகிஸ்தானில் இருக்கும் மொகஞ்ஜதரோ ஹரப்பா என்ற இடத்தில்

நடத்திய ஆராய்ச்சியின் மூலம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாரத நாட்டில் இருந்த நகரங்களின் அமைப்பு, நாகரிகம், பண்பாடு, கலை, மக்களின் வாழ்க்கை எல்லாவற்றையும் ஒருவாறு புரிந்து கொள்ள முடிந்தது.

மொகன்ஜதரோ ஹரப்பாவில் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நாகரிகம் மட்டும்தான் அங்கு கிடைத்த பொருள்களின் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. அதற்குமேல் ஒன்றும் தெரியவில்லை.

வேறு சில இடங்களில் இருந்து தெரிந்து கொள்ள முடிவது ஆரியர்களின் வருகை, அவர்கள் வளர்த்த நாகரிகம். அவர்களுக்குப் பிறகு வந்த அலெக்ஸாந்தரின் படையெடுப்பைப் பற்றிய சில உண்மைகள். இவை அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிகின்றன.

மொகன்ஜதரோ ஹரப்பாவில் கிடைத்திருக்கும் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நாகரிகத்துக்கும், மௌரியர்கள் கால நாகரிகத்துக்கும் உள்ள சரித்திர சம்பந்த வரலாற்றைப் பற்றி ஆராய்ச்சி மூலம் தொடர்பு ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறு இருள் சூழ்ந்து அந்தகாரமாக இருக்கும் பல ஆயிரம் ஆண்டுகளின் சரித்திர சம்பந்தமான தொடர்பை விளக்கும் பல அருமையான சின்னங்கள் ரூபரில் கிடைத்திருக்கின்றன. ரூபரில் கிடைத்திருக்கும் அபூர்வமான பல சாமான்களின் மூலமாகவும், இதர சின்னங்களின் மூலமாகவும் நாலாயிரம் ஆண்டின் இந்திய நாகரிகத்தின் வளர்ச்சியை, இந்திய சரித்திரத்தில் இடைவெளி யில்லாத தொடர்பைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த அருமையான சரித்திர ஆராய்ச்சி விளக்கங்களை ரூபரில் உள்ள மண் மேட்டுக்கு நாங்கள் சென்று பார்ப்பதற்கு முன்னதாகவே எங்களுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டதிலிருந்து அந்த இடத்துக்கு உடனே செல்ல வேண்டும் என்ற ஆவல் அதிகமாகி விட்டது.

நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சரித்திர ஆதாரங்களைப் பார்க்கப் போகிறோம் என்று மிகுந்த உற்சாகத்துடன் சென்றோம். ஒவ்வொருவரும் ஒரு மாதிரிக் கற்பனை செய்து கொண்டிருந்தார்கள். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சென்று விட்டது போன்ற பிரமை உண்டாகி விட்டது. அந்த மாதிரி பிரமையினால் ஏற்பட்ட உணர்ச்சிகளை நாங்கள் அதிக நேரம் அனுபவிக்க முடியாமல் பஞ்சாபின் ஜூன் மாதத்து வெயில் எங்களைப் பாடாய்ப்படுத்திக் கொண்டிருந்தது. உடம்பை அப்படியே வெதுப்பி வறுத்துப் பொசுக்கிக் கொண்டிருந்தது. எனவே நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ள சரித்திர ஆதாரங்களை, நாகரிகத்தின் சின்னங்களை நேரில் சென்று பார்த்து அனுபவிக்காமல் கற்பனை செய்வதை நிறுத்திக் கொண்டு ரூபர் மண் மேட்டுக்குச் சென்றோம்.

தலையில் ஈரத் துணியைப் போட்டுக்கொண்டு சென்றோம். அடிக்கடி துணியை நனைத்து நனைத்துத் தலையில் கட்டிக் கொண்டோம். வெயிலின் வேகம் ஒரு மாதிரித் தணிந்த பிறகு ரூபரில் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த அதிசயங்களைப் பார்த்து அனுபவிக்க ஆரம்பித்தோம்.

"ஆகா ! என்ன அற்புதம்!" என்றார் ஒருவர்.

"எவ்வளவு அபூர்வமான கிடைத்தற்கரிய பொருள்கள் !" என்றார் இன்னொருவர்.

"எப்பேர்ப்பட்ட சின்னங்கள் ! எப்பேர்ப்பட்ட சின்னங்கள் !"

" பார்க்க வேண்டியவை !"

" பார்த்துப் பார்த்துப் பயன் பெற வேண்டிய கலைச் சின்னங்கள் !"

" அடாடா ! அந்தக் காலத்தின் நாகரிகத்தின் சிறப்பே, சிறப்பு !"

உடனே எல்லாரும் சேர்ந்து 'கொல்' என்று சிரித்தோம். பஞ்சாபின் வெயிலில் எல்லாருக்கும் மூளைக் கோளாறு உண்டாகி விட்டதோ என்று சந்தேகப்பட வேண்டியதாகி விட்டது !

உண்மை என்ன வென்றால் அந்த மண்மேட்டில் ஆங்காங்கு அறுபதடி எழுபதடி பள்ளங்கள் தோண்டப்பட் டிருந்தன. அதிலிருந்து கிடைத்த அபூர்வ சரித்திரப் 'பொருள்கள் என்று சாதாரண செங்கற்களும், வெறும் பானை ஓடுகளும், குப்பை கூளங்களும்தான் குவிந்துக் கிடந்தன. இதைப் பார்த்து விட்டுச் சிரிக்காமல் வேறு என்ன செய்வது !

சரித்திர சம்பந்தமான விசேஷப் பொருள்களை எல்லாம் மண் மேட்டுக்கு அருகிலிருந்த பழங்காலக் கட்டடத்துக்குள் வைத்திருக்கிறார்கள். மண் மேட்டைத் தோண்டி யிருக்கும் பகுதிகளில் தெரியும் கட்டடங்களின் சிறப்பையும், அவை எந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்பதையும் விளக்கிச் சொல்ல நிபுணர்கள் யாரும் அங்கில்லை. எனவே அந்த வேகாத வெயிலில் எழுபதடி ஆழமுள்ள மண் குழியில் நாம் என்ன சரித்திர சம்பந்தமான ஆதாரங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளப் போகிறோம் என்பதை எண்ணிய போது எல்லாருக்கும் சிரிப்பாய் வந்தது.

இந்த ஏமாற்ற உணர்ச்சி யெல்லாம் சில நிமிடங்களுக்குள்ளாகவே தீர்ந்தது. அங்கு புதை பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர் ஒருவர் வந்தார். பூமிக்கு அடியில் அகப்பட் டிருக்கும் அபூர்வமான' சரித்திர ஆதார நுணுக்கங்களை, நாலாயிரம் வருஷத்துச் சரித்திரத் தொடர்பின் சிறப்பை விளக்க ஆரம்பித்தார். அவர் கூறி வந்த விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்ட போது உலகத்தில் வேறெங்கும் காண முடியாத உயர்ந்த நாகரிகத்தின் சிறப்பை, நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியா மகோன்னதமான நாகரிகத்தில் வாழ்ந்திருந்த பெருமையை — நாங்கள் நேரில் பார்த்து அனுபவித்தோம்.

** ** **

ரூபர் மண்மேட்டில் எத்தனை எத்தனையோ அபூர்வமான சரித்திர சம்பந்தமுடைய பொருள்கள் எல்லாம் கிடைத்திருக்கின்றன. பல தேசத்து நாகரிகம் பாரதநாட்டில் கலந்து வளர்ந்து வந்துள்ள சிறப்பை ஆதாரங்களுடன் புரிந்து கொள்ள முடிகிறது.

தட்சசிலம், கௌசாம்பி, வைசாலி, பாடலிபுத்திரம், ராஜகிருகம் முதலிய பௌத்த

கிறிஸ்துமஸ் விற்பனை

சமீபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட [illegible]



சென்டர் செகண்ட், தங்க எழுத்துக்கள் சைஸ் 9½"

க்ரோம் கேஸ்	5 ஜுவல்ஸ்	22/-
ரோல்டுகோல்டு கேஸ்	5 ஜுவல்ஸ்	23/-
க்ரோம் சிறிய செகண்ட்	5 ஜுவல்ஸ்	20/-
ரோ. கோ. சிறிய செகண்ட்	5 ஜுவல்ஸ்	21/-
க்ரோம் கேஸ்	15 ஜுவல்ஸ்	28/-
ரோல்டுகோல்டு கேஸ்	15 ஜுவல்ஸ்	29/-
க்ரோம் ஸ்டீல் பேக்	17 ஜுவல்ஸ்	35/-
ரோல்டுகோல்டுஸ்டீல்பேக்	17 ஜுவல்ஸ்	36/-




வாட்டர் ப்ரூப், உயர்த்தப்பட்ட தங்க எழுத்துக்கள், ரேடியம் புள்ளிகளுடன் சைஸ் 10½"

க்ரோம் ஸ்டீல் பேக்	15 ஜுவல்ஸ்	38/-
ரோல்டுகோல்டுஸ்டீல்பேக் பியர்ல் பழுப்பு, பேன்ஸி டயல்	15 ஜுவல்ஸ்	40/-
க்ரோம் ஸ்டீல் பேக்	17 ஜுவல்ஸ்	40/-
ரோல்டுகோல்டுஸ்டீல்பேக்	17 ஜுவல்ஸ்	42/-
க்ரோம் ஸ்டீல் பேக் மிகச் சிறிது (சைஸ் 8¾")	15 ஜுவல்ஸ்	43/-
ரோல்டுகோல்டுஸ்டீல்பேக் பியர்ல் பழுப்பு (சைஸ் 8¾")	15 ஜுவல்ஸ்	45/-



டேபிள் அலாரம்
டயல் சைஸ் 3"



டிராவலிங் அலாரம்
டயல் சைஸ் 2"

டேபிள் அலாரம் வர்ணக் கேஸ் ரேடியம் 13/-
டேபிள் அலாரம் நிக்கல் கேஸ் ரேடியம் 15/-
டிராவலிங் அலாரம், போல்டிங் கேஸ்,
உயர்த்தப்பட்ட தங்க எண்கள்
ரேடியத்துடன் 26/-
செயினுடன் பாக்கெட் வாட்ச் ரேடியம் 9/-

SWISSCO (INDIA)
P. B. No 10030 - - Fort, BOMBAY


உற்ற நண்பன்



ferrania
பெரானியா

போட்டோ சாமான்கள் மிகச் சிறந்தது—கலர், மற்றும் சாதா படங்களை — உயர் ரக முறையில் தத்ரூபமாக எடுக்கும் பிலிம்களும், பிளேட்டுகளும் பேப்பர்களும் மற்றும் காமிராக்கள்.

Elioflex 2



- 7.5 cm. F/6.3 கலர் கரெக்டெட் கோடெட் டிரிபின் அனஸ்டிக் மாடிக் லென்ஸ் பொருத்தப்பட்டது.
- பிளாஷுடன் பெரானியா "ஸ்பெஷல்" காமிராவின் ஷட்டர் ஸ்பீடு செகண்டுக்கு 1/25 முதல் 1/200.
- ரிப்லெக்ஸ் பிரைடம் மற்றும் ஸ்போர்ட்ஸ் வியூபைண்டர் கொண்டது.
- ஒரு கருவ் பிளி முடன் ரூ. 95 தான்.

எல்லா பிரபல போட்டோ டீலர்களிடமும் கிடைக்கும்

டானிட், ரான்டைன், ஜுபிஸ், மற்றும் ஆஸ்டர் காமிராக்களும் கிடைக்கும்

AMA LIMITED
அமா லிமிடெட்

பம்பாய்-1: கடை பிக் ரூம், ஹார்ன்பி ரோடு
கல்கத்தா: 11, கவர்ன்மெண்ட் பிளேஸ் ஈஸ்ட்
புது டெல்லி: பிளாசா பில்டிங், கன்னாட் பிளேஸ்
மதராஸ்: 159, மவுண்ட் ரோடு

இலவச பிரசுரத்திற்கு எழுதவும்



நாட்டின் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய

எண்ணெய் யார் யாருக்குத் தேவையோ அவர்களுக்கு அதைச் சரிவர கிடைக்கச் செய்வது எங்களுடைய முக்கிய கடமை யாகும். உற்பத்தியாளர்களின் தொழிற் சாலைகள் தடையின்றி இயங்கிவர அவர் களுக்குத் தேவையான பல்வேறு தரப்பட்ட



லூப்ரிகேடிங் எண்ணெய்களை நாங்கள் வழங்கவேண்டும். பண்ணைகளில் இயந்திர சாதனங்கள் ஒழுங்காக இயங்க பண்ணை அதிபர்களுக்கு வேண்டிய விசைக் கலப்பை (டிராக்டர்) எண்ணெய் சரிவர அவர்களுக்கு கிடைக்கிறதாவென நாங்கள் கவனிக்கவேண்டும்.



மோட்டார் சொந்தக்காரர்களுக்கு அவர்களது மோட்டார்கள் ரோட் மார்க்கங்களில் ஒழுங் காக ஓடிக்கொண்டிருக்க வேண்டிய அளவு பெட்ரோலும் ஷெல் X-100 மோட்டார் எண்ணெயும் கிடைக்கச் செய்யவேண்டும். இவை அன்னியில் சிறு சிறு கிராமங்களில்



உள்ள கிராமவாசிகளின் வீட்டில் விளக்கு எரிவதற்கு வேண்டிய அளவு மண்ணெண் ணெயைத் தவறாது வழங்கிவரவும் வேண்டும். இவை யாவையும் நாங்கள் ஒழுங்காக செய்து வருகிறோம்: அது எங்களுடைய பொறுப்பு. ஆனால் சிலர் நினைப்பதுபோல் இவை யெல்லாம் அவ்வளவு எளிதான காரியமல்ல.





பர்மா-ஷெல்...

பாரத நாட்டின்

வாழ்க்கையில்

ஈடுபட்டிருக்கிறது

நாகரிகத்தின் காலத்தில் இருந்த நகரங்களில் உபயோகித்த சில சாமான்கள் ரூபாரில் கிடைத்திருக்கின்றன. பள பள வென்று மின்னிக் கண்ணைப்பறிக்கும் கறுத்த மண் பாத்திரங்கள். இந்த மண் பாத்திரங்கள் எல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவில் பழக்கத்தில் இருந்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டியிருக்கிறார்கள்.

இதற்கு முன் அஸ்தினாபுரத்தில் நடத்திய புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்து கறுப்புப் பானையில் உள்ள சித்திரங்கள் கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உள்ள சித்திரங்கள் என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்த வகையைச் சேர்ந்த சித்திர வேலைப்பாடுள்ள கறுப்புப் பானைகள் பல ரூபாரில் கிடைத்திருக்கின்றன.

ஐந்து நகரங்கள்

ஒரு நகரத்தின்மீது இன்னொரு நகரம் என்று ஐந்து நகரங்கள் பல்வேறு காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட இடம்தான் ரூபாரில் இருக்கும் மண்மேடு. அந்த மண் மேட்டைத் தோண்டிக் கொண்டே சென்றால் எழுபது அடிக்குக் கீழேதான் இயற்கையான பூமியின் அமைப்பு இருக்கிறது. இந்த இடத்தில் முதன் முதலில் குடியேறி யிருந்தவர்கள் மொகஞ்சதரோ—ஹரப்பாவில் குடியேறிய கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். காரணம் மொகஞ்சதரோவில் மட்டும் கிடைத்துள்ள அபூர்வமான பல சாமான்கள் எழுபது அடிக்குக் கீழே இங்கு ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன.

இன்னும் இரண்டடி அகலம் உள்ள உறைக் கிணறு, சித்திர விசித்திரங்களுடன் கூடிய ராஜாங்க முத்திரை உள்ள மண் நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. சிந்து நாகரிக காலத்தைச் சேர்ந்த பல பொருள்கள் கிடைத்திருக்கின்றன. அந்தக் காலத்தில் வழங்கி வந்த பிரசித்தி பெற்ற மண் பாத்திரங்களைத் தாராளமாகக் காண முடிகிறது. இவ்வாறு அங்குள்ள ஒவ்வொரு குழியிலும் ஒரு அதிசயத்தைப் பார்த்தோம்.

ஒரு இடத்தில் முழு வீடு அப்படியே கிடைத்திருக்கிறது. இந்த வீடு சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக உள்ளது என்று புதை பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

மற்றொரு குழியில் பெரிய கோட்டை மதில் சுவர்போல நீளமான சுவர் காணப்படுகிறது. இதைப் பற்றி நிபுணர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. சிலர் இங்குள்ள நகரின் வெளிப்புற மதிள் சுவராக இருக்கலாம் என்கிறார்கள். இன்னும் சிலர் இது தண்ணீரைத் தேக்கி வைக்கும் பெரிய ஏரியின் கரையாக இருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அருகில் இருக்கும் ஸட்லஜ் நதி அந்தக் காலத்தில் இந்த நகரை ஒட்டி ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அந்த நதியில் இருந்த தண்ணீரை இந்த ஏரியில் நிரப்பிக் கொண்டு வருஷம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதற்கு அவர்கள் செய்திருக்க வேண்டும். அப்படித் தண்ணீர் கொண்டு வருவதற்கு வசதியாக அந்த மதின் சுவரில் பல இடங்களில் சிறு சிறு கால்வாய் போன்ற வழிகள் இருக்கின்றன. அதனால் இது தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கும் ஏரியின் கரையாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று இப்பொழுது முடிவு கட்டி விட்டனர். காரணம் அந்தக் காலத்து மக்கள் தண்ணீர் எங்கெல்லாம் தாராளமாகக் கிடைக்கிறதோ அங்கெல்லாம் சென்று குடியேறி வந்தனர். அப்படித் தங்களுக்குக் கிடைக்கும் தண்ணீரை ஒரு இடத்தில் தேக்கி வைத்துக் கொள்வதற்குப் பல வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள். இதை யெல்லாம் யோசித்துப் பார்க்கும்போது இது ஏரியின் கரை தானென்று தெரிகிறது என்று முடிவு கூறுகின்றனர்.

எது எப்படியிருந்தாலும் அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய சுவர் என்பதில் இரு சாராருக்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை.

** ** **

பூமிக்கு அடியில் கிடைத்திருக்கும் அந்த அற்புத நகரங்களின் நாகரிகத்தைப் பார்க்கும் போது ஒரே வியப்பாக இருக்கிறது. வீடுகளின் அமைப்பையும், மிகப் பெரிய ஏரிக்காக அவர்கள் எடுத்திருக்கும் சுவரையும் பார்த்தால் அந்த நாளில் வாழ்ந்த இன்ஜினீயர்கள் எவ்வித முன் யோசனையுடன் இத்தகைய தண்ணீர் நிலையங்களை அமைத்திருக்க வேண்டும் என்று எண்ணி மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.

அந்தக் காலத்து மக்கள் உபயோகித்த சில ஆயுதங்களும் அங்கு கிடைத்திருக்கின்றன. கல் ஆயுதங்களும், மர ஆயுதங்களும், செம்பு ஆயுதங்களும், வேறு பலமாதிரி அதிசய ஆயுதங்களும் கிடைத்திருக்கின்றன.

இந்த ஆயுதங்கள் கிடைத்த பகுதிகள் சுமார் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பிருந்து தொடர்ந்து ஆயிரம் வருஷங்களுக்குமுன் வரை இருந்த நாகரிகம் என்று புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு கி. மு. 1400—கி. மு. 1000 ஆண்டுகளில் ஆரியர்கள் வந்து குடியேறி யிருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. இதற்குப் பிறகுதான் மௌரியர் காலத்து மக்கள் உபயோகித்த மண் பாத்திரங்கள் பூமி மட்டத்திலிருந்து மூன்றாவது அடுக்கில் கிடைத்திருக்கின்றன. அதாவது முதலில் மொகஞ்சதரோ காலத்து நாகரிகப் பொருள்கள், பின்னர் ஆரியர் காலத்துக் கலைப் பொருள்கள், அதற்குப் பின்னர் மௌரியர் காலத்துச் சரித்திரச் சின்னங்கள் கிடைத்திருக்கின்றன.

மௌரியர் காலத்திய மண் பாத்திரங்கள் எல்லாம் இந்தியாவுக்கு வெளி நாடுகளிலிருந்து கொண்டு வந்திருக்கப்பட வேண்டும் என்று தெரிகிறது. காரணம் பூமியிலிருந்து கிடைத்த பல மண் பாத்திரங்கள் முழுசாகக் கிடைத்திருக்கின்றன. அந்த முழு உருவப் பாத்திரங்கள் ஏற்கனவே உடைந்து பித்தளைக் கம்பியைக் கொண்டு கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலேயே தயாரான மண் பாண்டங்களாக இருக்

இருந்தால் உடைந்து போன பாத்திரங்களை இவ்வளவு சிரமப்பட்டுப் பித்தளைக் கம்பிகளைக் கொண்டு கட்டி யிருப்பார்களா!

அதே காலத்தைச் சேர்ந்த பல அபூர்வ சாமான்களும் கிடைத்திருக்கின்றன. "பதபால களா" என்று புராதன லிபியில் எழுதிய தந்த முத்திரை ஒன்றும் கிடைத்திருக்கிறது. இத்துடன் சில நாணயங்கள், களிமண் பொம்மைகள் கிடைத்திருக்கின்றன. ரிஷபம், குதிரை முதலிய உருவங்கள் மண்ணால் செய்தவை கிடைத்திருக்கின்றன. இந்தச் சின்னஞ் சிறு பொம்மைகளைப் பார்த்த போது ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருந்தன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் செய்திருந்தாலும் அந்தப் பொம்மைகளின் அழகைப் பற்றி என்ன சொல்வது என்றே தெரியவில்லை. மண் பொம்மைகளின் அதிசயமான உருவ அமைப்பைச் சொல்வதா? அந்தப் பொம்மைகளில் காணப்பட்ட முக பாவங்களைச் சொல்வதா? ஆமாம்; எதைச் சொல்வது!

பழைய கவிதை ஒன்றை விளக்கும் சிற்பம் ஒன்றும் கிடைத்திருக்கிறது. வீணை வாசிக்கும் பெண்மணியின் உருவம் அது. இன்னும் யட்சன், யட்சி விக்கிரகங்களும் அங்கே கிடைத்திருக்கின்றன.

வீணை வாசிக்கும் பெண்மணியின் உருவம் என்னவோ சிறியதாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த உருவம் சொப்பன வானவுலகத்தையே நம் மனக் கண் முன்னால் கொண்டு வந்து விடுகிறது. அடாடடா! அந்தச் சின்னஞ் சிறு விக்கிரகத்தின் அழகே, அழகு! இந்த விக்கிரகத்தைச் செய்த சிற்பியின் மனோ தர்மத்தைச் சொல்வதா! வீணை வாசிப்பது போல அமைந்திருக்கும் பெண்மணியின் மேனி அழகைச் சொல்வதா! தெய்விக சௌந்தர்யம் பொருந்திய கண் அழகைச் சொல்வதா! அவள் கைவிரல் அழகைச் சொல்வதா! அவள் அணிந்திருக்கும் கலைத் திறமை மிக்க ஆபரணங்களின் அழகைச் சொல்வதா! அம்மம்மா! ஒன்றும் சொல்வதற்கில்லை போங்கள்.

இந்த ஒரு உருவத்தைப் பார்க்கும் போதே அந்தக் காலத்தில் பாரத நாட்டின் மக்கள் எவ்வளவு இன்பமான வாழ்க்கையை நடத்தியிருக்கிறார்கள் என்பதை ஊகிக்க முடிகிறது. அவர்கள் சங்கீதம், நடனம் ஆகிய கலைகளில் தேர்ந்திருந்தார்கள். அவற்றை யெல்லாம் எவ்வாறு அனுபவித்திருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

கவியின் கற்பனையை வைத்துச் சிற்பி செய்த பொம்மையாக இருந்தாலும் அத்தகைய அற்புதமான பெண்மணியைச் சிருஷ்டிக்கும் அளவுக்குக் கற்பனை செய்யக் கூடிய கலைஞர்களும் கவி வாணர்களும் வாழ்ந்திருந்த பாரத நாட்டில் பொது மக்களின் வாழ்க்கையும் உயர்ந்த பண்பாட்டுடன் கூடியதாக, ஆனந்தம் நிறைந்ததாக இருந்திருக்க வேண்டு மென்று முடிவு செய்ய முடிகிறதல்லவா!

கி. மு. 1400 லிருந்து கி. பி. 600 வரையில் மக்கள் தொடர்ந்து அங்கு வசித்து வந்திருந்திருக்கிறார்கள் என்பதற்கு வேண்டிய அத்தாட்சி ரூபரில் கிடைத்திருக்கிறது. இது வரையில் சுமார் நாலாயிரம் வருஷத்துத்

தொடர்பான சரித்திரச் சின்னங்கள் ஒரே இடத்தில் கிடைத்திருப்பது அதிசயமல்லவா!

குப்த காலத்து நாணயங்கள் ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன. தேவநாகரி எழுத்தில் எழுதிய பல மண் முத்திரைகளுடன் கூடிய அழகிய நாணயங்களும் அதில் இருக்கின்றன.

பின்னர் முகலாயர் காலத்தில் அங்கு மக்கள் குடியேறத் தொடங்கியிருக்கின்றனர். அதற்கு வேண்டிய சரித்திரத் தொடர்புடைய அத்தாட்சிகளும் வேறு பக்கத்தில் தெரிகின்றன.

அந்த மண்மேட்டுக்கு அருகிலுள்ள பழைய கட்டடத்தில் அங்கு அகப்பட்ட அபூர்வ சரித்திர சம்பந்தமான சாமான்கள் எல்லாம் காட்சிப் பொருளாக வைத்திருக்கின்றனர். ரூபரில் உள்ள ஐந்து பல்வேறு சரித்திர காலத்துச் சரித்திரங்களைப் பற்றிய குறிப்புகளும், அந்தந்த காலத்துக்குரிய சாமான்களையும் ஒழுங்குபடுத்தி வைத்திருக்கின்றனர்.

ரூபரில் இருந்து கிடைத்த சரித்திர முக்கியத்வம் வாய்ந்த பொருள்களின் பெரும் பகுதி டில்லி ராஷ்டிரபதி பவன் கண்காட்சியில் வைத்திருக்கிறார்கள். ரூபரில் நேரில் பார்த்த பிறகு மீண்டும் அந்த சரித்திரச் சின்னங்களைத் டில்லி ராஷ்டிரபதி பவன் கண் காட்சியிலும் பார்த்தேன். பாரத நாட்டின் பழங்காலப் பண்பை விளக்கும் கலைப் பொக்கிஷங்கள்.

ரூபரில் புராதன புதைபொருள் ஆராய்ச்சித் துறை விடுதியில் சில மணி நேரம் தங்கியிருந்தோம். அந்த விடுதியின் அதிகாரியுடன் நாங்கள் இதுவரையில் பார்த்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

ரூபர் பழைய காலத்தில் ஒரு அதிசய நகரமாகவே இருந்திருக்க வேண்டும். சுமார் நாலாயிரம் ஆண்டுகளின் தொடர்ச்சியான வரலாற்றை இங்கே கண்ணால் பார்க்கலாம். பார்த்துத் தெரிந்து கொள்ளும் படியான பழைய சரித்திரச் சின்னங்கள் இங்கெளில் இருக்கின்றன. இம்மாதிரிப் பெருமை வாய்ந்த நகரம் உலகிலேயே இது ஒன்றுதானும்.

ரூபர் நகரத்தின் புராதன புதை பொருள் ஆராய்ச்சிக் குழிக்குள் இறங்கி யிருக்கும் போது அந்தக் குழியில் பெரிய பெரிய நகரங்கள் இருப்பதாகவே தோன்றியது. நாலாயிரம் வருஷத்துச் சரித்திர கால மன்னர்கள், அவர்களுடைய மந்திரிகள், மகாராணிகள், இளவரசர்கள், குதூகலமான மக்கள் எல்லாருமே அங்கு சஞ்சரித்தார்கள்.

எங்களுடன் பேசினார்கள். அவர்கள் எல்லாரும் ஒரே குரலில் ஒரே மாதிரி பாஷையில் பேசினார்கள். அதாவது புராதன புதை பொருள் இலாகா அதிகாரியின் உணர்ச்சி நிறைந்த குரல் மூலமாகத்தான் பேசினார்கள்.

சரித்திர ஆராய்ச்சித் துறையில் பற்றுள்ளவர்களுக்கு ரூபரைப் போல் குதூகலம் அளிக்கக்கூடிய புராதன நகரம் வேறு ஒன்றும் இருக்கவே முடியாது.

பல சரித்திர ஆசிரியர்கள் எழுதியிருக்கும் பாரத நாட்டின் சரித்திர சம்பந்தமான பொய்யான விவரங்களை யெல்லாம் வெளிப்படுத்தி வெட்ட வெளிச்சமாக்கும் அதிசயமான பல பொருள்கள் அங்கு இருக்கின்றன. அந்தப் பொருள்களுக் கெல்லாம் மட்டும் வாய்

அன்னதான சிவன்

மகாமக அன்னதானப் பணி

தர்மசீலர்களுக்கு,

அடுத்த மகாமகத் திருவிழா 1956ஆம் பிப்ரவரி 25உ வருகிறது. சென்ற மகாமகங்களில், வரும் யாத்ரீகர்களுக்கு அன்னதான சிவன் உணவளித்தது பிரசித்தமானது. வரும் மகாமகத்தில் அன்னதான சிவன் சங்கம் இம் மாபெரும் பணியை மேற்கொள்ள விருக்கிறது.

இந்த விழாவிற்கு சுமார் 10 லட்சம் ஜனங்களுக்கு மேல் வரக்கூடுமாதலால், குறைந்தது 3 லட்சம் ஜனங்களுக்காவது உணவளிக்கும் பொறுப்பைச் சங்கம் ஏற்றுக்கொள்ள நேரிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதை வெற்றிகரமாக நிறைவேற்ற நகரில் ஐந்து முக்கியமான இடங்களில் உணவு விடுதிகள் நிறுவி, வரும் ஜனங்களுக்கு சாம்பார், தயிர் சாதப் பொட்டணங்கள் ஜாதி மத வித்தியாசமின்றி வழங்கப்படும். ஏராளமான ஜனங்களுக்குத் துரிதமாகவும், சூடாகவும், சுகாதார முறையிலும், சாதப் பொட்டணங்கள் வழங்க நீராவி கொண்டு, இதற்கென்று தயாரிக்கப்படும் நவீன பிரத்தியேகப் பாத்திரங்களில் சமைக்கத் திட்டம்.

இதன்றி பெற்றோர்களுடன் வரும் குழந்தைகளுக்குப் பால் அளிக்கவும் பத்து முகாம்கள் ஏற்படுத்தப்படும்.

இப்பணி வெற்றிபெற சுமார் ரூ. 70,000 செலவாகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது. தர்மசீலர்கள் ரொக்கமாகவும் சாப்பாட்டிற்குதவும் சாமான்களாகவும் அனுப்பித் தமிழ் நாட்டின் பெருஞ்சோற்றுப் பெரியாரின் நினைவு கூறும் இப்பணி வெற்றி காண உதவ வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம்:

ரொக்கம்:

அன்னதான சிவன் சங்கம்
19, ஸ்டரிங்கர் தெரு, சென்னை - 1

சாமான்கள்:

அன்னதான சிவன் மாணவர் இல்லம்
அம்மாசத்திரம் — தஞ்சை ஜில்லா
(ரயில் நிலையம் – திருநாகேஸ்வரம்)

டெல்லி: ஸ்ரீ K. அன்னதானம் அட்வகேட்
கல்கத்தா: ஸ்ரீ V.D. ஸ்வாமி, 8, ...ரோடு, பாலிகஞ்ச்
பம்பாய்: ஸ்ரீ G. S. நாராயணஸ்வாமி, கவர்ன்மெண்ட் காலனி

இருந்து பேசக் கூடுமானால் எத்தனையோ ரஸமான சம்பவங்களை எல்லாம் சொல்லக்கூடும்.

ரூபர் புராதன புதை பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் நாங்கள் பார்த்தவை கேட்டவை எல்லாவற்றையும் எழுதுவதென்றால் பெரிய புத்தகம் ஆகிவிடும். ஆகையால் நான் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

நாலாயிரம் ஆண்டுகள் பின்னுக்குப் பிரயாணம் செய்வதற்கு ரூபரில் உள்ள புராதன புதை பொருள் ஆராய்ச்சிக் குழியில் எழுபதடி ஆழம் கீழே இறங்கினால் போதும். எழுபது அடி கீழே இறங்கி நின்றபோது நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாமும் அங்கு வசித்திருப்போம் என்று அதிசயமான உணர்ச்சிதான் மேலோங்கி நின்றது.

வட இந்திய யாத்திரையில் மிக முக்கியமான சம்பவமாக ரூபர் புதைபொருள் ஆராய்ச்சியை நினைத்தேன். இதைப் பார்த்த பிறகு வேறு ஒன்றையும் பார்க்கக்கூட எனக்கு மனம் வரவில்லை. "போதும், ரூபருக்கு நாம் வந்தது எதிர்பாராத அளவு பலன் தந்து விட்டது" என்று எங்களுடன் வந்த இந்திய சர்க்கார் அதிகாரியிடம் கூறினேன்.

அவர் ஒருதரம் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

"என்ன சிரிக்கிறீர்கள்!" என்றேன்.

"நமது முன்னோர்கள் செய்த அற்புதமான நகரத்தையும், அவர்கள் வளர்த்த நாகரிகத்தையும், பண்பாட்டையும் பார்த்தோம். நமது சுதந்திர சர்க்கார் இப்பொழுது நிர்மாணித்திருக்கும் புதிய நகரை, இந்தக் காலத்து நாகரிகம் நிறைந்த அதிசயமான நகரைப் பார்க்க வேண்டாமா!" என்றார்.

"புதிய நகரமா! எங்கே இருக்கிறது!"

"பஞ்சாபின் புதிய தலைநகரான சண்டிகரைத்தான் சொல்லுகிறேன்" என்றார்.

அவ்வளவுதான்; ரூபரின் அதிசய சொப்பன உலகிலிருந்து கிளம்ப மனமின்றிக் கிளம்பினோம். அந்தச் சரித்திர உலகத்தில் உயிருடன் இருந்த சரித்திர சம்பந்தமான சின்னங்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டோம்.

❁ ❁ ❁

மத்தியானச் சாப்பாட்டுக்கே சண்டிகருக்குப் போய் விடுவது என்று தீர்மானித்தோம். சண்டிகரை நோக்கி பஸ் போய்க் கொண்டிருந்தபோது எல்லாரும் மேல்மூச்சு வாங்கத்தான் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அவ்வளவு வெயில். ஐந்தாறு இடங்களில் பஸ் மக்கார் செய்ய ஆரம்பித்தது. இஞ்சினைத் திறந்து குளிர்ந்த நீரைக் கொட்டி நிரப்பிக் கொண்டதும் மீண்டும் பஸ் ஓட ஆரம்பித்தது.

ரூபரிலிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் சண்டிகர் நகரம் இருக்கிறது. போகும் சாலை மிக மோசமானது. இருபுறமும் வெட்ட வெளிகள். சில இடங்களில் மரம் அடர்ந்த தோப்புகள். அந்தத் தோப்புகளில் எத்தனை எத்தனையோ பறவைக் கூட்டங்கள். யார் எப்படிப் போனாலும் சிறிதும் கவலையின்றி ஆனந்தமாக அவை பாடிக் கொண்டிருக்கின்றன. வெயில் கொடுமையையும், பசியையும் கூட அந்தப் பறவைக் கூட்டங்களின் இனிய கானம் மறக்கடித்து விட்டன. நடுநடுவே பஸ் மீண்டும் மக்கார் செய்தது.

டிரைவர் மகானுபவர் மட்டும் மனம் வைத்திருக்கா விட்டால் நாங்கள் எங்கேயாவது பசியோடு நிற்க வேண்டியிருந்திருக்கும். அவர் எப்படியோ அந்த பஸ்ஸை ஓட்டிக் கொண்டு சண்டிகர் வந்து சேர்ந்து விட்டார்.

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு நேயர்களைப் புதிய பஞ்சாபின் தலைநகரான சண்டிகர் நகரத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்துப்போக விரும்புகிறேன். (தொடரும்)



குத்தாலம் சிவவடிவேல் பிள்ளை

நந்தி பகவான் கையாண்ட மிருதங்க வாத்தியத்தைத் திறம்பட கையாண்டு சங்கீத ரஸிகர்களிடையே மிக உயரிய ஸ்தானத்தைப் பெற்றிருந்த குத்தாலம் எஸ். சிவ வடிவேல் பிள்ளை அவர்கள் 5-12-55 அன்று காலமானார் என்ற செய்தியைக் கேட்டு சங்கீத உலகம் ஆறாத் துயரமுற்றது. ஸ்ரீமான் சிவவடிவேலுப் பிள்ளை சிறந்த வித்வானாக இருந்ததோடு மட்டுமன்றி, பொதுநலத் தொண்டராகவுமிருந்தார். தம் சொந்த ஊராகிய குற்றாலம் (தஞ்சை ஜில்லா) 'டவுன் கிளப்'பின் உதவித் தலைவராகவும், பஞ்சாயத்து போர்டு அங்கத்தினராகவும் மற்றும் பல சங்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். இப்படிப் பொது வாழ்விலும், சங்கீத உலகிலும் புகழ் வாய்ந்திருந்த திரு சிவ வடிவேல் பிள்ளை அவர்களைப் பிரிந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பெருந்தீனியால்
பயனில்லை...
சத்துள்ளதா
என்பதை
கவனியுங்கள்



ஒரு தட்டு நிறைய குவிக்கப்பட்ட உணவை சாப்பிடுவதால் குழந்தை பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக கருதுவதற்கில்லை. உங்களது குழந்தை அதிகமாக சாப்பிடலாம். இருந்தாலும், சரியான போஷாக்குகள் இல்லாமல் இருப்பதற்கான . அறிகுறிகள் காணப் படும். சரியான வளர்ச்சியின்மை, மெல்லிய தோற்றம், அசுத்தமான பற்கள், அடிக்கடி ஜலதோஷத்தால் பீடிக்கப்படுதல் — இவைகள் யாவும் அவன் உண்ணும் உணவில் போதுமான விட்டமின் சத்துக்கள் இல்லையென்பதை எடுத்துக் காட்டுகிறது.

இயற்கையாகவே A & D விட்டமின் சத்துக்கள் கொண்ட அடமின் (இறுக்கப்பட்டது) கொடுத்து அவனது வளர்ச்சியைக் கவனியுங்கள். பருத்து உருண்டையான கன்னங்கள், ஆரோக்கியமான தோற்றம்— வியாதிகளை எதிர்க்கும் சக்தி இவையெல்லாம் காணலாம்.

எம். ஜி. பி. ஷார்க் லிவர் ஆயில் – விலை மிகக் குறைவு:
அதிகமான போஷாக்கு அளிக்கக்கூடிய உணவு

அடமின் — ஷார்க் லிவர் ஆயில்

MADRAS GOVERNMENT · MGB · BRAND

அடமின் அளவு படுத்தப் பட்டது		ஷார்க் லிவர் ஆயில் அளவு படுத்தப் பட்டது
லிக்விட்	காப்ஸ்யூல்கள்	ஒவ்வொரு கிராமிலும்
விட்டமின் A 12,000 I.U. /Gm	விட்டமின்-A 6,000 I. U.	விட்டமின் A 1,500 I. U.
விட்டமின் D 1,000 I.U. /Gm	விட்டமின்-D 1,000 I. U.	விட்டமின் D 100 I. U.

கவர்ன்மெண்ட் ஆயில் பாக்டரி
கோழிக்கோடு

சென்னை சர்க்கார் கைத்தொழில் & வியாபார இலாக்காவின் ஒரு பகுதி

ஆற்றங்கரையினிலே



பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை

49. பழையாறை

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பொன்னி நாட்டின் நல்லணியாகத் திகழ்ந்தது பழையாறை என்னும் திருநகரம். சோழ மன்னர்க்குரிய மாளிகை அம்மணி நகரில் விண்ணளாவி நின்றது. இறைவன் உறையும் திருக்கோயில்கள் எம்மருங்கும் காட்சி அளித்தன. அவற்றுள் ஒன்று திருப்பட்டீச்சுரம். பழையாறை நகரில் அமைந்த பட்டீச்சரத்தைப் பாடியருளினார் திருஞானசம்பந்தர்.

" காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள்
காதல் செய்து மேயநகர் தான்
பாரின்மலி சீர்பழசை பட்டிசரம்
ஏத்தவினை பற்றறுமே "

[பழசை - பழையாறு ; பற்று - பாசம்]

என்பது அவர் திருவாக்கு.

பழையாறை நகரம் பல்லவ மன்னனாகிய நந்திவர்மனது உள்ளத்தைக் கவர்ந்தது. அவன் அந் நகரைத் திருத்தினான் ; புதுக்கினான். தன் பெயரையும் அதற்கு அளித்தான் ; நந்திபுரம் என்று பெயர் பெற்ற அந்நகரில் திருமாலுக்கு ஒரு கோயில் கட்டினான். அதற்கு நந்திபுர விண்ணகரம் என்னும் திருப்பெயர் சூட்டினான். அவ் விண்ணகரம் திருமங்கை மன்னனது பாமாலை பெற்றது.

" மந்தமுழ வோசைமழை யாக எழு
கார்மயில்கள் ஆடுபொழில்சூழ்
நந்திபணி செய்தநகர் நந்திபுர
விண்ணகரம் நண்ணுமனமே "

என்ற திருப்பாசுரத்தில் நந்தி மன்னன் அந் நகர்க்குச் செய்த சேவை குறிக்கப் பட்டுள்ளது.

நந்திபுரமாகிய பழையாறையில் தங்கியிருந்த பல்லவ மன்னனை வெல்லக் கருதிப் படையெடுத்தனர் பகை வேந்தர் ; அந் நகரை முற்றுகை இட்டனர். அப்போது காஞ்சிமா நகரத்தில் இருந்த பல்லவப்படை கறித்து எழுந்தது. உதய சந்திரன் என்னும் வீரன் படைத் தலைமை பூண்டு, நந்திபுரம் போந்து மாற்றரசர் சேனையொடு போர் தொடுத்தான்; வெற்றிபெற்றான்; மன்னனை விடுவித்தான். இவ்வாறு காலத்தில் உதவி புரிந்த உதய சந்திரன் பெயர்தாங்கி நிற்கின்றது வடவார்க்காட்டு மாவட்டத்தில் உள்ள உதயேந்திரம் என்னும் ஊர்.

நந்திபுர விண்ணகரத்தில் வீற்றிருக்கும் திருமால், ஜகந்நாதன் என்று அழைக்கப் பெற்றார். அதனால் ஜகந்நாதன் கோயில் என்னும் பெயரும் அவ்விண்ணகரத்திற்கு அமைந்தது. நாளடைவில் அப்பெயர் குறுகி நாதன் கோயில் என்று வழங்கலாயிற்று.

சோழர் குல மணிவிளக்காய் இலங்கிய இராஜ ராஜன் காலம் வரை நந்திபுரம்

என்னும் பெயர் பழையாறைக்கு வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. அவன் தந்தையாகிய சுந்தரச் சோழனை 'நந்திபுரி மன்னன்' என்று புகழ்ந்து வாழ்த்து கின்றது ஒரு பழம் பாட்டு.

"போதியம் நிழற் புனித! நிற் பரவுதும்
மேதகு நந்தி புரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகில் சிறந்துவாழ் கெனவே"

(போதி: புனித - புத்ததேவா !; பரவுதும்-வணங்குவோம்; வண்மை-கொடை ; வனப்பு-அழகு ; திண்மை - ஆற்றல்)

என்று வாழ்த்துகின்றார் ஒரு கவிஞர். "போதி மரத்தின் கீழ் அமர்ந்த புத்த தேவா! நந்திபுரியில் வாழும் சுந்தரச் சோழன் கொடைத் திறமும், கட்டழகும் படைத் திறமும் உடையவனாய்ப் பல்லாண்டு சிறந்து வாழ அருள் புரிதல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்கின்றார் அப்பாவலர்.

இத்தகைய சீர்மை வாய்ந்த பெரு நகரில் சோழன் மாளிகை சிறந்து விளங்கிற்று. ஆயிரம் மாடங்களை உடையதாய் நின்று நிலவிய அம்மாளிகை 'ஆயிரத்தளி' என்று பெயர் பெற்றது. 'ஆயிரம் தளி கூடின இடம் ஆயிரத்தளி' என்று அப்பெயரின் பொருளை விளக்குகின்றது வீரசோழிய உரை. "ஆடகப் புரிசை ஆயிரத்தளி" என்று புகழப் பெற்ற அவ்வரண்மனையில் முடிசூட்டு விழாக்கள் நடைபெற்றன. அங்கு நின்ற அரியாசனத்தில் அமர்ந்து மாநில மன்னர் அரசாங்க ஆணை பிறப்பித்தனர். இராஜ ராஜன் உடன் பிறந்த குந்தவைப் பெருமாட்டியின் தனி மாளிகை யொன்று அந்நகரில் அமைந்திருந்தது. கங்கை கொண்ட சோழன் என்று தமிழகம் பாராட்டும் இராஜேந்திர மன்னன் இளமைக் காலத்தில் அந்நகரிலுள்ள அரண்மனையில் வாழ்ந்தான் என்று அவன் வரலாறு கூறுகின்றது. இம்மன்னன் அரசனாகத் தொடங்கிய பின்னர் முடிகொண்ட சோழபுரம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது அந்நகரம். முடிகொண்ட சோழன் என்பது அப்பெரு மன்னன் பெற்ற விருதுப் பெயர்களில் ஒன்று. பழம் பெருமை வாய்ந்த தலைநகரின் வளம் பெருக்கக் கருதி அம்மன்னவன் காவேரியினின்றும் கொணர்ந்த ஆறு முடிகொண்டான் ஆறு என்றே இன்றளவும் வழங்கி வருகின்றது.

சோழ மாளிகையைச் சூழ்ந்து நான்கு படை வீடுகள் நன்கு அமைந்திருந்தன. பம்பைப் படையும் புதுப்படையும் ஆரியப் படையும் மணப் படையும் நெடுங் காலமாக நின்று நிலவிய இடங்கள் நாளடைவில் தனித்தனி ஊர்கள் ஆயின. இப்போது சோழ மாளிகை என்பது ஒரு சிற்றூரின் பெயர். முன்னாள் இருந்த அரண்மனையின் அடையாளங்கள் இந் நாளிலும் அங்கு காணப்படும். எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் வரை அவ்வூரில் காணப்பட்ட மதிற் சுவர்களை ஆங்கில அரசாங்கம் இடித்து அழித்தது என்று அறிந்தோர் கூறுவர். அந்த இடத்தைச்சுற்றிப் பம்பைப் படையூர், புதுப் படையூர், ஆரியப் படையூர், மணப்படையூர் என்னும் நான்கு ஊர்கள் இன்றும் காணப்படுகின்றன.

அந்நகரின் வடபால் நின்ற பழமையான ஈசன் கோயில் வடதளி என்று அழைக்கப் பெற்றது. புறச் சமயத்தார் பழையாறையில் ஆதிக்கம் பெற்றிருந்த போது அத் திருக் கோயிலின் உள்ளே எவரும் செல்ல முடியாதபடி தடுத்து மறித்து மறைத்திருந்தனர். அப்பதியை வழிபடப் போந்த திருநாவுக்கரசர் மாற்றார் இயற்றிய வஞ்சனையை அறிந்தார்; மனம் நொந்தார். "எவ்வாற்றானும் வடதளியில் உள்ள இறைவனை வணங்கியே தீர்வேன்" என்று நெஞ்சுறுதி கொண்டார்.

"வண்ணம் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேன் என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே"

(வாகீசர் — திருநாவுக்கரசர்)


"ஐயனே! வடதளியில் கோயில் கொண்ட வள்ளலே! நின் திருமேனியைக் கண்டாலன்றி இவ்விடம் விட்டுப் பெயரேன்!" என்று திண்ணிய மனம் உடைய திருநாவுக்கரசர் விண்ணப்பம் செய்தார். திருக் கோயிலின் அருகே யிருந்து உண்ணா விரதம் பூண்டார். உயரிய கொள்கையை நிறைவேற்றுவதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொண்ட அடியாரைக் கண்டனர் பழையாறை மக்கள்; நெஞ்சம் துடித்தனர்; வஞ்சனையை ஒழிப்போம் என்று வஞ்சினம் கூறினர்; அரசனிடம் சென்று முறையிட்டனர். மன்னன் ஆணை பிறந்தது; தடையெல்லாம் தகர்ந்தது; மறைப் பணித்தும் மாய்ந்தது. மங்கை பங்கனைக் கண்டு அங்கம் குளிர்ந்தனர் அடியார் எல்லாம்.


ஆன்ம வீரத்தால் அரும் போர் நிகழ்த்தி வெற்றி பெற்ற நாவரசர் உச்சிமேற் கை குவித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ஆலயத்தின் உள்ளே சென்று அகமுருகிப் பாடினார்.

"ஆதியைப் பழையாறை வடதளிச்
சோதியைத் தொழுவார் துயர்தீருமே"

என்று தமிழ்ப் பாட்டு இசைத்தார்.

இவ்வாறு பன்னிரு நூற்றாண்டுகளுக்கு முன்னே சத்தியாக்கிரகத்தின் வெற்றி கண்டது பழையாறை நகரம். அதை நினைந்தே "பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை" என்று பாடி மகிழ்ந்தார் சேக்கிழார் பெருமான்.


உலகமெல்லாம்.....
மேன்மையான வாழ்வின் சின்னமாக மர்பி ரேடியோ கருதப்படுகிறது. இதன் தெளிவ குரல், அபார வரவேற்பு, நம்பகமான சாதனை பெருமையுடன் போற்றி வைத்திருக்க இதுவே காரணம்.
மாடல் டிஏ 224 ஏஸியில், டியு 224 ஏஸி / டிஸியில்; எல்லா வேவ் 8-பாண்டு, 5-வால்வுகள். ரூ. 425.
மர்பி ரேடியோ
MR/12


INDIGESTION
பிலிப்ஸ் தயாரிப்பான மில்க் ஆப் மக்னீஷியா உதவியால் அற்புதமாக நிவாரணம் பெறுங்கள். மிகவும் துரிதமாக, திறமையாக செயலாற்றும் உப்புச் சேர்க்கை கொண்ட பிலிப்ஸ், வயிற்றில் அமித அமிலத்தைச் சமனப்படுத்துகிறது. உடனே வலியையும், வேதனையையும் நிவர்த்திக்கிறது! இருந்த இடத்திலேயே நிவாரணத்திற்கு பலபேர் இனிய மணம் நிரம்பிய வில்லைகளை விரும்புகின்றனர். ஒவ்வொரு பிலிப்ஸ் வில்லையும் ஒரு தேக்கரண்டி திரவத்துக்கு சமமானதும் அதே திறமையும் வாய்ந்தது.
428
PHILLIPS
MILK OF MAGNESIA
A PRODUCT OF
PHILLIPS





பணியாற்றும் தேச மக்கள்

நம் முதல் ஐந்தாண்டு திட்டத்தை வெற்றிகரமாக்க, நாம் கடந்த 4½ ஆண்டுகளுக்கு மேலாகவே பணியாற்றி வருகின்றோம். ஜனநாயக முறைகள் மூலம், இந்தியாவின் ஒவ்வொரு பிரஜையின் வாழ்க்கை தரமும் மேலும் உயர வழி செய்யும் எமது முதல் மாபெரும் முயற்சியே இத்திட்டம்.

அதிக உணவு • அதிக பண்டங்கள் • நல்ல சமூக சேவைகள் • அதிக வேலை வாய்ப்புகள் • மேலும் உயர்ந்த வாழ்க்கை தரம்.

சாதனைகளின் லக்ஷ்ய அளவை திட்டம் குறிப்பிட்டு நிர்ணயித்துள்ளது. தேசத்தின் சகலவித அபிவிருத்திக்காகவும், முதல் ஐந்தாண்டுகளில் ரூ. 2,324 கோடி செலவிட திட்டம் ஒதுக்கியுள்ளது. முதல் நான்கு ஆண்டுகளில் நமது முன்னேற்றம் மனம் கவர்வதுடன், படிப்படியாக லக்ஷ்யமும் கிட்டி வருகின்றது.

நமது பொருளாதார நிலை திடமாயும், ஸ்திரமாயும் இன்று விளங்குவது, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மேற்கொண்டும் அதிக சாதனைகளை புரியலாம் என்ற நம் நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்கின்றது.

மக்களின் சுபிட்சத்திற்காக மக்களின் திட்டம்

AC/55/113 TM



அத்தியாயம் 17

உத்தம நண்பன்

நாங்கள் சென்னை சென்ற விவரங்களை யெல்லாம் நான் வளர்த்த விரும்பவில்லை. ஏற்கனவேயே அந்த விந்தை மனிதர் ஏற்பாடு செய்திருந்த வீட்டில் இருந்து கொண்டு, ஒரு பள்ளியிலும் சேர்ந்து படித்தேன். இந்த நாட்களில் முக்கியமாக ஒன்றும் நிகழவில்லை யாதலால் அதை யெல்லாம் தள்ளி விட்டு நான் கலாசாலையில் சேர்ந்ததைப் பற்றி எழுதுகிறேன்.

எஸ். எஸ். எல். ஸி. யில் முதல் வகுப்பு மாணவனாகத் தேறியபடியால் கலாசாலையில் அதிக சிரமமின்றியே இடம் கிடைத்து விட்டது. நான் சேர்ந்தது கிறிஸ்தவப் பாதிரிமார்களால் நடத்தப் பட்டுவந்த கலாசாலையாகும்.

அந்த சமயத்தில்தான் எங்களுக்குச் சோதனை ஏற்பட்டது. பள்ளிப் படிப்பு முடியும் வரை மாதா மாதம் கொஞ்சம் பணம் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு பெயரில் பணம் வரும். எந்தப் பெயரில் வந்தாலும் பணம் அனுப்புவது யார் என்பது பற்றி நாங்கள் எப்போதும் சந்தேகப் பட்டதே கிடையாது.

நான் கலாசாலையில் சேர்ந்த பிறகு பணம் வருவது நின்றுபோய் விட்டது. காரணம் தெரியவில்லை. நாங்கள் ரொம்பத் திண்டாடிப் போனோம்.

கலாசாலையில் சேர்ந்ததும் இப்படி நேரவே எனக்குச் சொல்ல முடியாத துயரம் ஏற்பட்டது. இந்தக் கஷ்டம் போதாததற்கு என் அன்னைக்குக் கடும் ஜுரம் வேறு வந்து விட்டது.

நான் கலாசாலையில் சேர்ந்து முதல் நாள் என் வகுப்பு அறைக்



குள் காலை வைத்ததும், முதலில் ஒரு பையன் நின்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் அவன் தன் அருகில் இருந்த ஒரு மாணவனை நோக்கி, "இவன் யார் தெரியுமா?" என்று கேட்டான். அந்தப் பையன் தெரியாதென்று தலையசைக்கவே அவன் என்னிடம் "உன் பெயரென்ன?" என்று வினவினான்.

"ரங்கதுரை!" என்றேன்.

"ஓ! முதல் வகுப்பில் பாஸ் பண்ணின பையனா? கெட்டிக்காரன்தான். உன்னைப் பற்றி இங்கு எல்லோரும் பேசிக் கொண்டார்கள்" என்றான்.

எனக்கு எவ்வளவு பெருமையாக இருந்திருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. தன்னைப் பற்றிப் பிறர் புகழ்வதைக் கேட்பதைவிட போதை தரும் ஒரு விஷயம் இந்த உலகில் வேறு எதுவுமே கிடையாது அல்லவா?

"உன் பெயரென்ன?" என்று அவனிடம் கேட்டேன்.

"தங்கபாண்டியன்" என்று 'டக்' என்று பதில் வந்தது.

"ஏதோ அரச குமாரன் பெயரைப் போலல்லவா இருக்கிறது?" என்றேன்.

அதற்குத் தங்க பாண்டியனின் நண்பன் "அரசகுமாரன் மாதிரி என்ன? அரசகுமாரனே தான். குங்குமத்துறை ஜமீன்தாரின் ஏக புதல்வன் இந்தத் தங்க பாண்டியன்" என்று கூறினான்.

அன்று முதல் நாங்கள் இருவரும் மிக அன்னியோன்யமாகப் பழகினோம். தங்கபாண்டியனிடம் என் வாழ்நாளில் நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் சொன்னேன். சாட்டையடி சம்பவத்தையும், என்னைக் காத்த மனிதரைப் பற்றியும் மட்டும் நான் சொல்லவில்லை. என்னுடைய கதையைக் கேட்டுத் தங்க பாண்டியன் மிகவும் பரிதாபப் பட்டான். தன்னுடைய கஷ்டங்கள், ஆசாபாசங்கள் முதலியவற்றை என்னிடம் சொன்னான். தன் மாமா சொக்கையா தன்னைப் படுத்திவைத்த பாட்டையெல்லாம் அளவிலாத துயரத்துடன் கூறினான். பாவம்! எனக்குப் பணமில்லாமல் தவிப்பு. அவனுக்குப் பணம் இருந்தும் தவிப்பு! அதை உணர்ந்திருந்த நான் அவனைப் பண உதவியே கேட்பதில்லை என்று தீர்மானித்திருந்தேன். அதை நான் மீற வேண்டிய நிலை ஒரு நாள் எனக்கு ஏற்பட்டது.

என் அன்னை நோய்வாய்ப்பட்டார். அவருக்கு வைத்தியம் பார்க்கவாவது பணம் வேண்டாமா? நான் ஒரு நாள் கலாசாலைத் தோட்டத்தில், வேப்ப மரத்தடியில் உட்கார்ந்து உலகை மறந்து அம்மாவைப் பற்றிய நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். அப்போது தங்கபாண்டியன் அங்கே வரவே என்னைப் பார்த்து விட்டு அருகில் வந்து உட்கார்ந்தான்.

"என்ன? மகரிஷி தவம் செய்கிறார் போலிருக்கிறது. நான் அனுவசியமாய் அதைக் கெடுக்கிறேனோ?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

நான் பதில் சொல்லவில்லை.

"ஏன் ரங்கதுரை ஒரு மாதிரி இருக்கிறாய்? உடம்பு சரியாக இல்லையா?" என்று கேட்டான்.

நான் அப்போதும் பதில் சொல்லவில்லை. தங்கபாண்டியனின் முகமும் கவலைக் குறி காட்டியது. என்னருகில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

கடைசியில் நானும் மனம் இளகி, அம்மா உடம்பு சரியில்லாமல் படுத்திருப்பதையும் பணக் கஷ்டத்தையும் பற்றிச் சொன்னேன்.

உடனே அவன் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து, "உன்னைப்போல ஒரு பையன் இந்தப் பூலோகத்திலேயே இருக்க மாட்டான்" என்று கூறிவிட்டு என்னை இழுத்துக் கொண்டு ஹாஸ்டலுக்கு ஓடினான். அங்கிருந்த தன் பெட்டியைத் திறந்து உடனே இருபது ரூபாய் எடுத்து என்னிடம் கொடுத்து, என்னை வீட்டுக்குப் போகச் சொன்னான். நானும் போய் விட்டேன். சற்று நேரத்துக்கெல்லாம், கலாசாலையில் 'லீவு' எடுத்துக் கொண்டு ஒரு டாக்டரையும் கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்தான் தங்கபாண்டியன். என் நெஞ்சம் நன்றியால் நிறைந்தது.

இதெல்லாம் நடந்த நாலாவது நாள் எனக்கு இந்த உலகமே அஸ்தமித்து விட்டது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. என் அன்னை இவ்வுலகில் என்னை ஒரு அநாதையாகச் செய்து விட்டுக் காலமானார். நான் அந்தத் துயரத்திலிருந்து எப்படி மீண்டேனென்றே எனக்கு விளங்கவில்லை. பாவம்! என் அன்னை தாம் இறந்து விடுவோமென்று எண்ணவே இல்லை. எண்ணினாரோ இல்லையோ? என்னிடம் சிறிது கூட அப்படித் தாம் எண்ணியதாகக் காட்டிக் கொள்ளவில்லை. நான் இந்த உலகத்தில் ஒரு விதமான துணையுமில்லாமல் தன்னந் தனியாக விடப்பட்டேன். என் அன்னையின் மரணத்தைப் பற்றி நினைக்கும் போது மேகம் கவிவது போல் என் நெஞ்சைத் துயரம் கவிந்து

கொள்கிறது. அதைப்பற்றி எவ்வளவு எழுதினாலும் என் உண்மையான துயரத்தை விவரித்ததாகாது. அவரவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டியதுதான். உலகமே திடீரென்று சூனியமாகி விட்டது போல் எனக்குத் தோன்றியது. அத்துடன் நிறுத்திக் கொள்வதுதான் சரி.

அப்போதுதான் சஞ்சீவி போல் எனக்கு உதவினான் தங்கபாண்டியன். பண உதவியுடன், அன்பினாலும் உதவி செய்தான். சுபாவத்தில் மிகவும் பயந்தவனான அவன் சமயம் வரும்போது மிகத் தைரியமாக இருப்பதைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

அன்னையின் பிரிவுக்குப் பிறகு வீட்டிலிருந்த சொற்பச் சாமான்களை விற்று விட்டு நான் தங்கபாண்டியனுடன் கலாசாலை ஹாஸ்டலிலேயே சேர்ந்து விட்டேன். அதிர்ஷ்டவசமாக எங்கள் இருவருக்கும் ஒரே அறையும் கிடைத்தது. இதற்கெல்லாம் ஆன செலவைத் தங்கபாண்டியன்தான் செய்தான்.

ஒரு நாள அவனுடைய கடிகாரத்தைக் காண வில்லை. மணி பார்ப்ப



மியூஸிக் அகாடமி, மதராஸ்

இருபத்தொன்பதாவது சங்கீத மகாநாடும் சங்கீதக் கச்சேரிகளும்

(மியூஸிக் அகாடமியைச் சேர்ந்த ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் நடைபெறுகிறது)

24 - 12 - 1955 முதல் 3 - 1 - 1956 வரை

அகாடமி மனையில் விசேஷமாக அமைக்கப்படும் பந்தலில்

சங்கீத சர்ச்சைகள்: காலை 8 மணி முதல் 10 மணி வரை — சங்கீத போட்டிகள்: பகல் 12 மணி முதல் மாலை 2 மணி வரை

இந்திய சர்க்கார் நிதி மந்திரி கனம் டி. சிந்தாமணி தேஷ்முக் அவர்கள் திறந்து வைப்பார்கள்
வித்வான் மருங்காபுரி கோபால கிருஷ்ண அய்யர் அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்கள்
3 - 1 - 1956-ல் நடைபெறும் "சதஸ்"ஸுக்கு ஸ்ரீ எஸ். வரதாச்சாரியார் அவர்கள் தலைமை தாங்குவார்கள்

24-12-55 மாலை 5-30 மணிக்கு ... விழா ஆரம்பம்

மாலை 6-30 மணிக்கு ஆரம்ப தினக் கச்சேரி ... டி. விஸ்வநாதன் — புல்லாங்குழல்; சந்திரசேகரன் — பிடில்; டி. ரெங்கநாதன் — மிருதங்கம்

தினசரி நிகழ்ச்சி விவரங்கள் (D. V.)

மாலை 3 மணி	மாலை 5-30 மணி	இரவு 9 மணி
25-12-55 ஞாயிற்றுக்கிழமை		
ஆர். கே. ராமனுதன் திருக்கோடிகாவல் கிருஷ்ணமூர்த்தி கும்பகோணம் என். கணேசன்	பாலசரஸ்வதி — பரதநாட்டியம்	செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யர் மாயவரம் கோவிந்தராஜ பிள்ளை நாகர்கோவில் கணேசன் கோதண்டராம அய்யர்
26-12-55 திங்கட்கிழமை		
ஏ. பாலசுப்ரமணியம் டி. எஸ். உலகநாதன் ஆர். நடராஜன்	நாராயணஸ்வாமி — வீணை ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி திருச்சி ராகவன்	எம். எஸ். சுப்புலக்ஷ்மி டி. என். கந்தரேச அய்யர் டி. கே. மூர்த்தி கோதண்டராம அய்யர்
27-12-55 செவ்வாய்க்கிழமை		
ஸ்வரமூர்த்தி வெங்கடநாராயண ராவ் — வீணை கிருஷ்ணமூர்த்தி	மதுரை மணி ஐயர் ராஜமாணிக்கம் பிள்ளை முருகபூபதி வில்வாத்ரி அய்யர்	டி. கே. ரங்காச்சாரி மாயவரம் கோவிந்தராஜ பிள்ளை திருவாரூர் நாகராஜன் வைத்தியநாதன்
28-12-55 புதன்கிழமை		
திருவாலங்காடு வேம்பு அய்யர் ஆலங்குடி நடராஜன் மதுரை ராமஸ்வாமி	மகாராஜபுரம் சௌடையா கிருஷ்ண அய்யங்கார் பெங்களூர் மஞ்சுநாத்	டி. கே. பட்டம்மாள் வி. தியாகராஜன் குஞ்சுமணி சிவகுமார் வைத்தியநாதன்

29-12-55 வியாழக்கிழமை

கல்யாணராமன்	கமலா — பரதநாட்டியம்	ஹரிஷங்கர் மிஸ்ரா — ஹிந்துஸ்தானி சங்கீதம்
டி. என். மணி		இலான் மகாராஜ் — தபேலா
உபேந்திரன்		

30-12-55 வெள்ளிக்கிழமை

சீர்காழி கோவிந்தராஜன்	சாத்தூர் சுப்ரமணியம்	கதக் — நடனம்
கும்பகோணம் ஸ்ரீனிவாசன்	ராஜமாணிக்கம்	
மாஸ்டர் சிவகுமார்	உமையாள்புரம் சிவராமன்	

31-12-55 சனிக்கிழமை

வேலூர் சகோதரிகள்	எம். எல். வசந்தகுமாரி	ரவிஷங்கர் — சித்தார்
காரைக்குடி கமலா	திருவள்ளூர் சுப்ரமணியம்	அன்னபூர்ண ரவிஷங்கர் — சுர்பகார்
கனகாம்புஜம்	எஸ். வி. எஸ். நாராயணன்	சதுர்லால் — தபேலா
	வில்வாத்ரி அய்யர்	

1-1-56 ஞாயிற்றுக்கிழமை

பி. எஸ். நாராயணசாமி	ஜி. என். பாலசுப்ரமணியம்	அண்ணுசாமி பாகவதர் — ஹரிகதை
கும்பகோணம் கிருஷ்ணசாமி	சௌடய்யா	
குருவாயூர் துரை	முருகபூபதி	
	பெங்களூர் மஞ்சுநாத்	

2-1-56 திங்கட்கிழமை

திருவனந்தபுரம் ராகவன்	சந்திரலேகா — பரதநாட்டியம்	துவாரம் வெங்கடசாமி நாயுடு — வயலின்
வி. சுந்தரேசன்		மதராஸ் ஏ. கண்ணன்
ராதாகிருஷ்ண ராஜு		

3-1-56 செவ்வாய்க்கிழமை

சதஸ்	மாயவரம் ராஜம்	ராஜரத்தினம் பிள்ளை —நாகஸ்வரம்
	டி. என். கிருஷ்ணன்	ராகவ பிள்ளை — தவில்
	வேலூர் ராமபத்ரன்	

சீஸன் டிக்கெட்டுகள் : ஸ்பெஷல் ரிசர்வ்டு ரூ. 50-0-0, முதல் வகுப்பு ரூ. 20-0-0, இரண்டாம் வகுப்பு ரூ. 15-0-0

மியூஸிக் அகாடமி ஆபீஸில் ரூ. 5/- கொடுத்து முதல் வகுப்புக்கு மட்டும் ரிசர்வ் செய்து கொள்ளலாம்

சீஸன் டிக்கெட்டுகள் கிடைக்குமிடங்கள் : மியூஸிக் அகாடமி ஆபீஸ், 115-E, மௌபரேஸ் ரோடு, சென்னை-14., ரஸிக ரஞ்சனி சபா, மயிலாப்பூர்

மைக் ஒலிபெருக்கி ஏற்பாடுகள் : அஸோஸியேடட் ரேடியோ ஏஜன்ஸிஸ், மதராஸ்



தற்காகத் தேடினேன். அவனிடம்கேட்ட போது கெட்டுப் போய் விட்டது என்று கூறினான். நான் அவனை அஜாக்கிரதையாக இருந்ததற்காகக் கோபித்துக் கொண்டேன். ஆனால் பின்னால் இன்னொரு நண்பன் மூலமாகத் தங்கபாண்டியன் அந்தக் கடிகாரத்தை விற்று விட்டான் என்று தெரிந்ததும் மனமுருகிப் போனேன். என்னுடைய செலவுக்காகத் தன் விலை உயர்ந்த கைக் கடிகாரத்தை விற்றுவிட அவனுக்கு மனம் துணிந்தது மிக அதிசயமான விஷயம் அல்லவா? அதை எவ்வளவு போற்ற வேண்டும்! யார் அந்தமாதிரி நண்பனுக்காகப் பணம் செலவழிப்பார்கள்? அவனுடைய தாராள மனப்பான்மைக்காக அவன் தன் மாமனிடம் வேறு நிறையத் திட்டும் வசவும் வாங்கி யிருக்கிறான். அப்படி இருந்தும் என்னிடம் அவன் வைத்த அலாதியான பிரியத்தால் தன் கடிகாரத்தைக் கூட விற்று விடத் தோன்றியது வியப்பல்லவா!

தங்க பாண்டியன் சற்றுக் குட்டையான வாலிபன். அவனைப் பார்த்தால் ஒரு வகை இரக்க உணர்ச்சி ஏற்படும். அவன் வேறு யாரிடமும் அதிகமாகப் பேச்சே வைத்துக் கொள்ள மாட்டான். நான் ஒருவன் தான் அவனுக்கு உண்மையில் நண்பனாக இருந்தேன். அவனுக்குப் புரியாத பாடங்கள் எல்லாம் சொல்லித் தருவேன்.

என் பொருட்டு அவன் செய்த காரியங்களுக் கெல்லாம் அவனைக் கலாசாலை மாணவர்கள் பரிகசித்து வந்தார்கள். அவனுக்கு அதனால் ரொம்பக் கெட்ட பெயர் என்பது கூட எனக்குத் தெரியும். ஆனால் அவன் எதையும் லட்சியம் செய்யாமல் தொடர்ந்து என்னுடன் ஒட்டிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் நான் அதற்குக் காரணம் கேட்ட போது, "எனக்கு நிஜமாகத் தெரியாது, துரை! ஒன்று தான் தெரிகிறது. உன்னை மனப்பூர்வமாக நம்பலாம் என்று எனக்குப் படுகிறது. நீ ரொம்ப நல்லவன்" என்றான்.

அவனுடைய அன்புக்குப் பதிலாக நான் அவனுக்குச் செய்யக் கூடியது வேறொன்றும் இருக்க வில்லை. நான் திரும்பக் கொடுக்கக் கூடியது அந்த அன்புக்குத் தகுதியுள்ளவனாக இருப்பது தானே? கூடிய வரை அவனுடைய பாடங்களைக் கவனித்துச் சொல்லிக் கொடுத்து வந்தேன்.

தங்க பாண்டியனுக்குப் படிப்பு என்பது கொஞ்சம் வேதனை தரும் விஷயம். அவன் கல்லூரி ஹாஸ்டலில் சேர்ந்தது தன் மாமனிடமிருந்து தப்புவதற்காகத்தான் என்று பின்னால் அறிந்து கொண்டேன்.

தங்க பாண்டியன் பயந்த சுபாவமுடையவன் என்று சொன்னேன். அவனுக்குத் தன் மாமாவிடம் சொல்ல முடியாத பயம். நான் சொல்லிப்பின்னால் கொஞ்சம் தைரியம் வந்தது. தன் மாமா ரொம்பப் பொல்லாதவரென்ற எண்ணம் அவன் நெஞ்சில் ஊறிப் போயிருந்தது. அவன் மனம் விட்டுப் பழகக் கூடிய ஆத்மா ஒன்று கூட அவனுடைய ஜமீனில் இல்லை. சொக்கையாவுக்கு அடிமையாக இருப்பது அவனுக்கு மிகவும் வேதனை தந்து வந்தது. சொக்கையா தன் காரியங்களுக்காகத் தங்க பாண்டியனை வெளியூருக்கு அனுப்ப நினைத்தபோது, தங்கபாண்டியன் தான் கலாசாலையில் படிப்பதாகக் கூறிவிட்டுச் சென்னைக்கு வந்து விட்டான். ஜமீன் காரியஸ்தர் கொஞ்சம் மனச்சாட்சி உள்ளவரானபடியால் தங்க பாண்டியனுக்குப் பணம் மட்டும் தவறாமல் அனுப்பிக்கொண்டு வந்தார்.

இதையெல்லாம் அவன் என்னிடம் கூறிவிட்டு, "ஜமீன்தாருக்கு மகனாகப் பிறந்து என்ன பயன், துரை? வேறு ஒருவனுக்குப் பயந்து பயந்து சாக வேண்டி யிருக்கிறது. என்னுடைய தங்கை லக்ஷ்மி அங்கே இருக்கிறாள். அரண்மனையை விட்டுக் காலை வெளியே எடுத்து வைக்க அனுமதி கிடையாது. பள்ளிக்கூடத்துக்குக்கூட அவள் போகக் கூடாதாம். நானும் வந்த பிறகு அவள் பாடுதான் கஷ்டம். தன்னந் தனியாக இருக்கிறாள்! அதை நினைத்தால் மிக வருத்தமாக இருக்கிறது" என்றான்.

நான் அவனைத் தேற்றினேன். உலகத்தில் கஷ்டமே அனுபவிக்காதவர்கள் யாரும் இல்லையென்றும், நல்ல காலம் தானாக வருமென்றும் கூறி வைத்தேன்.

தங்க பாண்டியன் அடிக்கடி தன் தங்கை லக்ஷ்மியைப் பற்றிப் பேசிக் கொண்டே இருப்பான். அவன் அப்படிப் பெருமையுடன் பேசும் போதெல்லாம் எனக்கும் ஒரு தங்கை இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றும். இப்படித் தன்னந் தனியனாக உலகில் விடப்பட்டிருக்கிறோமே என்ற ஏக்கம் எழும். அதை நான் தங்கபாண்டியனிடம் சொன்னபோது அவன் சிரித்து விட்டு, "நான் உனக்குத் தம்பியாக இருக்கிறேனே துரை. வேறு யாராவது உனக்கு வேண்டுமா?" என்றான்.

நானும் அவனும் சிநேகமாக இருப்பதைப் பார்த்துப் பல மாணவர்கள் பரிகசித்தார்கள். குசேலரையும் கிருஷ்ணனையும் ஒப்பிட்டுப் பேசினார்கள். நாங்கள்

எதையும் பொருட்படுத்தவில்லை. நான் என் அன்னையையும் இழந்து, பணமும் இல்லாமல் அனாதரவாக நின்ற சமயத்தில் எனக்கு உயிர் அளித்த உத்தம நண்பன் தங்கபாண்டியன். ஆகையால் அவனிடம் நான் பின்னால் பல குற்றங் குறைகள் கண்டபோதிலும் அவைகளைப் பொருட்படுத்தவில்லை. எனக்கு அவன் அன்று செய்த உதவியை நான் என்றென்றும் மறக்க முடியாது.


அத்தியாயம் 18

சரித்திரப் பேராசிரியர்

என்னுடைய முகராசியைப் பற்றி என் நண்பர்கள் பலர் கூறிப் பெருமைப் படுவதுண்டு. "உனக்கென்னடா? நல்ல முகராசி இருக்கிறது. எங்கு போனாலும் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுவாய்" என்பார்கள்.

என் முக ராசியோ அல்லது ஜாதக பலனோ அல்லது என் பரிதாபமான நிலையோ என்ன காரணமோ தெரியாது. கல்லூரியில் அத்தனை பேராசிரியர்களும் என்னிடம் பிரியமாக இருந்தார்கள். மாணவர்களிலும் அநேகம் பேர் அன்பு காட்டினார்கள்.

எனக்கு யாரும் இல்லை என்ற காரணத்தால் ஏற்பட்ட அனுதாபம்தான் இவற்றுக்குக் காரணம் என்று நினைக்கிறேன். விடுமுறை நாட்கள் வந்து விட்டால் சந்துரு, சேகர், கிருஷ்ணன், மணி முதலியவர்கள் எல்லோரும் "என் வீட்டுக்குத்தான் வரவேண்டும்" என்று நச்சரித்து விடுவார்கள். அவர்கள் என்னையே பங்கு போட்டுக் கொண்டு விடுவார்களோ என்று கூடச் சில சமயம் பயமாக இருக்கும்.



தங்கபாண்டியன் மட்டும் பரிதாபமான முகத்துடன் உட்கார்ந்திருப்பான். எல்லோரும் போன பிறகு, "துரை! உன்னை என்னுடைய அரண்மனைக்கு அழைத்துப் போக எனக்குத் தைரியம் இல்லையே. நான் உனக்கு நண்பன் என்று சொல்லிக் கொண்டு என்ன பிரயோசனம்?" என்று வருத்தப்படுவான். நான் அவனைத் தேற்றுவேன்.

"நீ எனக்குச் செய்யும் உதவிக்கு நான் ஐந்து ஜன்மம் எடுத்துத் திருப்பிச் செய்ய வேண்டும். பாண்டியா! என்னை அழைத்துப் போக முடியவில்லையே என்பதற்கு நீ வருத்தப்பட வேண்டாம். இந்த நிலைமை மாற வேண்டுமே என்று கவலைப்படு. தைரியத்தை வரவழைத்துக் கொள். நமக்கு ரொம்ப வயதாகி விடவில்லையே. சொக்கையாவை எதிர்த்துப் போராட நம்மை இப்போது தயார் செய்து கொண்டால், காலம் வரும்போது தைரியமாகக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். வயதானவர்கள் மாதிரி நீ துக்கப்படக் கூடாது" என்று கூறித் தைரியமளிப்பேன்.

முதல் வருஷம் இப்படிச் சென்றது. பரிக்ஷையில் முதல் மாணவனாகத் தேறினேன். அதன் பிறகு கல்லூரியில் என்ன நடந்தாலும் அதன் பொறுப்பை என் தலையில் கட்டி விடுவார்கள். நானும் எது சொன்னாலும் தட்டிக் கழிக்கவே மாட்டேன். எனக்குந்தான் வேறு என்ன வேலை இருந்தது?

ஹாஸ்டலில் ஒரு தனி மாணவர் சங்கம் இருந்தது. என்னை இரண்டாவது வருஷ ஆரம்பத்தில் அதற்குக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள். தங்கபாண்டியனுக்கு ஒரே ஆனந்தம். ஆரம்பத்தில் அந்தக் காரியதரிசி பதவி பொறுப்புள்ள வேலையான படியால் எனக்குப் பிடிக்கவில்லை. ஏதேனும் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். அதைப் பற்றிப் பேசுவதற்கு யாராவது பிரபலஸ்தர்களைக் கூப்பிட வேண்டும். அவர்களுக்கு மரியாதை செய்யும் பொறுப்புக்கள்; மாணவர்களை அமைதியாக இருந்து கேட்க வைத்தல்; இப்படி எத்தனையோ விதமான பொறுப்புக்கள்.

சில சமயம் பேசுவதற்காகக் கூப்பிடப்பட்ட பிரசங்கி வந்து விடுவார். கேட்பதற்கு ஒரு மாணவன்கூட இருக்க மாட்டான். பிரசங்கியை உட்கார வைத்து விட்டு, கல்லூரியின் பல்வேறு மூலைகளில் பதுங்கிக் கொண்டிருக்கும் மாணவர்களை நயமாகவும் பயமாகவும் வற்புறுத்தி அழைத்துக்கொண்டு போக வேண்டும். சில சமயம் இலக்கியக் கூட்டத்துக்குப் பொருளாதாரம் படிக்கும் மாணவர்களையும், சரித்திர ஆராய்ச்சிக் கூட்டத்துக்குத் தாவர சாஸ்திரம் படிக்கும் மாணவர்களையும் இழுத்துக் கொண்டு போகும்படி நேரிட்டிருக்கிறது. கூட்டம் முடிந்த பிறகு எல்லோரும், "உன்னால் இன்றைக்கு கிரிக்கெட் மாட்ச் போச்சு", "உன்னால் இன்று ஒரு பிரமாதமான சினிமா பார்க்க முடியாமல் போச்சு" என்று என்னைத் திட்டிக் கொண்டே போவார்கள்.

ஆனால் இந்தக் கஷ்டங்களைச் சமாளிப்பதிலும் ஒரு உற்சாகம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் காரியதரிசி பதவியை ஒப்புக் கொண்ட படியால் எனக்கு ஒரு மிகப் பெரிய நன்மையும் உண்டாயிற்று.


நான் சரித்திரப் பாடத்தில் எப்போதுமே ஊக்கமுடையவன். ஆகவே சரித்திரப் பாடம் எடுத்துக் கொண்ட மாணவர்களுக்கென்று தனியாகச் சரித்திரப் பேராசிரியர்களை அழைத்துப் பேச ஏற்பாடு செய்வேன்.

பழைய காலத்தில் ஸிந்து நதி தீரத்தின் நாகரிகத்துக்குச் சான்றாக விளங்கிய "மோஹஞ்சதாரோ, ஹரப்பா" என்ற இரு பட்டணங்களைப் பற்றி விரிவான பிரசங்கம் செய்வதற்காக ஒரு சரித்திரப் பேராசிரியரை அழைக்க ஒரு நாள் நான் சென்றேன்.

'முகராசி, முகராசி' என்று என் நண்பர்கள் கூறுவார்களே, அது தானோ என்னவோ, அந்தப் பேராசிரியர் கோதண்டராமனுக்கு என்மீது திடீரென்று ஒரு அபிமானம் உண்டாகி விட்டது. நான் சரித்திர சம்பந்தமான சில சந்தேகங்களை விளக்கும்படி அவரிடம் கேட்டேன். ஒரு காகிதத்தில் சில கேள்விகளை எழுதிக் கொடுத்தேன். அதைப் பார்த்ததும் அவர் என்னைத் தட்டிக் கொடுத்தார். "நீ ரொம்பக் கெட்டிக்காரன். சரித்திரத்தை இவ்வளவு ஊன்றிப் படிக்கிறாயே" என்றார்.

கோதண்டராமன் வந்து பேசிவிட்டுப் போய் ஒரு வாரம் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. என்னைப் பார்க்க வேண்டுமென்று அவர் எழுதியிருந்தார். அவர் வீட்டுக்குப் போனதும் என்னைப் பற்றி விசாரித்தார். நானும் ரொம்பப் பரிதாபகரமாகச் சொல்லாமல் என் நிலையைச் சொன்னேன். தங்க பாண்டியன் உதவி செய்வதைப் பற்றியும் அவரிடம் குறிப்பிட்டேன்.

உடனே அவர், "நீ இன்னொருவரை எதிர்பார்க்காமல், நீயே சம்பாதித்து ஹாஸ்டல் செலவுக்கு ஈடு கட்ட முடியுமானால் உனக்குச் சந்தோஷமாக இருக்குமல்லவா?" என்று கேட்டார்.




அவர் அப்படிக் கேட்டதும், நான் வேலை தேடிச் சென்னைப் பட்டணத்தைச் சுற்றி வந்ததையும், எல்லாரும் படிக்கும் மாணவனை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாது என்று மறுத்து விட்டதையும் கூறினேன். கடைசியில், "என் படிப்புக் கெட்டுப் போகாமல் ஓய்வு நேரத்தில் செய்வதற்கு மாத்திரம் நான் வேலை கேட்டால் யார் தருவார்கள்?" என்றேன்.


"படிக்கும் மாணவனுக்கு வேலை கொடுக்காமல் யாருக்குக் கொடுப்பது? படிப்பவன் மனிதன் இல்லையா? அவனுக்குச் செலவு இல்லையா? அழகாக இருக்கிறது. நான் ஒரு வேலை தருகிறேன், செய்கிறாயா?" என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

நான் மலைத்துப் போனேன். அவரிடமிருந்து அதை நான் எதிர்பார்க்கவே இல்லை. தங்கபாண்டியன் எத்தனையோ அன்புடன் எனக்கு உதவி செய்து வந்தான். அதனால் எனக்கு நன்றிக் கடன் ஏறிக் கொண்டே போயிற்று. அதன் பாரம் என் தலையை அழுத்திற்று. அவனுக்கே முடியாத நிலைமையில் எனக்கு அவன் உபகாரம் செய்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. எனினும், வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டிருந்தேன். அவனுக்குப் பாரமாக நான் இருப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக, கல்லூரியில் எந்தப் போட்டி நடந்தாலும் கலந்து கொண்டு பரிசு வாங்க முயற்சிப்பேன். பரிசு வாங்கிய மறுநாளே அதை விற்றுச் செலவு செய்து விடுவேன்.

இப்படியெல்லாம் திண்டாடிக் கொண்டிருந்தவனுக்கு இந்தச் செய்தி எப்படி இருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா? என்னால் பதில் சொல்லக் கூட முடியவில்லை.

அவர் என் பதிலை எதிர் பார்க்கவும் இல்லை. "நீ மாட்டேன் என்றாலும் நான் விடப்போவதில்லை. நான் கொடுக்கும் வேலை ரொம்பக் கஷ்டமானதுதான். என் வீட்டில் இரண்டு வாலான பையன்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீ தினமும் வந்து பாடம்









தஞ்சாவூர், காலஞ் சென்ற ஆர். எஸ். குப்புசாமி அய்யங்கார் அவர்களின் புதல்வி சௌ. வஸந்தாவுக்கும் டாக்டர் ஆர். பார்த்த சாரதி பி. எஸ்ஸி., எம். பி., பி. எஸ் அவர்களுக்கும் சமீபத்தில் திருமணம் நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்!

சொல்லித் தரவேண்டும். அவர்களை நீ மேய்ப்பதிலிருந்து உன் சாமர்த்தியம் எனக்குத் தெரிந்து விடும்'' என்றார்.

''தலைமைப் பேராசிரியரின் உத்தரவு வேண்டுமல்லவா? அவரிடம் கேட்டு விடுகிறேன்'' என்றேன்.

''அதெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன். நீ கவலைப்படாதே. வெள்ளிக் கிழமை மாலை நாள் நன்றாக இருக்கிறது. வந்துவிடு'' என்றார்.

அன்று நான் தங்கபாண்டியனிடம் இதை மிகக் குதூகலத்தோடு கூறினேன். உலகத்தில் ஒருவரையும் எதிர்பாராமல் நானும் மனிதனாக வாழ வேண்டும், வாழ்க்கையை அனுபவித்து வாழ வேண்டும் என்ற என் லட்சியம் நிறைவேற அது முதல் படியாக அமையும் என்று எனக்குத் தோன்றியது.

நான் இண்டர் வகுப்பில் இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்த போது என் மனோ பாவங்களெல்லாம் மாறத் தொடங்கின. சிறுவனாக இருந்தவன் பெரியவனாகி விட்டோம் என்ற ஒரு உணர்ச்சியைப் பெற்றேன்.

சில சமயங்களில் ஒரே சூனியமாக வாழ்க்கை தென்படும் போதெல்லாம் என் அன்னையின் விருப்பம் நினைவுக்கு வந்து எனக்குத் தென்பு அளிக்கும். எப்படியாவது அவருடைய விருப்பத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்ற ஆர்வம் பொங்கி எழும்.

இதற்கிடையே தங்க பாண்டியனின் மனோபாவமும் மாறி வந்தது. இரண்டாவது வருஷ முடிவில் அவன் தனக்கு அதிகப் பணம் வேண்டுமென்று தன் மாமனுக்குக் கடிதம் எழுதுமளவுக்குத் துணிவு பெற்று விட்டான். அதை எழுதி என்னிடம் காட்டியபோது அவனுடைய முகத்தில் கண்ட ஆனந்தத்தை விவரிக்க முடியாது. தனக்கும் தைரியம் வந்து விட்டது என்று அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை மற்றவர்கள் புரிந்து கொள்ளக்கூட முடியாது.

கடிதம் போய்ச் சேர்ந்ததும் அவன் மாமா சொக்கையா பாண்டியர் நேரே வந்து விட்டார். பையனுக்கு மூளை சரியாகத்தான் இருக்கிறதா என்று சந்தேகம் வந்து விட்டது போலிருக்கிறது.

கல்லூரி ஆசிரியர்களிடம் அவனைப் பற்றி விசாரணை செய்தார். அவன் ரொம்ப சாதுவான பிள்ளை என்ற அபிப்பிராயத்தையே எல்லாரும் தெரிவித்தார்கள். அதன் பிறகு அவர் தலைமைப் பேராசிரியரிடம் சென்று, ''தங்கபாண்டியன் பார்க்க சாது மாதிரி இருப்பான். ஆனால் ரொம்பப் பொல்லாத பிள்ளை. பணத்தைத் தாறுமாறாகச் செலவழிக்கிறான். சகவாச தோஷம் போலிருக்கிறது. யாரோ ஒரு பரதேசிப் பயலுடன் ரொம்பப் பழகுகிறானாமே. அதை அனுமதிக்காதீர்கள். கண்டிப்பாக இருங்கள்'' என்று கூறி விட்டுப் போனாராம்.

அந்தச் சமயத்தில் அங்கே இருந்த எங்கள் வகுப்புப் பேராசிரியர் சந்தோஷம் அவர்கள் இதை என்னிடம் கூறினார். தங்கபாண்டியன் அவமானத்தினால் குன்றிப் போனான்.

சொக்கையா போன பிறகு தலைமைப் பேராசிரியர், சந்தோஷம் அவர்களைப் பார்த்து, ''இந்த மனிதன் பைத்தியமாக இருக்க வேண்டும். அல்லது மிகப் பொல்லாதவனாக இருக்க வேண்டும்'' என்று சொன்னாராம். இதை அவர் கூறிய பிறகுதான் எங்கள் மனம் சமாதான மடைந்தது. தங்கபாண்டியனுக்குத் தன் மாமாவைப் பகிரங்கமாக எதிர்க்க இதன் பிறகுதான் துணிவு வந்தது. நாங்கள் இண்டர் பரீக்ஷை முடிந்ததும் கும்பகோணம் துறைக்குப் போய் விடுமுறை நாட்களைக் கழிப்பதாகத் தீர்மானித்தோம். ஆனால் அந்த வருஷம் என்னை ஸ்ரீ கோதண்டராமன் போக விடவில்லை. அவர்கள் வீட்டில் இருக்கும்படி செய்து விட்டார். தங்கபாண்டியன் இதனால் ஏமாற்ற மடைந்தாலும், 'நாம் இவ்வளவு சீக்கிரம் சொக்கையாவை விரோதித்துக் கொள்வது நல்லதல்ல' என்று கூறியதும் சரியென்று ஒப்புக் கொண்டான். (தொடரும்)

கால்கேட் குளோரோபில் டூத் பவுடர்

வெளியிடுகிறது

வீரிய குளோரோபிலின் பூரணநன்மைகளை



ஜயண்ட் சைஸ் லாபகரம்

வீரியகுளோரோபில்தான் உங்களுக்கு நன்மை தரவல்லது!

வாயில்தோன்றும் துர் நாற்றத்தை ஒழிக்கிறது. அதி துரிதமாக, பூர்த்தியாகச் செயலாற்றுகிறது! வாய்க்கு புதிய நறுமணத்தைத் தருகிறது!

பற்கள் சொத்தையாகாமல் காக்கிறது! சொத்தையாக்கும் காரணம் என பல் டாக்டர்களால் கருதப்படும் தீய அமிலங்களை ஒழிக்கிறது!

ஈறுகளைப் பலப்படுத்துகிறது! உங்கள் ஈறுகளைப் பாதுகாக்க குளோரோபிலின் தீவிர நன்மைகளைத் தருகிறது.

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.



அதிகப்படி போஷாக்கு பெற தன் குழந்தைகளுக்கு அவள் ஓவல்டின் கொடுக்கிறாள்

போதுமான போஷாக்கு இருந்தால் நல்ல ஆரோக்கியம் ஏற்படும் என்று அறிந்துள்ள உலகெங்குமுள்ள தாய்மார்கள், தங்கள் குழந்தைகளுக்கு ருசி மிகுந்த ஓவல்டின் கொடுக்கிறார்கள்! குழந்தைகள் தங்கள் உடலிலுள்ள சக்தியை வெகு சீக்கிரத்தில் செலவழித்து விடுகிறார்கள். இழந்துவிட்ட தங்கள் சக்தியைத் திரும்பப் பெற வேண்டியதோடு மட்டுமின்றி, எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் போதுமான சக்தியையும் உடலில் அவர்கள் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த விஷயத்தில் ஓவல்டின் இன்றியமையாதது; இயற்கை உணவுச் சத்துக்களிலிருந்து அது தயாரிக்கப்படுகிறது. இன்னும் B & D வைட்டமின்களுடன் சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது. இந்த ருசி மிகுந்த புத்துயிரளிக்கும் பானம், சிறுவர்களின் புத்தியையும், உடலையும் நாள் பூராவும் சுறுசுறுப்பாக வைத்திருக்கிறது. நித்திரை காலத்தில் ஆரோக்கிய கரமுள்ள நித்திரையை அளிக்கிறது. உடனே உங்கள் குழந்தைகளுக்கு ஓவல்டின் கொடுக்க ஆரம்பியுங்கள்.



TV 448

ஓவல்டின்

எதிர்கால ஆரோக்கியத்திற்கு உறுதியான அஸ்திவாரம்

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ. (இந்தியா) லி-ட்.

சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 மணி வரை ரேடியோ சிலோனில் (ஹிந்தி-41.72 மீட்டர்கள்) ஓவல்டின் அமெச்சூர் நேரத்தைக் கேளுங்கள்

சர்மாவின் பாசம்



சா. அ. அனந்தகிருஷ்ணன்

நீண்டுப்போன இரவின் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு கூடத்துச் சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு மணியடித்து ஓய்ந்தது.

வாசல் திண்ணையில் படுத்திருந்த சிவ சர்மா இன்னும் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். அவர் மனத்தில் கவலையும் கலக்கமும் பயங்கரமாக உணர்ச்சி விட்டுக் கொண்டிருந்தன.

வீட்டுச் சொந்தக்காரன் என்ற உரிமையோடு அந்த வீட்டில் அவர் படுத்திருக்கும் கடைசி நாளல்லவா இன்று!

ஆமாம், நாளை அவருடைய வீட்டைக் கோர்ட்டார் ஏலம் போட்டு விடுவார்கள். இதற்காகப் பத்து நாட்களாகவே ஊரில் தண்டோராப் போட்டு வருகிறார்கள்.

வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்று சிவசர்மா மீது ராமநாதன் கோர்ட்டில் வழக்குத் தொடுத்த போது, சர்மாவை அறிந்த எவ்வளவோ பேர் திடுக்கிட்டார்கள். ஏனென்றால் ராமநாதன், சர்மாவின் தம்பி வெங்குவுக்குச் சொந்த மாமனார் உறவாகும்.

உறவினர்களுக்குள்ளே இவ்வளவு புகைச்சலா என்பதுதான் பலருக்கு அதிசயமாக இருந்தது.

ராமநாதன் இவ்வளவு தூரம் தம்மை இழிவு படுத்தியது கூடச் சர்மாவுக்கு ஆச்சரியத்தையோ ஏமாற்றத்தையோ உண்டாக்கவில்லை. தம் சொந்தத் தம்பியே அவனுடைய மாமனாரிடத்தில் அவரைக் காட்டிக் கொடுத்தது தான் சர்மாவுக்குத் தாளமுடியாத வருத்தத்தைத் தந்தது. மேலும், உதவும் நிலையில் இருந்தும்கூட, நெருக்கடியான சமயத்தில் தமக்குக் கைவிரித்துவிட்ட தம்பியின் செய்கைதான் அவர் நெஞ்சை வருத்திற்று.

அவருடைய சுகத்தை யெல்லாம் பணயம் வைத்து யாருடைய க்ஷேமத்தை லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தாரோ, அதே தம்பியல்லவா இப்போது அவரை உதறி விட்டான்!

ராமநாதனிடம் அவர் கடன் வாங்கியது உண்மைதான்! ஆயிரம் ரூபாய்தான். அதுவும் வாங்கி ஐந்து வருஷங்களாகி விட்டன. முதல் மூன்று வருஷங்கள் ஒழுங்காகச் சர்மாவிடமிருந்து வட்டி வந்து விட்டது.

அதன் பிறகுதான் வட்டியும் நின்றது. வேண்டுமென்றே சர்மா வட்டி கொடுக்காமல் இருக்கவில்லை. குடும்பச் சுமை ஒருவேளைச் சோற்றுக்கே அவரைத் திண்டாடித் தவிக்க விட்டபோது, வட்டிப் பணத்துக்குப் பாவம், அவர் எங்கே போவார்!

நிலைமை மிதமிஞ்சிப் போய்விட்டது. சர்மா திணறினார்.

கடைசி முயற்சியாகத் தம்பியிடம் ஓடினார். தம்பி வெங்கு எங்கேயோ வெளியூரில் செழிப்பாகவே இருந்தான். அவன் விரும்பினால் நிச்சயமாக அவருக்கு எவ்வளவோ உதவ முடியும்.

"மன்னித்து விடுங்கள், அண்ணா. இந்தச் சமயத்தில் உங்களுக்கு உதவ முடியவில்லையே என்பதில் எனக்கு வருத்தந்தான். நானே இரண்டு மூன்று இடங்களில் கொடுக்கல் வாங்கலில் சிக்கிக் கொண்டு இருக்கிறேன். எனக்கும் ஒரே குழப்பமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது!"—என்று வெங்கு அநுதாபம் ததும்பும் குரலில் பேசிக் கையை விரித்து விட்டான்.

தம்பி பணம் இல்லை என்று சொல்லி விட்டாலும், சர்மா இறுதியாக அவனிடம் ஒன்று யாசித்தார்.

"வெங்கு! நீ பணம் கொடுக்க வேண்டாம். ஆனால் ஒன்று செய். எனக்காக உன் மாமனாரிடம் இரண்டு வார்த்தை சொல். இன்னும் ஆறு மாதத்தில் எப்படியாவது வட்டியும் முதலுமாக வாங்கிய கடனைத் திருப்பி விடுகிறேன். அதுவரை கோர்ட்டு நடவடிக்கையை நிறுத்தி வைக்கச் சொல். எனக்கு இருப்பதெல்லாம் அந்த ஒரு வீடுதான். நாளை வீடு போய் விட்டால் குழந்தை குட்டியுடன் நான் தெருவில்தான் நிற்க வேண்டும். நீ சொன்னால் உன் மாமனார் நிச்சயமாகக் கேட்பார்"—தாள முடியாத துக்கமும் துயரமும் தோய்ந்த குரலில் சர்மா பேசிய போது, அவர் கண் கலங்கி விட்டது.

வெங்கு சற்று நேரம் ஏதோ யோசித்தான்.

"மன்னித்து விடுங்கள், அண்ணா! இது நீங்களும் அவரும் சம்பந்தப்பட்ட விஷயம். நான் இதில் தலையிட்டு அவரிடம் நாலு வார்த்தை சொல்வது அவ்வளவு உசிதமாகாது."

கல் உள்ளம் படைத்த வெங்கு பேசிய பேச்சுத்தான் இது.

சர்மாவின் தலையில் யாரோ பெரிய பாறாங்கல்லைப் போட்டது போலிருந்தது. அவருடைய கடைசி நம்பிக்கையும் தகர்ந்து விட்டது.

வெங்குவா இப்படிப் பேசினான்! அவர் வளர்த்த தம்பி வெங்குவா இப்படி மறுத்து விட்டான்! அவர் கடன் பட்டது யாருக்காக, எப்போது என்பது அவனுக்குத் தெரியுமா!

அந்த விஷயம் அவனை வளர்த்த அவருக்கல்லவா நன்கு தெரியும்!

* * *

பள்ளிக்கூட உபாத்தியாயர் சிவசர்மாவை அந்த ஊரில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அவர் ஏழை உபாத்தியாயராக இருந்தாலும் எவ்வளவோ பேருக்குத் தயவு காட்டி

வந்தபோதெல்லாம் உதவியிருக்கிறார். அன்பும், சாத்விகமும், பொறுமையும் அவருடைய அற்புதமான குணங்கள்.

தமது இருபதாவது வயதில் குடும்பத்தின் நிர்ப்பந்தம் காரணமாக, சுலபமாகக் கிடைத்த பள்ளிக்கூட ஆசிரியர் வேலைக்குச் சேர்ந்தார். மேலே எவ்வளவோ படிக்க வேண்டும் என்று



தாம் கண்ட ஆசைக் கனவுகளையெல்லாம் பொசுக்கி விட்டு, குடும்பத்தின் பல பொறுப்புக்களையும், கடமைகளையும் அவர் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார்.

நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவருடைய தந்தை முதல் முதலாக உயிர் நீத்த போது, தாயும், பத்து வயதில் வெங்கிடசாமியும் ஆக இரண்டு ஜீவன்கள் சர்மாவின் வருவாயைத்தான் பூரணமாக நம்பியிருந்தன.

சர்மாவுக்குப் பள்ளிக்கூடத்தில் கிடைத்த வருமானம் மாதம் நாற்பது ரூபாய். இதைத் தவிர இரண்டு மூன்று இடங்களில் டியூஷன் வேறு வைத்துக் கொண்டிருந்தார்.

வருமானம் போதும் போதாததுமாக இருந்த போதிலும் தம்முடைய வயிற்றைக் குறுக்கி, அருமைத் தாயையும் அன்புச் சகோதரனையும் குறைவின்றிக் காத்து வந்தார்.

* * *

காலச் சக்கரம் உருண்டது.

அன்னையின் நிராத ஆசையின் வற்புறுத்தலுக்காக அந்த வருடம்தான் சர்மா பாருவைக் கரம் பிடித்தார்.

குடியும் குடித்தனமுமாகப் பிள்ளையின் பெருவாழ்வைக் கண்டுவிட்ட அவர் தாயும் ஒரு வருடத்துக்குப் பிறகு ஒருநாள் இந்த உலகை நீத்துப் போனாள்.

தம்முடைய வாழ்க்கையில் நிறைவேறாத ஆசையைத் தம்பியின் வாழ்க்கையிலாவது நிறைவு படுத்த விரும்பிய சர்மா, வெங்குவை மேல் படிப்புக்காகக் கல்லூரியில் சேர்த்தார். ஆசையோடு தம்பியைக் கல்லூரியில் சேர்த்து விட்டாலும் அவன் மேல்படிப்புக்கான செலவு போகப் போக அவரை நெருக்கிற்று.

நான்கு வருடப் பெரும் சோதனை வாழ்க்கையின் முடிவாக அந்த வருடம் வெங்கு பி. ஏ. படிப்பை முடித்துப் பட்டமும் பெற்றான்.

சந்தோஷத்தில் சர்மா தலைகால் புரியாமல் குதித்தார். அவருடைய கடமையில் தம்பியை முழு மனிதனாக்கி விட்டார். எல்லையற்ற பூரிப்பில் மனம் நிறைந்து போனார்.

தம்பிக்கு அடுத்தபடியாக அவர் செய்ய வேண்டிய கடமை அவனை எங்காகிலும் நல்ல உத்தியோகத்தில் அமர்த்தி விட வேண்டும் என்பதுதான். இதையும் முடித்து விட முழுமூச்சாகக் காரியத்தில் இறங்கினார். யாரிடமெல்லாமோ சிபாரிசுக் கடிதங்கள் வாங்கிக் கொண்டு பட்டணத்தில் போய்ப் பலரைப் பார்த்து அலைந்தார்.

எங்கும் ஏமாற்றம் காத்திருந்தது. சர்மா முயற்சியைக் கைவிடவில்லை.

கடைசியாக ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் காஷியர் வேலை காலியிருப்பதாக அறிந்தார். அதற்கு வேண்டியவர்களையெல்லாம் போய்ப் பார்த்தார். காரியம் கை கூடிற்று. ஆனால் முன் பணமாக ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டியிருக்

தது. சர்மா இதற்காகத் தயங்கவில்லை. எங்கேயோ போய் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினார். மூன் பணம் கட்டியாயிற்று.

வெங்குவுக்கு வேலை உத்தரவும் வந்தது. பட்டணத்திலல்லவா வேலை! இவ்வளவு காலம் பெற்ற தந்தையாகவும், தாயாகவும் இருந்து, மாசற்ற சகோதர அன்பிலும் அரவணைப்பிலும் தன்னைக் கட்டிக் காத்து வளர்த்த அண்ணாவிடமும், மன்னியிடமும் விடைபெற்றுக் கொண்டு வெங்கு சென்னைக்கு ரயிலேறினான். அன்போடு வளர்த்த தம்பியைத் தன்னைத் தனியனாக வெளியூருக்கு அனுப்பியபோது சர்மா கண்ணீர் விட்டு அழுதார்.

தம்பியின் வேலைக்காகத்தான் அப்போது சர்மா சுந்தரமய்யர் என்பவரிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். இந்தக் கடன் விஷயம் வெங்குவுக்கும் தெரியாது. அவர் பத்தினி பாருவுக்கும் தெரியாது. இந்த விஷயம் அவர்களுக்கு மன வருத்தத்தையும், கிலேசத்தையும் உண்டாக்கும் என்ற அச்சத்தில் தம்மோடேயே இதை வைத்துக் கொண்டார்.

ஆனாலும் பாருவும், வெங்குவும் 'ஆயிரம் ரூபாய் ஏது?' என்று கேட்டபோது சர்மா துணிந்து பொய் சொன்னார்; தாம் இவ்வளவு நாள் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்த பணம் என்று.

வெங்கு சென்னையில் தொழில்படத் துவங்கி வருஷங்கள் பல ஓடின. மாதா மாதம் அண்ணா சர்மாவுக்கு இருபது முப்பது என்று பணமும் அனுப்பிக் கொண்டிருந்தான்.

பட்டணத்து வாழ்க்கை வெங்குவை எவ்வளவோ மாற்றி விட்டது. முதலில் வாரம் ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். சிறிது நாட்களில் அது மாதம் ஒன்றாகியது. இம்மாதிரியான ஒரு அலட்சிய பாவமும் பற்றுக் குறைவும் அவனைப்புதிய வெங்குவாக்கி விட்டன.


இப்படிச் சென்ற இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு ஒருநாள் வெங்குவிடமிருந்து சர்மாவுக்குக் கடிதம் ஒன்று வந்தது. தம்பியின் கடிதத்தில் கண்ட செய்தி அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

தனக்குச் சென்னையிலேயே கல்யாணம் நிச்சயமாகி யிருக்கிறது என்றும், அவர் வந்து முகூர்த்தத்தை நடத்தித்தர வேண்டும் என்றும் அண்ணாவுக்கு அழைப்பு அனுப்பியிருந்தான் வெங்கு.

சர்மாவுக்கு ஏதோ வருத்தம் கலந்த துக்கம் நெஞ்சை அழுத்திற்று. தம்முடைய பிடியிலிருந்து ஏதோ நழுவிய பிரமை ஒன்று அவர் மனத்தில் எழுந்தது.

குடும்பத்தோடு சென்னைக்குப் போனார். கண்ணும் மனமும் குளிரத் தம்பியின் கல்யாணத்தைக் கண்டு ஆசிர்வதித்து வந்தார்.





சென்னை, டிராபிக் உதவி கமிஷனர் திரு ஆர். கே. குமாரன் அவர்களின் புதல்வி செள பிரேமலதாவுக்கும் திரு ரவீந்திர தாஸ் பி. ஈ.க்கும் சென்ற நவம்பர் 27-ம் தேதி வெகுசிறப்பாகத் திருமணம் சென்னையில் நடைபெற்றது. சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா உள்படப் பல பிரமுகர்கள் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

வாழ்க, மணமக்கள்!

'ஏன்டா வெங்கு, உன் கல்யாணத்தைப் பற்றி ஒரு வார்த்தை என்னைக் கலந்து பேசினயா!' என்று அவனை ஒரு வார்த்தைகூடச் சர்மா கேட்கவில்லை.

வளர்த்து ஆளாக்கிய அண்ணாவை அவன் இப்படி அவமரியாதை செய்தது பாருவுக்குத் தான் பெரும் ஏமாற்றமாக இருந்து, அவன் மீது ஒரு வெறுப்பையே உண்டாக்கி விட்டது.

"சிறுசுதானேடி அவன். இஷ்டமான பெண்ணைத் தேடிக் கல்யாணம் செய்து கொண்டான். இதில் என்ன தவறு! எங்கேயோ அவன் சுகமாக இருந்தால் சரி"—சர்மாவின் இந்தப் பேச்சில் சகோதர பாசம்தான் எப்படிப் பின்னிப் போய் விட்டது!

கல்யாணம் ஆனபிறகு வெங்குவிடமிருந்து சர்மாவுக்குப் பணம் வருவது நின்றது.

"பாவம்! அவனுக்கும் காலில் ஒரு கட்டாகி விட்டது. சம்சாரியாகப் போகிறவன் தானே! இனி எப்படிப் பணம் அனுப்ப முடியும்!" சர்மாவின் பேச்சில் இப்போதும் அந்தப் பாசம் விடவில்லை.

வெங்குவுக்கு மணமாகி மூன்று வருடங்கள் ஆகிவிட்டன அப்போது. சர்மா முதல் முறையாக வெங்குவின் மாமனார் ராமநாதனிடம் உதவி கேட்க விரைந்தார்.

ராமநாதன் சென்னையில் ஒரு மளிகைக் கடை உரிமையாளன். அளவுக்கு மீறிய செல்வத்தின் அதிபதி.

சர்மா ஆயிரம் ரூபாய் அவனிடம் கேட்டார். தன்னுடைய மாப்பிள்ளையின் அண்ணா என்ற மரியாதையில் ராமநாதன் அவருக்குக் கடன் கொடுக்க மறுக்கவில்லை.

* * *

சிவசர்மாவின் வீடு அன்று கோர்ட்டாரால் ஜப்தி செய்யப்பட்டுப் பலர் முன்னிலையில் ஏலத்துக்கு விடப்பட்டது.

பாரு அழுதாள். அந்த வேதனையே அவள் உயிரைக் குடிக்கும் யமனாயிற்று.

கடனெல்லாம் போகச் சர்மாவின் கைக்கு இறுதியில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வந்தது. அந்த வீடு அவர் பெயருக்குத்தான் இருந்தது. இருந்தாலும் இந்தத் தொகையில் பாதியைத் தம்பி வெங்குவுக்கு அனுப்பினார். அவருக்குத் தான் அவனிடம் எத்தனை பாசம்!

வீடு போய் மானமும் போன பிறகு தலை நிமிர்ந்து நடந்து வாழ முடியவில்லை.

கொஞ்ச நாட்களில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றார். அப்போது பிராவிடண்ட் நிதியாகக் கொஞ்சம் பணம் வந்தது. அதைக் கொண்டு பெண் கமலாவின் கல்யாணத்தை முடித்தார். அவருக்கு இருந்த செல்வமெல்லாம் அவள் ஒருத்திதான். அவளையும் வாழ்க்கையில் ஒருவனுடன் துணைப்படுத்தி விட்டார்.

* * *

மனிதனுடைய வாழ்க்கையில் சிற சிறமான பேதங்களை, மாற்றங்களைச் சிருஷ்டித்துக் கொண்டு காலத்தாய் நடந்தாள், ஓடினாள்.

அண்ணாவின் பேதமிலா அன்பில் பாசத்தில், பற்றில் வளர்ந்து ஆளான வெங்குவின் வாழ்க்கையில்தான் இன்று எவ்வளவு பேதமும் மாற்றமும் ஏற்பட்டு விட்டன!

வேண்டாத யோசனைகள், தகாத சேர்க்கைகளாக வெங்குவின் வாழ்க்கையில் விதி புகுந்தது. அவன் மனத்தின் அடித் தளத்திலே அகர மாற்றமே ஏற்பட்டு விட்டது.

திடீரென்று ஒரு நாள் வேலையை ராஜினாமா செய்தான். மளிகை வியாபாரத்தை விட்டுப் பங்கு மார்க்கெட்டில் ஈடுபட்டிருந்த ராமநாதனுக்கு மாப்பிள்ளையும் கூட்டாளியானான்.

புது வியாபாரத்தில் இருவருக்கும் கொஞ்ச நாள் லாபம் மேலே மேலே வந்தது. அதிர்ஷ்ட தேவதையின் அருள் செல்வமாகச் சொரிந்தது.

விலைவாசிகளின் திடீர் வீழ்ச்சியில் பங்கு மார்க்கெட்டில் பலரும் நிலை குலைந்து போனார்கள். வெங்குவும் ராமநாதனும் தாள முடியாத ஒரு அடி விழுந்ததாகவே உணர்ந்தார்கள்.

வெங்குவுக்கு அவனுடைய வாழ்க்கையில் இது பயங்கரச் சோதனையாகவே போய்விட்டது. அவனால் வெளியே தலை காட்ட முடியவில்லை. மாமனார் ராமநாதன் வீட்டோடேயே இருந்தான். பங்கு மார்க்கெட்டில் ஏற்பட்ட நஷ்டம் பெரிய விவகாரமாகி, மாமனாருடன் மாப்பிள்ளையையும் பலருக்குக் கடனாளியாக்கி இருவரையும் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது!

* * *

வாசல் திண்ணையில் படுத்திருந்த வெங்கு தூக்கம் வராமல் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருந்தான்.

இப்போதுதான் அவனுக்கு நினைவு வந்தது. ஒரு காலத்தில் தன்னிடம் உதவி கோரி அண்ணா ஓடி வந்தது. பணமிருந்தும் மனமில்லாமல், ஏமாற்றத்துடன் அண்ணாவை அப்போது திருப்பி அனுப்பிய தன் செய்கை அவன் நெஞ்சை இப்போது நோகச்செய்தது.

ஆமாம், அந்தப் பாபம் தான் இன்று தன்னைப் பழி வாங்குகிறதோ! காலமெல்லாம் தன்னுடைய சுகத்துக்காகவே மூச்சுவிட்ட

அந்த உத்தமர் இன்று அவன் விடும் பெரு மூச்சை அறிவாரா!

புயலிலே கொந்தளிக்கும் கடல் போல், எண்ண அலையிலே சிக்கி உலக சிந்தனையை மறந்துவிட்ட வெங்கு, 'ஐயா' என்ற குரல் தன் காதருகே ஒலித்தது கேட்டுத் திடுக்கிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்தான். இந்த நள்ளிரவில் யார் கூப்பிடுகிறார்கள்!

"யாரது!" அவன் குரல் காரணமின்றி நடுங்கியது.

இருட்டில் முகம் சரியாகத் தெரியா விட்டாலும், உருவத்திலிருந்து ஒரு சாமியார் என்று தெரிந்தது. கையில் ஒரு மூட்டை, காவி வேட்டியும், ஜிப்பாவும் அணிந்திருந்தார். பாதி முகத்தைத் தாடியும் மீசையும் மறைத்திருந்தன. வயதை நிர்ணயிக்க முடியவில்லை.

வெங்குவின் கேள்விக்கு இப்போது அவர் பதில் சொன்னார்:

"ரயிலடியிலிருந்து நேராக வருகிறேன். விடிகிற வரை திண்ணையில் படுத்திருக்கலாமா என்று கேட்கவே தங்களை எழுப்பினேன். நித்திரையைக் கலைத்ததற்கு மன்னிக்க வேண்டும்."

"படுத்துக் கொள்ளுங்கள்" என்றான் வெங்கு சுருக்கமாக.

திண்ணையில் துண்டை விரித்தார் சாமியார். கையிலிருந்த மூட்டையைத் தலைக்கு வைத்துக் கொண்டு கட்டையைக் கீழே தள்ளினார்.

வருமா வருமா என்றிருந்த தூக்கம் வெங்குவின் கண்களை அழுத்திற்று. கண்களை மூடினான்.

சாமியாரின் பேச்சொலி மீண்டும் கேட்டது.

"உங்களுக்கு இதே ஊர்தான் சொந்தமோ!"

"ஆமாம்!"

"நான் வடக்கே யிருந்து வருகிறேன். உங்களுக்கு இந்த ஊரிலே வெங்கு சாமியைத் தெரியுமா!" என்றார் சாமியார்.

படுக்கையிலிருந்து விசுக்கென்று எழுந்தான் வெங்கு. காரணமின்றி அவன் உள்ளம் படபடத்தது.

"நீங்கள் யாரைத் தேடி வந்திருக்கிறீர்கள்! எந்த வெங்குசாமி என்று சொல்ல முடியுமா!" வெங்கு மடமட வென்று கேட்டான்.

"பள்ளிக்கூட வாத்தியாராய் இருந்த சிவ சர்மா என்பவரின் தம்பி வெங்குசாமி என்பவரைத்தான் நான் பார்க்க வேண்டும். உங்களுக்கு அவரைத் தெரியுமா!"

"அந்த வெங்குசாமி நானே தான் சுவாமி. உங்களை யார் அனுப்பினார்கள்! என்னுடைய அண்ணு சிவசர்மாவை உங்களுக்குத் தெரியுமா!" ஏதோ பரபரப்பு, நடுக்கம், பீதி இவற்றோடு வெங்கு பேசினன்.

"ஆ...நீங்களா வெங்குசாமி!" வியப்பும், திகைப்பும் கலந்த குரலில் சாமியார் கேட்டார்.

வர்ணிக்க முடியாத வியப்புணர்ச்சி இருவரையும் சிறிது நேரத்துக்கு ஊமையாக்கி விட்டது. திகைப்பு நீங்கிய பிறகு இருவரும் மறுபடியும் படுக்க வில்லை. வெங்குசாமியைத் தேடி வந்த கதையைச் சாமியார் சொன்னார்.

* * *

"ஸ்திரமற்ற இந்தப் போலி வாழ்க்கையை உதறிவிட்டு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு துறவறம் பூண்டேன். தெற்கே கன்யா குமரியிலிருந்து வடக்கே காஷ்மீர் வரை நான் சுற்றி அலையாத ஊர் கிடையாது. இப்படியே சுற்றிக்கொண்டு இருந்தவன், இரண்டு வருடங்களுக்கு முன்பு காசி போய்ச் சேர்ந்தேன்.

"காசியில் நான் முதல் முதலாகச் சந்தித்தது காயத்ரீஸ்வரர் என்ற சாதுவாகும். என்னை விட வயதில் பெரியவர். முகத்தில் தெய்வக் களை சொட்டியது. கங்கை நதிக் கரையில் அமைதி நிரம்பிய ஒரு இடத்தில் அவர் பர்ண சாலை இருந்தது.

"இறைவனுக்கான பூஜா வாழ்க்கையில் அவரிடம் நான் அடைக்கலம் புகுந்தேன். கூடவே இருந்து அவருடைய மனித சேவையில் என்னையும் அர்ப்பணித்துக் கொண்டேன். ஆமாம், அவர் சேவை மனித சேவைதான்.

"ஆண்டவனின் சோதனைபோல் சென்ற மாதம் சுவாமிகள் திடீரென்று நோய்வாய்ப் பட்டார். பர்ணசாலையில் தர்ப்பப் பாயில் உடலைக் கிடத்தி இறைவன் நாமத்தைச் சதா ஜபித்து வந்தார். எழுந்து நடமாட முடியவில்லை. நான்தான் அவருக்கு வேண்டிய பணிவிடைகள் புரிந்து வந்தேன்.

"சில நாட்களுக்கு முன்பு இந்த ஊர்க்காரர் ஒருவர் காசிக்கு வந்திருந்தார். என் குரு நாதரைத் தரிசிக்க ஆசிரமத்துக்கு வந்திருந்தார். அவரிடம் என் குருநாதர் மிகவும் அக்கறையாக இந்த ஊரைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டார். அந்த ஊரில் இருந்த உபாத்தியாயர் சிவசர்மா என்பவரைப் பற்றியும் அவர் தம்பி வெங்குசாமியைப் பற்றியும் ஆவலோடு விசாரித்தார்.

"வந்தவர் சொன்னார்: 'சிவ சர்மா எங்கே போனார் என்பதே தெரியவில்லை. அவர் தம்பி வெங்குசாமி இவ்வளவு காலம் குறைவின்றி சுபிட்சமாகத்தான் இருந்தான். ஆனால் விதியின் விளையாட்டில் அவனுடைய வாழ்க்கையும் சமீபத்தில் படுமோசமாகி விட்டது. பங்கு மார்க்கெட்டில் புகுந்து அவனும் அவன் மாமனும் ஏக நஷ்டத்துக்குள்ளாகி, கோர்ட்டுக்கு விவகாரம் போய்விட்டது.'

"சுவாமிகளுக்கு இந்தச் செய்தி பேரதிர்ச்சியைக் கொடுத்தது. பாசம், பந்தம் இவற்றைத் துறந்திருந்த அவர் கண்களில் ஏதோ ஏக்கம் நீரை உகுத்து விட்டது. 'வெங்கு கஷ்டப்படுகிறனு, பாவம்!' என்று புலம்பினார்.

"'சுவாமிகளுக்கு அவர்களைத் தெரியுமா!' என்று வந்தவர் கேட்டார்.

"'தெரியும், நன்றாகத் தெரியும் அவர்களை. வெங்கு என் பிள்ளைமாதிரி' என்றார் சுவாமிகள்.

"அன்றைய தினம் முதல் சுவாமிகளின் உடல் நிலை ரொம்பவும் மோசமாகிக் கொண்டு வந்தது. யாரும் அவரை நாடி வர நான் அனுமதிக்கவில்லை. படுத்த படுக்கையாய்க் கிடந்தார். அவருடைய ஸ்மரணை யெல்லாம் இறைவன் நாமம். நடுநடுவே 'ஐயோ! வெங்கு எப்படியிருக்கிறானோ! கடன்பட்டு எங்கெல்லாம் அலைந்து தவிக்கிறானோ!' என்று புலம்பவும் செய்தார். நோயைக் காட்டிலும் இந்தத் தீராத ஏக்கமே அவர் உடலைப் பெரிதும் வருத்தி விட்டது.

"ஒரு நாள் என்னை அழைத்தார்.

"'ஆனந்தா! நம்முடைய பர்ண சாலையில் உள்ள பண்டங்கள், பொருள்கள் எல்லாவற்றையும் காசாக்கிக் கொள். இறைவன் அருளில் அன்பர்கள் பலர் அளித்த பண்டங்கள்

அவை. மனித சேவைதானே நமக்கு முக்கியம். உதவி யாருக்குப் போனால் என்ன! கஷ்ட தசையில் இருக்கும் வெங்குவுக்கு உதவலாமே' என்று கூறினார்.

"நான் திகைத்து நின்றேன்.

"'யோசிக்க நேரமில்லை, ஆனந்தா! இன்றே புறப்பட்டு விடு. ஊரிலே விசாரித்து அவனிடம் சேர்ப்பித்து விடு, நம் உதவித் தொகையை. அவனுடைய நிலைமை விபரீதமாவதற்கு முன்பு நம் உதவி போக வேண்டும். இந்த உடல் நேராக இருந்தால் நானே ஓடி விடுவேன். எனக்காக நீ செய்யும் இந்த உதவி ஒரு குடும்பத்தை வாழ வைக்கப் போகிறது' என்றார்.

"'சுவாமி, உங்களை இந்த ஸ்திதியில் விட்டு விட்டு எப்படிப் போவது!' என்று கேட்டேன்.

"'ஆனந்தா! என்னைக் குறித்துக் கவலைப் படாதே. நான் வாடிப்போன சருகு. வெங்குவோ இன்னும் வாழ வேண்டிய பச்சை இலை. நீ புறப்படும் போது என் கண்கள் மூடி விட்டாலும், உன் பயணம் ஒரு கணம் கூடத் தாமதிக்கக் கூடாது. இவ்வளவு நாள் என்னுடன் நீ பணி செய்ததற்கு, இந்த ஒரு உபகாரம் செய்' என்றார்.

"என்னுடைய மன நிம்மதிக்காக அடுத்த ஆசிரமத்திலிருந்து இருவரை அழைத்து வந்து, அவருடன் இருந்து கவனித்துக் கொள்ளச் சொன்னேன்.

"புறப்படுவதற்கு முன் என்னைச் சுவாமிகள் மறுபடியும் அழைத்தார். இப்போது என்னிடம் ஒரு காகிதத்தில் ஏதோ எழுதிக் கொடுத்தார். அதைக் கொடுக்கும் போது, 'ஆனந்தா! வெங்குவிடம் உதவித் தொகையைக் கொடுத்த பிறகு, இந்தக் காகிதத்தில் எழுதியிருப்பதைப் படித்துப் பார். அது வரை இதைப் பிரித்துப் படிக்காதே' என்று சொன்னார்.

"நான் புறப்பட்டேன். கங்கை ஆற்றைக் கடந்து ரயிலடிக்கு வந்தேன். இறைவன் சோதனைபோல அன்றைக்கு ரயில் இரண்டு மணிநேரம் தாமதமாக வருகிறது என்றார்கள். காத்திருந்து ரயில் ஏறினேன்.

"ரயில் வந்ததும் ஏறி உட்கார்ந்தும் விட்டேன். ரயில் புறப்படும் சமயம் ஆகி விட்டது. அப்போதுதான், சுவாமிகளைக் கவனித்துக் கொள்வதற்காக நான் அமர்த்தி விட்டு வந்த இருவரில் ஒருவர் பரக்கப் பரக்க என்னைத் தேடி வந்தார். அவரைப் பார்த்தவுடனேயே என் உடல் ஏதோ பயத்தால் நடுங்கிற்று. அவரும் 'நான் புறப்பட்டு வந்த ஒரு மணி நேரத்தில் சுவாமியார் மீளாத நித்திரையில் ஆழ்ந்து விட்டார்' என்ற செய்தியைப் பேரிடியாக என் செவியில் போட்டார்.

"இனி நான் சொல்ல என்ன இருக்கிறது! தான் கண் மூடினாலும் என் பயணம் நிற்கக் கூடாது என்று சொல்லி யிருந்தாரல்லவா! அந்த வாக்கைக் காப்பாற்ற ஓடோடியும் இங்கு வந்தேன். என்னுடைய கடமை முடிந்து விட்டது. அவருடைய ஆன்மாவும் சாந்தியை அடைந்து விடும்."

* * *

கதையைச் சொல்லி முடித்த சாமியார் தம் கையிலிருந்த பண மூட்டையை வெங்குவிடம் கொடுத்தார். பிறகு தம் மடியில் முடிந்து வைத்திருந்த விபூதிப் பையிலிருந்து நடுங்கும் கைகளோடு அந்தக் கடிதத்தைச் சாமியார் எடுத்தார். திண்ணையைவிட்டு இறங்கி நின்றவர், தெரு விளக்கின் மங்கலான வெளிச்சம் படும்படி கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். வெங்குவுக்கும் காதில் படும்படியாகவே அதைப் படித்தார். அதில் காயத்ரீசுவர சுவாமிகள் எழுதியிருந்தது இதுதான்:

"ஆனந்தா! இன்று நீ தேடி வந்திருக்கும் வெங்குசாமியைப் பிள்ளையாகப் போற்றி வளர்த்து ஆளாக்கும் பேறு பெற்ற இந்தக் கட்டையைப் பூர்வாசிரமத்தில் வெங்கடசர்மா என்று தான் அழைப்பார்கள் —" இப்படிக்கு காயத்ரீசுவர சுவாமிகள்."

இரவின் மயான அமைதியைக் குலைத்துக் கொண்டு, "ஐயோ! அண்ணா! நீங்களா!" என்று வெங்கு கதறினான். அவனுடைய கதறலுக்குச் சுருதி கூட்டுவது போலத் தூரத்தில் எங்கேயோ ஆந்தை ஒன்றும் அலறிற்று.

டி.கே.சி.யின் கடிதங்கள்


திருக்குற்றாலம்,
23—5—48

ராஜேந்திரன் அனுப்பிய 'மெக்கானோ'வுக்கு உயிரில்லை. கழற்றியும் ஒன்றித்தும் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. குற்றால லிங்கம் எத்தனையோ சிருஷ்டிகளைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறான். பின்னைத் தொட்டியிலிருந்து பிரங்கி வண்டி சறுகப் புதுப் புது எந்திரங்களைச் செய்து வருகிறான். வெகு பத்திரமாய்த் தட்டு முட்டுகளை வைத்துக் கொள்ளுகிறான். ஒரு திருகைக்கூட தொலைக்க வில்லை. நான் கையாண்டால் இதற்குள் பாதிக்கு மேல் தட்டு முட்டுகள் காணாமல் போயிருக்கும். முன்னமேயே அவன் எஞ்சினீர். மெக்கானோ வந்த பிறகு படே படே எஞ்சினீராகப் போய் விட்டான். மெக்கானோ பாடு கஷ்டந்தான்.

இங்கே மழை இல்லை. எல்லாம் வெற்று வனம். ஆனாலும் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு நாளில் மழை பெய்ய வேண்டும். கூடுமானால் வீட்டை ஆரம்பித்து விட்டுப் புறப்பட்டு வருகிறேன்!

[illegible]
டி. கே. சிதம்பரநாதன்


பூரண வாய் சுத்தத்திற்கென
தயாரிக்கப்பட்டது
• கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடி
கள்.
• அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு
இணைக்கப்பட்ட முடிகள்.
• உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது;
சுலபமாக சுத்தம் செய்கிறது.
• மிருதுவான சுத்தி—பல்லின் எனுமலை
பாதிக்காது.
• மெதுவான முறையில் ஈறுகளை பலப்
படுத்துகிறது.
அதிக பலனுடன்!
பற்களைப் பூரணமாக சுத்தம்
செய்கிறது. ஈறுகளை மிருது
வாகத் தடவி விடுகிறது.
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
மலிவு–நீடித்த உழைப்பு


நறுமணம் விரும்புகிறவர்களுக்கு...
மைசூர் சந்தன சோப்பினால் ஸ்னானம் செய்வதே ஓர்
அலாதியான இன்ப அனுபவம். அதன் மிருதுவான
நுரை சருமத் துவாரங்களிலும் ஊடேறி சுத்தம்
செய்து, சருமத்தை மழமழப்பாகவும் பளபளப்பாக
வும் பட்டுப்போல் செய்கிறது. அதன் இன்பமூட்டும்
ரம்மியமான மணம் உங்கள் தேக முழுவதும் பல மணி
நேரம் நீடித்துப் பரிமளிக்கும்.
மைசூர்
சந்தன
சோப்
BANGALORE
Mysore Sandal Soap
கவர்ன்மெண்ட் சோப் பேக்டரி, பெங்களூர்
இந்திய சோப், வாசனைப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்

இதயத் தந்தி!



என்.எஸ்.சிதம்பரம்

அன்று கலாவிநோத சபாவில் என்றும் எதிர்பார்த்திராத பெருங் கூட்டம். கலாபிமானிகள் ஒவ்வொருவரும் இடத்துக்கு முந்திக் கொண்டிருந்தனர். வீணை வித்வரத்ன ஸ்ரீ வித்யா சங்கரின் வீணைக் கச்சேரி என்று விளம்பரப்படுத்தப் பட்டிருந்ததே அவ்வளவு நிரளான கூட்டத்துக்குக் காரணம்.

வித்யாசங்கரின் புகழ் எங்கும் பரவி யிருந்தது. நாரதரே வித்யா சங்கராக அவதாரம் செய்திருக்கிறார் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். பட்ட மரமும் துளிர்க்கும் படியாக வீணை வாசிக்கும் திறன் படைத்த வித்தியாசங்கரின் கானாமிருதத்தைப் பருகுவதற்குக் கலா ரசிகர்கள் திரண்டு வந்து குழுமி யிருந்ததில் ஆச்சரியமில்லை.

குறிப்பிட்ட காலப்படி வீணையரங்கு ஆரம்பமாகியது. வழக்கம்போல் பேகட ராக வர்ணத்தை வித்யாசங்கர் வீணையில் மீட்டத் தொடங்கினார். வித்யாசங்கர் பேகட ராக வர்ணத்தைத் தந்தியில் மீட்டத் தொடங்கினாரானால், எப்போதும் அந்தத் தந்தி மீட்டியிருந்து எழும் இன்ப ஒலி இசை மண்டபம் முழுதும் நிரம்பிக் கேட்போர் செவிகளில் நிறைவான சுகானந்தத்தைப் பாய்ச்சி நிற்கும். ஆனால் அன்று ஏனோ அவ்விதமில்லை. வீணையின் நாதமும் உணர்ச்சியற்ற விதத்தில் வெளிப்பட்டது. பேகட ராக வர்ணம் முடிந்தவுடன் இரண்டு கீர்த்தனங்களை வாசித்து விட்டுப் பைரவி ராக ஆலாபனையைத் தொடங்கினார் வித்யாசங்கர்.

பைரவி ராகம் களை கட்டவில்லை. ரசிக சிகாமணிகள் ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டனர்.

"கமலரத்னம்! வித்யாசங்கரின் வாசிப்பா இது! உள்ளத்தை ஊடுருவிப் பாயவில்லையே!"

"அதைப்பற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன், அருணாசலம்! பைரவி ராகத்தை எவ்வளவு அழகாகப் பரவசப்படும்படி வாசிப்பார் வித்யாசங்கர். இன்று ஏன் இப்படிப் படுமோசமாகப் பைரவி அமைகிறது! பைரவி பைரவியாகவே தெரியவில்லை!"

"ஆமாம். அதோ சபா காரியதரிசி சபாபதி எழுந்து மேடைக் கருகில் வருகிறாரே. ஒரு வேளை கச்சேரியை நிறுத்தச் சொல்வாரோ என்னவோ!"

"இருக்கானும் இருக்கும்."

கமலரத்னமும், அருணாசலமும் எதிர்பார்த்தபடி சபா காரியதரிசி சபாபதி மேடைக் கருகில்வந்து வீணையை நிறுத்தச் சொல்லிப் பேச ஆரம்பித்தார்.

"கலாரசிக அன்பர்களே, ஸ்ரீ வித்யாசங்கர் வீணை வாத்தியத்தில் நிகரற்றவர் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இன்று அவருடைய வாசிப்பைக் கேட்டதிலிருந்து, அவருக்கு உடலோ, உள்ளமோ நலமில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. நமது சபாவில் முன்னேயே கச்சேரி ஏற்பாடு செய்து விட்டபடியால், நான்தான் அவரைக் கண்டிப்பாக வரவேண்டு மென்று வற்புறுத்தி அழைத்து வந்தேன். நான் அழைக்கும்போதே அவர் நலமில்லாமல்தான் இருந்தார். அடுத்த மாதத்தில் கச்சேரியை மாற்றி வைத்துக் கொள்ளும் படி ஸ்ரீ வித்யாசங்கர் சொல்லியும், அவருடைய வீணை இசையில் உள்ள பேராவலின் காரணமாகவும், உங்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காகவும், விளம்பரம் செய்து விட்டபடியால் ஏமாற்றம் அளிக்கக்கூடாது என்பதற்காகவும் நானே பிடிவாதமாக அவரை அழைத்து வந்தேன். அப்படி நான் அழைத்து வந்திருக்கக் கூடாது தான். இப்போது மங்களத்துடன் ஸ்ரீ வித்யாசங்கர் கச்சேரியை முடித்துக் கொள்ளுவார்."

காரியதரிசி சபாபதி பேசி முடித்ததும், கலாரசிகக் கூட்டம் பெருத்த ஏமாற்றத்துடன் கலைந்தது.

2

வித்யாசங்கருக்கு வீணை என்றால் உயிர். வீணாகானத்தைப் பரப்புவதற்காகவே இசைத்



தெய்வம் தன்னைப் படைத்திருப்பதாக எண்ணினார். எந்நேரம் பார்த்தாலும் 'இன்னிசை வீணையில் எழும் நாதமே, இன்னுயிர்க் களித்திடும் ஞானமுதமே!' என்று பாடிக்கொண்டு வீணையும் கையுமாக இருப்பார். அவருடைய வாழ்க்கைத் துணைவி ரஞ்சிதத்துக்கோ வித்யா சங்கர் இப்படி இரவு பகல் எந்த நேரமும் வீணையும் கையுமாக இருப்பது பிடிக்கவில்லை. அவளுக்குச் சங்கீதத்தில் விருப்பமில்லை என்று சொல்லிவிட முடியாது. எதற்கும் ஒருநேரம், அளவு இடையாதா என்பதுதான் அவளது உள்ளத்திலிருந்து அடிக்கடி உதிக்கும் கேள்வி. அந்தக் கேள்வியை வாய் திறந்தே ஒருநாள் அவள் கேட்டு விட்டாள்.

"எப்போது பார்த்தாலும் உங்களுக்கு இந்த வீணையும் பாட்டும்தானா!"

"பின்னே என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்! என் தொழில், என் உயிர், என் ஆர்வம் யாவும் இந்த வீணைதானே! ரஞ்சிதம், உயிரை விட்டு உடல் பிரிந்திருக்க முடியுமா!"

"குடும்பத்தைப் பற்றிய கவலை கொஞ்சமும் உங்களுக்கிருந்தால், இப்படியெல்லாம் தத்துவார்த்தம் பேசுவீர்களா!"

"நம் வாழ்க்கையே ஒரு தத்துவம்தானே, ரஞ்சிதம்! குடும்ப மகாலட்சுமி நீ இருக்கும்போது, இடும்பை தரும் குடும்பத்தைப் பற்றிய வீண் கவலை எனக்கு எதற்கு!"

"அப்படியென்றால், குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட்டுப் பட்டு, உள்ளம் நைய வேண்டியவள் நான். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் வீட்டையே மறந்து, சதா வீணையை மீட்டிக் கொண்டிருக்க வேண்டியது நீங்கள். அப்படித்தானே!"

ரஞ்சிதம் வித்யாசங்கரிடம் கோபமும் துயரமும் கலந்த குரலில் கேட்டுக் கொண்டிருக்கும் போது, இருவருடைய அன்பின் சின்னமாக உதித்த அருமைச் செல்வி ஆனந்தா வந்து குறுக்கிட்டாள்.

"ஏனம்மா, அப்பாவைச் சிடு சிடு என்கிறே. அப்பா எவ்வளவு அருமையாக வீணை வாசிக்கிறாங்க, தெரியுமா!" இதுதான் ஆனந்தா தன் அன்னையிடம் கேட்ட கேள்வி.

"எல்லாம் எனக்குத் தெரியும், ஆனந்தா. அப்பாவைப் போலத்தானே பெண்ணும் இருக்கும்" என்றாள் வெடுக்கென்று ரஞ்சிதம்.

"பின்னே உன்னைப் போல வீணையைக் கண்டால் சீறி விழும்படியாகவா இருக்க வேண்டும் ரஞ்சிதம்!" என்று கேட்டார் வித்யாசங்கர்.

ரஞ்சிதம் பதில் பேச வில்லை. ஆனந்தா மேலும் சொன்னாள்.

"அப்பா, சொல்லி விட்டேன். சதா நீங்களும் அம்மாவும் கோபமாப் பேசிக்கிறது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்க வில்லை!"

"பார்த்தாயா, ரஞ்சிதம். ஆனந்தாவுக்கு இருக்கிற விவேகத்திலே பாதி கூட உனக்கு இல்லே" என்றார்.

"அப்பா, நேத்தி 'முருகன் அருள்வான்' என்ற பாட்டைப் பாடிக்கிட்டு வீணையிலே அழகா வாசிச்சீங்களே, அதை இன்னொரு தரம் வாசிக்க மாட்டீங்களா!" என்று ஆவலோடு கேட்டாள் ஆனந்தா.

ஆசையோடு கேட்ட தன் செல்வத்தின் கோரிக்கையை நிறைவேற்ற எண்ணங் கொண்டு, வித்யாசங்கர் வீணையை எடுக்கப்



போனார். ரஞ்சிதத்துக்கு இது சிறிதும் பொறுக்கவில்லை.

"வீணை வாசிப்பதிருக்கட்டும். வீட்டில் வெல்லம் இல்லை. எழுந்து போய் முதலில் வெல்லத்தை வாங்கி வாருங்கள். பிறகு சாவகாசமாக வீணை வாசிக்கலாம்" என்று கடைக்குப் போகும்படி துரிதப்படுத்தினாள். ரஞ்சிதத்தின் சுபாவத்தை அறிந்த வித்யாசங்கர் வார்த்தையை மேலும் வளர்த்த விரும்பாமல், ஆனந்தாவுக்குச் சமாதானம் சொல்லி விட்டுக் கடைக்குப் போனார். இருலட்சுமியின் வாய்மொழியைத் தட்டி நடக்கவா முடியும்!

3

சங்கீத மும்மூர்த்திகளும், சரவணபவனுகிய தமிழ்த் தெய்வம் கோலக்குமரனும், குழலுனிக் குவலயத்தைக் கொள்ளை கொண்ட கோகுல பாலனும் பட உருவில் காட்சி தரும் தனிப் பூசை அறையில் உலகைத் தன் இசையால் வசப்படுத்தும் வீணை தக்க பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தது. இந்தப் புனிதமான அறைக்குள் நுழைந்தாள் ஆனந்தா. வீணையின் அழகிய உருவம் அவளது கவனத்தை இழுத்தது. வீணையைப் பார்த்ததும் முன்னமேயே வீணையின் இசையில் உள்ளத்தைக் கொடுத்திருந்த அவளுக்கு, வீணையின் தந்திகளைத் தன் தந்தையைப் போல் மீட்டிப் பார்க்க வேண்டுமென்ற அவா பிறந்தது. "அம்மாவோ சமையல் அறையில், அப்பாவோ கடை வீதியில்" என்ற எண்ணத்துடன், வீணையின் தந்திகளைத் தன் கை விரல்களால் மீட்டத் தொடங்கினாள். மீட்ட வில்லை. தட்டிப் பார்த்தாள்! மீட்டிப் பழக்கமே இல்லாதவளுக்கு, மீட்டும் முறை தெரிய வகையேது! வீணையின் தந்திகள் தட்டுப்பட்டு, அதனால் உண்டான ஓசையைக் கேட்டுச் சமையற்கட்டில் இருந்த ரஞ்சிதம் ஓடி வந்தாள்.

"ஆனந்தா, வீணையை என்ன செய்கிறாய்!"

"ஒன்றும் செய்யவில்லை, அம்மா. சும்மா மீட்டிப் பார்க்கிறேன்."

"மீட்டிப் பார்க்கிறாயா! சரிதான். வீணையைக் கீழே வைத்து விடு."

"ஏனம்மா என்னைத் தடுக்கிறே!"

"ஒன்றும் தெரியாமல் தந்தியைச் சும்மா மீட்டலாமா! நீ வீணையை மீட்டிக் கொண்டிருப்பதை உன் அப்பா பார்த்து விட்டால் கண்டபடி திட்டி அடிப்பாங்க."

"அப்பா அடிப்பாங்களா, அம்மா!"

"ஆமாம். உன் அப்பாவைத் தவிர வேறு யாருமே அந்த வீணையைத் தொடக்கூடாது."

"என்னை ஒன்றும் அப்பா கோவிச்சுக்க மாட்டாங்க, அம்மா!"

"நான் சொல்வது தெரியாமல், மேலும் மேலும் பேசிக்கொண்டு போகிறாயே. நான் கூட அந்த வீணைக்குப் பக்கத்திலே போகிறதில்லை யென்றால்!......"

தன் தாய் ரஞ்சிதம் மேலும் எச்சரிக்கை செய்ததைப் பொருட்படுத்தாமல், ஆனந்தா வீணையின் தந்திகளை மீட்டத் தொடங்கினாள். டிங், டிங் என்ற வீணை நாதம் பரவியது. தன் சொல்லைத் தட்டி நடக்கும் ஆனந்தாவின்மேல் ரஞ்சிதத்துக்கு அதிகக் கோபம் உண்டாகியது.

"சொல்லத்தான் சொல்கிறேன். நீ மட்டும் வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாயே. ஏன் ஆனந்தா, அந்த வீணை எதற்காகும்! அது என்ன உனக்கு விளையாடுவதற்காகவா வாங்கி வைத்திருக்கிறது!" என்று கடுமையாகக் கேட்டாள் ரஞ்சிதம். டிங் டிங் என்னும் நாதத்தில் சொக்கிப் போயிருந்த ஆனந்தாவுக்குத் தன் தாயின் கடும் கோப மொழியைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

"ஏம்மா, வீணைன்னா எனக்கு என்னன்னு தெரியாதா! நான் வீணை வாசிக்கிறது உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கு. இதோ பாரும்மா, இந்த வீணையின் தந்திகள் எல்லாத்தையும் சேர்த்து ஒரேயடியா மீட்டுகிறேன். எப்படியிருக்குன்னு கேளும்மா" என்று சொல்லிக்கொண்டே வீணைத் தந்திகள் எல்லாவற்றையும் சேர்த்து வேகமாக ஒரே தட்டாக மீட்டினாள். அவ்வளவுதான். 'படீர்' என்ற ஒரு சத்தம் முரணான இசையுடன் கேட்டது. தந்திகளை மாறுபாடாக மீட்டியதில் வீணையின் மந்திரஸ்தாயி அறுந்து விட்டது.

"யார் வீணையைத் தொட்டது!" என்ற பயங்கரக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள் ஆனந்தா.

தன் தகப்பனார் வித்யாசங்கர் எதிரே கனல் கக்கும் பார்வையுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்ட ஆனந்தா பதறிப் போய்த் துடித்து விட்டாள்.

"யார் உன்னை வீணையைத் தொடச் சொன்னது!" என்று மீண்டும் ஆரூத சினத்துடன் அதட்டினார் வித்யாசங்கர்.

"அப்பா!" என்றாள் கெஞ்சும் பாவனையுடன் ஆனந்தா.

"அப்பாவும், மண்ணாங்கட்டியும் தான். வீணையின் மந்திரத்தையே அறுத்து விட்டாயே! என் உயிரையே வாங்கி விட்டாயே! யார் வீணையைத் தொடச் சொன்னது! யார் உன்னைத் தொடச் சொன்னது!" என்று உரத்த குரலில் ஆனந்தாவிடம் நெருங்கினார் வித்யாசங்கர்.

யாரும் தன்னை இதுவரை அதட்டி அறியாத ஆனந்தா பயந்து விட்டாள். அவள் வாயிலிருந்து "அப்பா" என்ற சொல்லைத் தவிர வேறு வார்த்தையே வரவில்லை. ஆனந்தாவின் இந்த நிலையைப் புரிந்து கொள்ளாத, வீணையின் மேல் உயிரையே அர்ப்பணம் செய்திருந்த வித்யாசங்கரின் சினம் தணியவில்லை. மேலும் மேலும் பெருகிக் கொண்டிருந்தது.

"அசட்டுப் பெண்ணே! நான் வீட்டில் இல்லாத சமயத்தில், உனக்கு வீணையைத் தொட அவ்வளவு தைரியம் வந்து விட்டதா!" என்று வெறி பிடித்த தன் கையால் ஆனந்தாவின் பிஞ்சுக் கன்னங்களில் மாறி மாறிப் பேயறையாக அடிக்கலானார் வித்யாசங்கர்.

"இனிமேல் வீணையை நான் தொடமாட்டேன், அப்பா. என்னை அடிக்காதீங்க. விட்டுடுங்க அப்பா, அப்பா!" என்று கதறினாள் வலி பொறுக்க முடியாமல் ஆனந்தா.

எதுமுறை, எது முறையல்ல என்பதைப் பகுத்தறியும் பருவத்தில் இல்லாத சின்னஞ் சிறு கிளியாகிய ஆனந்தாவை அடிப்பதையும், ஆனந்தா கதறியழுவதையும் கண்ட ரஞ்சிதத்தின் மனம் தாளவில்லை. பெற்றவள் அல்லவா! "விடுங்க குழந்தையை" என்று ஆனந்தாவை வித்யாசங்கரிடமிருந்து மீட்கப் போனாள்.

"கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வரும் குழந்தையை விடவா பெரிதாக வந்து விட்டது அந்த வீணை! நான் வந்து விலக்கா விட்டால், குழந்தை கண்ணைக்கூட மூடியிருக்கும் இதற்குள்ளே" என்றாள்.

ரஞ்சிதத்தின் இந்தப் பதிலைக் கேட்டதும் வித்யாசங்கருக்குத் தூக்கி வாரிப் போட்டது. நிதானம் அப்போது தான் வர ஆரம்பித்தது. "என்ன ரஞ்சிதம்!" என்று திகிலுடன் கேட்டார் அவர்.

"என்னவா! குழந்தையை இரண்டு கண்களாலேயும் பாருங்கள்" என்றாள் ரஞ்சிதம்.

"ரோஜாப்பூவைப் போன்ற முகம் வாடி விட்டதே. இந்தாம்மா ஆனந்தா, என்னைப் பாரம்மா. உனக்கு என்ன வேணும்! ரஞ்சிதம், ஏன் குழந்தை வாயையே திறக்கவில்லை!" பதைபதைத்துக் கேட்கலானார் வித்யாசங்கர்.

"நீங்கள் அடித்த அடியில் எப்படி வாயைத் திறக்கும்! இப்போது தான் குழந்தை என்கிறது புரிந்ததா உங்களுக்கு!"

ரஞ்சிதத்தின் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் கூற வித்யாசங்கரால் இயலவில்லை. வாய் பேச முடியாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தார்.

4

ஆனந்தா வீட்டில் பிதற்றிக் கொண்டிருந்தாள். உடம்பில் சூடு நூறு புள்ளிக்கு மேல் போய், உடம்பு நெருப்பாகக் காய்ந்து கொண்டிருந்தது. "இனிமேல் நான் வீணையைத் தொட மாட்டேன், அப்பா. நான் தொடவே மாட்டேன், அப்பா!" என்ற ஆனந்தாவின் புலம்பல் வித்யாசங்கரைக் கலங்க வைத்தது. வைத்தியர் ரவிநாதன் அழைத்து வரப்பட்டார். "காய்ச்சலுக்குக் காரணம் வேறு எதுவும் இல்லை. பீதியும் பயமும்தான் குழந்தையின் பிஞ்சு உள்ளத்தில் அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கின்றன. குழந்தை எங்கேயாவது பயந்ததா!" என்று கேட்டார் ரவிநாதன். "பயந்துதான் இருக்கிறது. திருநீறு பூசிப் பார்க்கலாமா!" என்று அவரைக் கேட்டார் வித்யாசங்கர். "பார்க்கலாம், கயிறு திரித்துக் கட்டவும் செய்யலாம்" என்று சொல்லிச் சுர மாத்திரைகளைக் கொடுத்து விட்டுத் தக்க


ப்ளிட்டை உபயோகித்து உங்கள் குடும்பத்தைப் பாதுகாருங்கள்!
1 வீட்டிலுள்ள பூச்சிகள் அனைத்தையும் கொல்லுகிறது....ஒரு சில பூச்சிகளைத் தான் கொல்லும் என்றில்லை
2 நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அதிகமான பூச்சிகளைக் கொல்லுகிறது
FLIT
"D.D.T."
KILLS
ESSO
மலேரியா, டைபாயிட், காலரா முதலிய பல வியாதிகளைக் கொண்டுவரும் பூச்சிகளை இது கொல்லுகிறது
சிவப்பு, வெள்ளை, நீல நிறமும் கொண்ட டின்னில் கிடைக்கும்
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி


'அனஸின்'
நான்கு மருந்துகள் அடங்கியுள்ளது.
அனஸின் விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —
1 கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தைக் குறைப்பதில் மிகத் துரிதமானது.
2 காப்பீன்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3 பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4 அஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.
அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
GEOFFREY MANNERS & COMPANY LIMITED
MAGNET HOUSE, DOUGALL ROAD BOMBAY
WHITEHALL PHARMACAL COMPANY, NEW
2 ANNAS
INDIA
லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.
A.43

படி எச்சரிக்கை செய்து விட்டுப் போனார் வைத்தியர் ரவிநாதன்.

வைத்தியர் போனதும், "நீங்கள் கோபத்தில் குழந்தையை அடிக்கப் போகக் கடைசியில் குழந்தை வாய் திறந்து பேசாமல் காய்ச்சலாகப் படுக்கும்படியாகி விட்டது. பார்த்தீர்களா!" என்றாள் ரஞ்சிதம்.

"சித்தம் குழம்பிப் போயிருக்கிறேன். வெந்த புண்ணில் வேல் கொண்டு குத்துவது போல், மேலும் மேலும் இப்படிச் சொல்லி என் மனத்தைக் காயப் படுத்தாதே, ரஞ்சிதம்! என் குழந்தை பிழைத்தால் எனக்கு அதுவே போதும்" என்று சொல்லி விட்டு, "ஆனந்தா, ஆனந்தா!" என்று ஆசையும், துயரமும் தோய்ந்த தொனியில் தன் மகனை அருமையாக அழைத்தார்.

"இனிமேல் வீணையை நான் தொட மாட்டேன், அப்பா!" என்று பீதி கலந்த குரலில் கூறினான் ஆனந்தா.

"பயப்படாதே, ஆனந்தா! உன்னை இனி ஒரடிகூட அடிக்க மாட்டேன். நன்றாகத் தூங்கு. காய்ச்சல் நின்று விடும். உடம்பு உனக்குச் சௌகரியமானதும், உனக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தருகிறேன்" என்று கனிவோடு ஆறுதல் சொல்லிக் குழந்தையின் உடம்பை மெதுவாகத் தடவிக் கொடுத்தார். குழந்தையின் பாசம் வித்யாசங்கரை வெகுவாக ஆட்கொண்டு விட்டது.

5

"வித்யாசங்கர், உன்னை ஒரு வாரமாக நமது சபாப் பக்கமே காணவில்லையே!"

"ஆமாம்; சபாபதி! என்ன பண்ணுகிறது!" என்றார் அளவற்ற துயரத்துடன்.

"ஏன் இப்படி வருத்தமாகப் பேசுகிறாய்! என்ன விஷயம்! முன்னே எல்லாம் உன் வீட்டுக்கு வந்தால், வீணையும் கையுமாக இருப்பாயே!"

"எல்லாம் சோதனைதான். நான் வீணையைத் தொட்டே ஒரு வாரமாகிறது."

"ஏன்!"

"வீணையின் மந்திரத் தந்தி அறுந்து போய் விட்டது."

"அறுந்த தந்தியைப் புதிதாகப் போட்டு விடலாமே! அதற்காகவா கவலைப்படணும்!"

"அதிருக்கட்டும் சபாபதி. நீ வந்த காரியம் என்ன! அதைச் சொல்லு."

"வித்யாசங்கர், இந்த வாரம் நமது கலா விநோத சங்கீத சபாவில் உன்னுடைய வீணை அரங்கைச் சபா காரியதரிசி என்ற பொறுப்பாலும், உற்ற நண்பன் என்ற உரிமையினாலும் உன்னைக் கேட்காமலேயே ஏற்பாடு செய்து விளம்பரப்படுத்தி விட்டேன்."

"அப்படியா! எதற்கும் என்னை ஒரு வார்த்தை கேட்கக் கூடாது, சபாபதி! நான் இந்நிலையில் கச்சேரி செய்யவா!"

"ஏன் தயங்குகிறாய், வித்யாசங்கர்! உன் வாசிப்பைக் கேட்க எவ்வளவு பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்! நீ அவசியம் வீணைக் கச்சேரி செய்துதான் ஆகவேண்டும்."

"என்னை மன்னிக்க வேண்டும், சபாபதி. அடுத்த மாதம் நான் கண்டிப்பாக வாசிக்கிறேன்" என்றார் வித்யாசங்கர்.

"அப்படிச் சொல்லக் கூடாது. விளம்பரம் வேறு செய்து விட்டேன். நீ வந்து வாசிக்கா விட்டால், சபாவின் பேரல்லவா கெட்டுவிடும்!"

"அதெல்லாம் சரிதான். என்னை ஒரு வார்த்தை கேட்காமல் ஏன் விளம்பரம் செய்தாய்!" என்று கேட்டார்.

"உரிமையினால்தான். உன்னுடைய பெயரும், புகழும் ஓங்கி வளர்வதில், அதிக ஆனந்தம் கொள்பவன் நான்தானே! அதனால்தான் ஏற்பாடு செய்தேன். வித்யாசங்கர், நீ தட்டிக் கழிக்கக் கூடாது. நீ அவசியம் வாசித்துத் தான் ஆக வேண்டும்."

தன்னை முன்னேற்றத்துக்குக் கொண்டு வந்திருக்கும் உற்ற நண்பரின் வார்த்தையை உதறி நடக்க வித்யாசங்கரால் முடியவில்லை. எல்லாம் தெய்வத்தின் சோதனை யென்று நொந்து கொண்டார். நடப்பது நடக்கட்டும் என்று தெய்வத்தின்மீது பாரத்தைப் போட்டு விட்டுத் தான், அன்று கலாவிநோத சங்கீத சபாவில் வீணையரங்கில் கலந்து கொள்வதற்கு முன் வந்தார் வித்யாசங்கர்.

சிலா ரஸிகக் கூட்டத்தைத் தன் உள்ளம் ஒன்றிய உணர்ச்சி நிறைந்த அற்புத வாசிப்பில், திருப்தி செய்ய முடியாத நிலையில் பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பிப் போகும்படி செய்ய நேரிட்டதை எண்ணி மனம் வருந்தினார்.



பம்பாய் முதன் மந்திரி திரு மொரார்ஜி தேசாய் இந்திய வர்த்தக சங்கத்தில் குளிர் இயந்திரம் அமைக்கப்பட்ட புதிய மண்டபத்தைத் திறந்து வைத்தார். அச்சமயம் பம்பாய் முதன் மந்திரி இந்திய வர்த்தகச் சங்கக் கட்டடத்தின் மாதிரித் தோற்றத்தைத் திரு ஏ. வி. ராமலிங்கம் அவர்களுக்கு வழங்கும் காட்சியை மேலே படத்தில் காணலாம்.

சபா காரியதரிசி பேசியபடி மங்களத்துடன் கச்சேரியை மிகவும் சீக்கிரம் முடித்து விட்டு வெகு வேகமாக வீட்டுக்கு வந்தார். ஆனந்தாவின் உடல் நிலை எப்படி இருக்கிறதென்று ரஞ்சிதத்தைக் கேட்டார்.

"இனிமேல் கவலைப்பட வேண்டியதில்லை. இரண்டு மூன்று நாட்களில் பூரண குணமாகி விடும் என்பதாக வைத்தியர் சொல்லி யிருக்கிறார். கச்சேரியை ஏன் சீக்கிரம் முடித்து விட்டீர்கள்! எப்படி வீணை வாசித்தீர்கள்!" என்று வெகு ஆவலோடு கேட்டாள்.

"என்னாலே வாசிக்க முடிய வில்லை ரஞ்சிதம். என் கரங்களில் எப்போதும் இலகுவாக இழையும் வீணைத் தந்திகள், மீட்டுக்கு இணங்க வில்லை. என் எண்ணமெல்லாம் குழந்தை ஆனந்தா மீதே இருந்தது. ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே கச்சேரியை முடிக்கும்படியாகி விட்டது. கச்சேரி சோபிக்க வில்லை. எல்லாரும் ரசிக்கவும் இல்லை.

"இந்த லட்சணத்தில் வாசிக்க மாட்டேன் என்றாலும் 'விடமாட்டோம்' என்கிறார்கள். அடுத்த மாதம் கச்சேரி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்" என்று வித்யாசங்கர் சொல்லிக் கொண்டிருக்கும் போது, படுக்கையி லிருந்த வாறே கேட்டுக் கொண்டிருந்த ஆனந்தா ஆவலோடு தன் தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

"அப்பா, நீங்கள் கச்சேரிக்குப் போகும் போது, என்னையும் கூட அழைச்சுக்கிட்டுப் போவீங்களா!"

"நான் உன்னைக் கட்டாயம் அழைத்துப் போவேன். கடவுள் புண்ணியத்திலே உன் உடம்பு அதற்குள்ளே குணமாகிவிடும். நீ என் பக்கத்திலே இல்லாமல் என்னாலே வீணை வாசிக்க முடியாதம்மா, ஆனந்தா."

"உண்மையாகவா, அப்பா!"

"ஆமாம்" என்றார் அவர்.

ஆவல் ததும்பக் கேட்ட தம் மகளின் மனத்தை அன்பான ஆறுதல் மொழிகளினால் குளிரச் செய்தார் வித்யாசங்கர். ஆனந்தாவின் உடம்பு படிப்படியாகக் குணமடைந்து வருவதைப் போல், வித்யாசங்கரின் கவலையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்தது.

6

வித்வத் ரத்ன ஸ்ரீ வித்யாசங்கரின் வீணையரங்கு மீண்டும் அடுத்த மாதம் அதே கலா விநோத சங்கீத சபாவின் காரியதரிசி சபாபதியின் பெருத்த முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது. கலா ரசிகர்கள் முன்பு ஏமாற்றம் அடைந்திருந்த போதிலும், அன்றும் பெருங் கூட்டமாக வரத் தவறவில்லை.

வழக்கம்போல் வித்யாசங்கர் பேகடா ராக வர்ணத்தை ஆரம்பித்தார். அந்த வர்ணத்திலேயே கச்சேரி களை கட்டி விட்டது. ஆனந்தா வித்யாசங்கரின் அருகில் மலர்ந்த பொன் முகத்துடன் அமர்ந்திருந்தாள். வர்ணத்துக்குப் பிறகு இரண்டு கிருதிகளை வாசித்து விட்டுக் கல்யாணி ராகத்தை வாசிக்கத் தொடங்கினார் வித்யாசங்கர். புதுப் புதுக் கற்பனைகள் பூக்கள் உதிர்வது போல் வீணையிலிருந்து உதிர்ந்தன.

"கமலரத்னம், வித்யா சங்கரின் வாசிப்பு இன்றைக்கு எப்படி!"

"தேவகானம்தான் அருணாசலம். கல்யாணி ராகத்தில் என்னென்ன அற்புதமான சஞ்சாரங்கள், சங்கதிகள் எல்லாம் விழுகின்றன."

"ஆமாம். தேனுண்ட வண்டைப் போலல்லவா சபை அவரது இசை இன்பத்தில் மயங்கியிருக்கிறது!"

"இன்றைக்கு வித்யாசங்கர் தம்மையே மறந்து வாசிக்கிறார். அன்று குறையாக வாசித்ததை நிறைவு செய்வதற்காகப் பரிபூரண சங்கீத பாவத்தோடு இன்று வாசிக்கிறார். இன்று அவரது இதயம் வீணையோடு வீணையாக இழைந்திருக்கிறது."

"ஒருநாளும் இல்லாத ஒரு தனி உற்சாகம் அவர் வாசிப்பில் பொங்கித் ததும்புகின்றது" என்று அவர்கள் பேசிக் கொண்டனர்.

7

"வித்யாசங்கர், நேற்று உங்கள் கச்சேரியைப் போல் என்றுமே கேட்டதில்லை."

"எல்லாவற்றிற்கும் காரணம் என் இந்தக் கண்மணி ஆனந்தாதான்."


"அப்படியா!"

"ஆமாம்! போன கச்சேரியின்போது என் உயிர்க் கண்மணி ஆனந்தா கடுங் காய்ச்சலாகப் படுக்கையில் இருந்தாள். என் இதயத் தந்தி அறுந்து கிடந்தது. நான் வீணையை அன்று மீட்டினேனே தவிர என் இதய மெல்லாம் என் கண்மணியின் உயிரிலேயே கலந்திருந்தது. இப்போது என் கண்மணி ஆனந்தாவுக்குப் பூரண குணமாகி விட்டது. என் இதயத் தந்தியும் நேராகி விட்டது."

இதைக் கேட்டதும் அவர்களையும் அறியாமல் அவர்கள் வாயிலிருந்து பின்வரும் வார்த்தைகள்தான் வெளி வந்தன:

"என்னதான் வீணையின் தந்திகள் நேராக இருந்தாலும், இதயத் தந்தி மட்டும் சரியாக இல்லாவிட்டால், இயற்கையான சுக நாதத்தை எழுப்ப முடியாது."


இந்த நவீன ஔஷதம்
சிறு குழந்தையின் ஜலதோஷத்தை அதி சீக்கிரமாக நிவர்த்தி செய்கிறது!
உங்களுடைய குழந்தையின் ஜலதோஷத்தைத் துரிதமாக நிவர்த்தி செய்யுங்கள்! படுக்கப்போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை மார்பின்மேலும் தொண்டையின்மேலும் தடவித் தேயுங்கள். மூச்சு விடுவதை லகுவாக்குவதன்போருட்டும், இருமலை நிறுத்துவதன்போருட்டும், உங்களுடைய குழந்தை இந்த மனோரம்மியமான தைலத்திலிருந்து கிளம்பும் ஆவிகளைச் சுவாசிக்கிறது. அதே சமயத்தில் வேபோரப் சருமத்தின் வழியாக உட்சென்று வேலை செய்து மார்பிலுள்ள அடைசலையும் வலியையும் அகற்றுகிறது. இந்த இரு-வித வேலை ஜலதோஷத்தை அநேகமாக ஒரே இரவில் அகற்றுகிறது!
1. மருந்து ஆவிகள் உள்ளே இழுக்க படுகின்றன.
2. பத்தைப் போல் மார்புக்கு உஷ்ண மளிக்கிறது.
விக்ஸ்
வேபோரப்
VICKS
புதிய சிறிய சைஸ்! புதிய குறைந்த விலை!
'விக்ஸ்வேப்போரப்' ஒரு டிரேட் மார்க்.
NAS


தண்ணீர் பம்புகளில் மிக நவீனமானது
இந்த புத்தம் புதிய மயர்ஸ் எஜக்டோ பம்பில் எவ்விதமான அசையும் பாகங்கள் இல்லை. அதற்கு லூப்ரிகேஷன் அவசியமில்லை. வெகு சிக்கனமாக இயங்கச் செய்யலாம். அதிக அழுத்தும சக்தியினால் தாராளமான தண்ணீர் சப்ளை கிடைக்கும். உங்களது முதலீட்டை மயர்ஸ் எஜக்டோ பம்பிலேயே செய்யுங்கள். 'வி' பெல்ட் பூட்டிய ரகத்திலும், நேரிடையாக இணைத்து இயங்கும் ரகத்திலும் கிடைக்கும்.
MYERS
EJECTO PUMPS
வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிட்.
45. தம்பு செட்டித் தெரு. சென்னை–1



அறுபதாண்டு விழாவில் அடிகளின் அறவுரை

பூதான வேள்வியின் தந்தை ஒரிஸ்ஸா ராஜ்யத்தின் கோராப்புட்டு என்ற ஜில்லாவில் மே 29-ம் தேதி அடியெடுத்து வைத்தார். அப்போது அந்த ஜில்லாவாசிகள் அடைந்த மகிழ்ச்சி சொல்லி முடியாது. என்றைக்கு பூதானம் என்ற மந்திரத்தை உபதேசிக்கத் தொடங்கினாரோ அன்றிலிருந்தே அடிகள் காடும் மலையும் கடந்தே நடந்திருக்கிறார். அவர் உபதேசம் கேட்கத் தொடங்கியதிலிருந்து மக்கள் புது உற்சாகம் பெற்று, தங்கள் வாழ்க்கையில் புது மலர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள்.

அதிலும் வினோபா அடிகளின் அறுபதாண்டு நிறைவு சஷ்டியப்த பூர்த்தியின்போது, அதாவது செப்டம்பர் 11-ம் தேதி வினோபா அடிகள் தங்கள் ஜில்லாவில் இருக்கப் போகிறார் என்று கேள்விப்பட்டதும் கோராப்புட்டு ஜில்லா வாசிகளுடைய குதூகலம் எல்லை கடந்து விட்டது' ஆனால் இவர்களோ தங்கள் உடைமைகளையெல்லாம் தியாகம் புரிந்து விட்டவர்கள். இவர்கள் தங்கள் உள்ளம் நிறைந்த அன்பைத் தவிர வேறு என்ன கொடுக்க முடியும்! எனினும், வினோபா அடிகளின் சஷ்டியப்த பூர்த்தி புனித விழாவைக் கொண்டாட ஒரு சின்னஞ் சிறு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அன்று வினோபா அடிகள் குன்பூர் என்ற கிராமத்தில் தங்கியிருந்தார். கிராம மக்கள் புஷ்பங்களும் பழங்களும் கொண்டு வந்து வினோபா அடிகளுக்குச் சமர்ப்பித்தார்கள். அவர்கள் காரிய வீரர்களானபடியால் பேச்சு, பிரசங்கம் செய்யவில்லை. ஆனால் அவர்களின் அதிர்ஷ்டவசத்தால் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் அன்று அங்கிருந்தார். கிராமவாசிகளின் சார்பில் அவர் பேசினார்.

அன்று முதலில் ஸ்ரீமதி ரமாதேவி வினோபா அடிகளின் நெற்றியில் திலகமிட்டார். பின்னர் காந்திமகானின் கட்டளைக்கிணங்க குஜராத்தை விட்டு ஒரிஸ்ஸாவுக்கு வந்து நீண்ட நெடுங் காலமாகத் தொண்டு புரிந்து வரும் அறுபத்து மூன்று வயதான ஸ்ரீ சுகவரலால் வியாஸ் என்ற நிர்மாண ஊழியர் வினோபாவுக்கு மாலை அணிவித்து நல்லாசி கூறினார். பின்னர் ஸ்ரீ கோபபந்து பேசினார். ஒரிஸ்ஸா ராஜ்ய

சுரேஷ்ராம்

மக்கள், அதிலும் கோராப்பட்டு ஜில்லா வாசிகள் கிராம ராஜ்யம் நிர்மாணிப்பதில் வினோபா அடிகள் எதிர்பார்க்கும் உயரிய லட்சியத்தை அடைய முயல்வார்கள் என்று உறுதி கூறினார்.

பிறகு ஜெயப்பிரகாஷ் எழுந்தார். அவர் அடிகளுக்கு நீண்ட ஆயுள் வழங்கும்படி ஆண்டவனைப் பிரார்த்தித்து விட்டுத் தேசத்திலிருக்கும் ஏழையினும் ஏழையான மக்களுக்காக வினோபா அடிகள் ஓய்வு ஒழிச்சலின்றிப் புரிந்துவரும் சேவையைப் பாராட்டினார். அத்துடன் உலகில் ஒரு மகான் தோன்றிய பின்னர், அவர் வகுத்த வழியைக் கண்பித்து அழைத்துச் செல்லும் சக்தி பெற்ற மற்றொரு மகான் அடுத்தாற் போல் தோன்றுவது மிக அபூர்வம். ஆயினும் நம்முடைய பாக்கிய வசத்தால் காந்தி மகானுக்குப் பிறகு நமக்கு வழிகாட்ட வினோபா இருக்கிறார்கள்'' என்றார்.

பின்னர் வினோபா தம்மை வாழ்த்தினவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்தி விட்டுச் சொன்னார்: ''மனித ஆயுள் நூறு ஆண்டுகள் என்று நமது சாஸ்திரங்கள் கணக்கிட்டிருக்கின்றன. அதில் முதல் ஐம்பதாண்டுகளுக்கு, ஆண்டுக்கு அரை மார்க்கு வீதமும், அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ஒரு மார்க்கு வீதமும், அதற்கு அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இரண்டு மார்க்கு வீதமும் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் எனக்கு 35 மார்க்குத்தான் வரும். மூன்றாம் வகுப்பில் தேறப் போதும். அவ்வளவுதான்!

''எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு ஜெயில் கதை ஞாபகத்துக்கு வருகிறது. எங்கள் ஜெயில் வார்டர் ஒவ்வொரு நாள் இரவும், கைதிகளைக் கணக்கு எண்ணுவது வழக்கம். அதை அவன் தூங்கிக் கொண்டே செய்வது வழக்கம். அவன் ஒன்று, இரண்டு, மூன்று என்று ஐம்பது வரை சொல்லிக் கொண்டே வருவான். பிறகு 51, 52, 55 என்று சொல்லிக் கொண்டே தூங்கிப் போய் விடுவான். அடுத்த முறை விழித்துக் கொள்ளும் போது, மீண்டும் அவன் ஒன்று, இரண்டு, மூன்று...என்று ஐம்பத்தைந்து வரை எண்ணுவான்! அப்படியே தூங்கிப் போய் விடுவான். அப்போது நான் இதைக் குழந்தை மாதிரி அனுபவிப்பேன். இப்போது கூட எனக்கு வயதாகி விட்டதாகவோ, ஏன், வாலிபப் பருவத்திலிருப்பதாகவோ கூடத் தோன்றவில்லை. நான் இன்னும் குழந்தையாகத்தான் இருக்கிறேன். ஏன், நாம் எல்லோருமே குழந்தைகள்தாம். இங்கே வேடிக்கை காணக் கூடியிருக்கிறோம்.

''நான் இதை என் அறுபதாண்டு நிறைவு நாளாகக் கருதவில்லை. நம் வாழ்க்கையின் முன்னேயுள்ள நிலப் புரட்சி என்ற மகத்தான காரியத்தைச் சாதிக்க வாழ்நாளையே அர்ப்பணிக்கும் புனித நாளாகத்தான் கொண்டிருக்கிறேன். 'நாம், நான்' என்ற ஆணவத்தை அறவே அகற்றி விட்டு, நமக்குள்ள மதிப்பு பூஜ்யத்துக்குள்ள மதிப்புத்தான் என்று மனத்தில் உறுதியாகக் கொண்டு இக் காரியத்தைச் சாதிக்க இறங்க வேண்டும்'' என்று கூறினார்.

வினோபா அடிகள் நன்றியோடு கை கூப்பி வணங்கினார். கொண்டு வரப்பட்ட புஷ்பங்களும் பழங்களும் அங்கே கூடியிருந்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப் பட்டன. இவ்விதம் அப் புனிதச் சடங்கு முடிந்தது.

வழக்கம் போல் அன்று மாலை நான்கு மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. பிரார்த்தனைக்குப் பின் வினோபா பின் வருமாறு குறிப்பிட்டார்:

''இன்று ஒரியா மொழியில் பாடப்பட்ட பிரார்த்தனைப் பாட்டில் ஸ்திதப்ரக்ஞையுள்ளவன் குணங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கீதையில் கூறப்பட்டிருக்கிறதோ, அதுவே கீதத்தின் விஷயமாகிவிட்டது. அந்தக் கீதை சுலோகங்கள் மிகப் பழங்காலந் தொட்டுப் பிரசித்தமானவை. சங்கராச்சாரியார் இந்த சுலோகங்களைப் பற்றி மிக உயர்வாகவும் ஒரு சந்நியாசியின் லட்சியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றும் கூறி யிருக்கிறார். இக் காலில் இந்த சுலோகங்களைப் பிரபல்யப் படுத்தியது மகாத்மா காந்தியடிகளே.

''காந்திமகான் தமது பிரார்த்தனைக்கு ஏன் இந்த சுலோகங்களைத் தேர்ந்தெடுத்தார் என்று அறிவதில் கஷ்டம் ஒன்றுமில்லை. இன்றைய விஞ்ஞான உலகத்தில் ஏற்படும் குழப்பங்களைச் சமாளிக்கத் தக்க வழியைக் கூறுகிறது. அதாவது ஒரு முடிவுக்கு வரும் சக்தியை வழங்குகிறது. இச் சக்தி தனி மனித வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு பொது வாழ்விலும் அவசியமாகிறது. நாம் மிகவும் சிக்கலான பிரச்னைகள் எழும் ஒரு யுகத்தில் வாழ்கிறோம். அப் பிரச்னைகளை உடனே தீர்க்க வேண்டியதாகவும் இருக்கிறது. அதனால் மனத்தின் உறுதிக்கு அவசியம் அதிகமாகி விட்டது. ஆனால் பற்றற்ற மனமிருந்தாலொழிய சரியான முடிவுக்கு வருவது கஷ்டம். இவ்வுலகில் உண்மையான ஜனநாயகம் நிலவ வேண்டுமானால், அரசாங்க சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்தாத சமுதாயம் ஏற்பட வேண்டுமானால் முதலில் மனிதனின் மனம் அமைதி பெற வேண்டும், பரிசுத்தமடைய வேண்டும். எதையும் நடுநிலைமையில் நின்று பார்க்கும் தன்மை பெற வேண்டும்.

''நான் இந்த ஸ்திர சித்தத்தைச் சுலபமாகப் பெறலாம் என்றே நினைக்கிறேன். இதற்கு முதற் காரணம் உள்ளத்தின் இயல்பே நடு நிலையில் நிற்க வேண்டும், ஸ்திரத் தன்மை பெற வேண்டும் என்று சதா முயன்று கொண்டிருப்பதுதான்.

''பார்க்கப்போனால் ஒவ்வொருவரும் ஞானி யாவது வேண்டுமானால் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் எவனும் விரும்பினால் ஸ்திதப்ரக்ஞன் ஆக முடியும்.

''பூதானத்தில் கூட இது முக்கியம். பூதானத் தொண்டர்கள் ஒரு சிலர்தான் இருக்கிறோம். நாம் பற்றற்ற மனத்தோடு நம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளப் பிரயத்தனப்பட்டால் வெகு எளிதிலும் விரைவிலும் தீர்த்துக் கொண்டு விடலாம். நான் உங்கள் ஆசியைக் கோருகிறேன். நம் எல்லோருக்கும் உணர்ச்சி வசப்படாத பற்றற்ற மனத்தை அருளுமாறு கடவுளை வேண்டிக் கொள்ளுகிறேன்.''

இதைச் சொல்லி முடித்தாரோ இல்லையோ, வினோபா அடிகளுக்கு 25 கிராமங்களைக் கிராம தானமாக இந்தச் சுபதினத்தில் வழங்குவதாகத் தந்தி வந்தது!

பலமும், ஆரோக்கியமும் பெருக

உங்கள் சிற்றுண்டி வகைகளை ஓ. கே. வனஸ்பதியில் தயாரியுங்கள். அதில் ஒரு அவுன்ஸிற்கு 700 I.U. வைட்டமின் 'A' சத்து இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது.



ஒ.கே. வனஸ்பதி

இப்பொழுது ஏர்-டைட் லீவர்-லிட் டின்களில் கிடைக்கும். இதனால் அது கடைசி அவுன்ஸ்வரை புதுமை மணம் கெடாமலும், சுத்தமானதாகவும் இருக்கிறது

காலியானதும், ஏர்-டைட் 'ஒ. கே.' லீவர்-லிட் டின்களை உங்கள் அடுப்பங்கரையில் சுகாதாரமான முறையில், சாமான்களைப் பத்திரப்படுத்திவைக்க உபயோகியுங்கள்.

தயாரிப்பவர்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், மதராஸ்.

EP



உடம்புக்குப் பொருந்தாதபடி உங்களுடைய உடைகள் ஒருபொழுதும் சுருங்கவே செய்யாது

சுருக்கம் செய்யப்பட்ட உடைகள் உங்களுக்கு இனிமேல் ஒருக்காலும் தொந்திரவு கொடுக்காது. நீங்கள் பருத்தித் துணியையோ அல்லது ரெடிமேட் உடைகளையோ வாங்கும்பொழுது 'ஸான்போரைஸ்ட்' (Sanforized) டிரேட் மார்க் இருக்கிறதா என்று மாத்திரம் பாருங்கள். இதனால் உங்களுடைய உடைகள் எத்தனைமுறை சலவை செய்யப்பட்டாலும் எப்பொழுதும் அவைகளின் சரியான அளவில் இருக்கும்.

இந்தியாவின் முதன்மையான மில்கள் இப்பொழுது டிசிங்கள், பாப்லின்கள், கேம்பிரிக்குகள் உட்பட அநேகம் பிரபலமான ரகங்களை 'ஸான்போரைஸ்ட்' துணிகளாகத் தயார் செய்கின்றன. நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பருத்தித் துணியிலும் 'ஸான்போரைஸ்ட்' அடையாளம் இருக்கிறதா என்று பாருங்கள்.

முக்கிய கவனிப்பு:— உங்கள் தையல்காரரிடம் சொல்லுங்கள்: "இது 'ஸான்போரைஸ்ட்' துணி—உடை தைப்பதற்குமுன் நனைக்க வேண்டாம்."

ஸான்போரைஸ்ட்-கே-மெஹ்மான்: பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணிக்கு ரேடியோ சிலோனிலிருந்து 41 மீட்டரில் ஒலிபரப்பப்படும் இனிமையான ஹிந்தி நிகழ்ச்சியைக் கேளுங்கள்.

· SANFORIZED ·
SHRUNK FABRIC

ஸான்போரைஸ்ட் ஸெர்விஸ்
'பாரிஜாத்', நேதாஜி ஸுபாஷ் ரோடு, மெரின் டிரைவ், பம்பாய் 2

ACP. 1737

கீர்த்தனம் 14 ராகம்: ஸ்ரீரஞ்சனி ஆதி தாளம்

பல்லவி

கஜவதனா கருணா ஸதனா சங்
கர பாலா லம்போதர ஸுந்தர (கஜவதனா)

அனுபல்லவி

அஜனம ரேந்த்ரனும் முனிவரும் பணிபங்
கஜசரணா சரணம் சரணம் ஸ்ரீ (கஜவதனா)

சரணம்

நீயே மூவுலகிற் காதாரம்
நீயே சிவாகம மந்த்ர ஸாரம்
நீயே வாழ்விலென் ஜீவாதாரம்
நீ யருள்வாய் ஸுமுக ஓங்கார (கஜவதனா)

ஸ்ரீரஞ்சனி ராகம் 22-வது மேளமாகிற கரஹரப்ரியாவில் பிறந்தது. உபாங்கராகம்.

இதில் வரும் ஸ்வரங்கள்: ஷட்ஜம், சதுச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சதுச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

ஆரோகணம்: ஸ ரி க ம த நி ஸ்
அவரோகணம்: ஸ் நி த ம க ரி ஸ

பல்லவி —1 களை

; ஸ் ஸா நி தா மா ; ரி கா	க ரி ரி கா கா	மா ; ; தா	‖
. க ஜ வ த னா - க ரு	ணா - - ஸ த	னா - - ஸ்ரீ	
, நி ஸ்ரிரிஸா , நி தா மா ; ரி கா	க ரி ரி ஸ ரி கா	மா ; ; கா	‖
. . க - ஜ - - வ த னா - க ரு	ணா - - - ஸ த	னா - - சங்	
மா , த தா தா நி ஸ் நி ; த நி	ஸா ; நி தா	ஸ் நி த ம தா நி	‖
. . க ர பா - - லா - லம்	போ - த ர	ஸுந் - - த ர	
ஸ் நி ரி ஸா நி தா மா ; ரி கா	க ரி ரி ஸ ரி கா	மா ; ; ஸ் நி	‖
க - ஜ - வ த னா - க ரு	ணா - - - ஸ த	னா - - ச ங்	
த மா த தா ம த நி ஸ் நி ; த நி	ஸ் ரி ஸ் நி தா	ஸ் நி த ம தா நி	‖
. . க ர பா - - - லா - லம்	போ - - த ர	ஸுந் - - த ர	
ஸ் நி ரி ஸா நி தா மா ; ரி கா	க ரி ரி ஸ ரி கா	மா ; ; ;	‖
க - ஜ - வ த னா - க ரு	ணா - - - ஸ த	னா - - -	

அனுபல்லவி

; த மா த நி ஸா ; ஸா ஸா	; நி ஸா ரி கா	க ரி ரி ஸா ;	‖
. அ ஜ ன ம ரே ந் த்ர னும்	- மு னி வ ரும்	ப - ணி யும் -	
, நித மா த நி க் க் ரி ஸ் ஸா ஸா	; நி ஸா ரி கா	க் ரி ஸா ; ஸா	‖
. . அ ஜ ன ம ரே - - ந் த்ர னும்	- மு னி வ ரும்	ப - ணி - பங்	
; நி தா ம கா மா ; , நி தா	நி ; , க் ரி	ஸா ; ; த நி	‖
. க ஜ ச ர ணா - - ச ர	ண ம் - ச ர	ண ம் - ப ங்	
ரி ஸ் நி தா ம கா மா ; , த நி ஸ்	நி ; , க் ரி	ஸா ; ; தா	‖
. . க ஜ ச ர ணா - - ச ர -	ண ம் - ச ர	ண ம் - ஸ்ரீ	
, நி ஸ்ரிரிஸா நி தா மா ; ரி கா	க ரி ரி ஸ ரி கா	மா ; ; ;	‖
. . க - ஜ - வ த னா - க ரு	ணா - - - ஸ த	னா - - -	

சரணம்

மா ; தா ; ; நீ , நி நீ	நீ ; நீ ;	நி த ஸ் நி நி த தா ‖
நீ - யே - - ரூ - ப ல	லி ங் கா -	தா - - - ர ம் -
நீ ; நி தா ம மா ம க ரீ கா	மா தா ; நீ	ரி ஸ் நி த மா ; ‖
நீ - யே - - சி வா - - க	ம ம ந் த்ர	ஸா - - - ர ம்
நீ ; ஸா ; நி ஸ் ரி ஸ் ரி கா	ரி க மா கா ரீ	கா ரீ ஸா ; ‖
நீ - யே - வா - ழ் வி - லென்	ஜீ - - வா -	தா - ர ம்
நீ ; தநிஸா ; நிஸ்ரீ ; ஸ் ரி கா	ரி க மா கா ரீ	கா ரீ ஸா ; ‖
நீ - யே - - - வா - - ழ் வி . லென்	ஜீ - - வா -	தா - ர ம்
நி ஸ் நி த மா கா மா ; தா நி ஸ்	நீ ; ; ;	ஸா ; ; ; ‖
நீ - - . ய ருள் வா ய் ஸௌ மு -	கா - - -	- - - -
ரி ஸ் நி த மா கா மா ; தா நீ	ஸா ; நீஸ்ரீ ஸ் நி	தாநிஸ் நி த த ம த நி ‖
நீ - - - ய ருள் வா ய் ஸௌ மு	கா - ஓங் - - -	கா - - - - ரா - - -

"கஜவதன"

படித்துப் பாருங்கள்

Concise Tamil Lexicon
சுருக்கத் தமிழ் அகராதி

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குக்கூடத் தமிழ் அகராதியின் உதவி பல விதத்திலும் தேவையாயிருக்கிறது. அந்த அகராதியும் நல்ல ஆராய்ச்சியுடன் வெளியிடப்பட்ட பிரசுரமாயிருந்தால்தான் உபயோகமாயிருக்கும். மிகச் சிறந்த பண்டிதர் பலரின் பலநாள் உழைப்பில் வெளியாகியிருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் மிகப் பெரிய முயற்சியான 'தமிழ் லெக்ஸிகன்' வெளிவந்ததினால் இந்தக் குறை நீங்கிவிட்டது உண்மைதான். ஆனாலும் சிறிய அளவில் தமிழ் அகராதி நெடுநாளையத் தேவையென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த அறிஞர்களின் மேற்பார்வையில் இந்தச் சுருக்க அகராதி தயாராகி வெளியிடப் பட்டிருக்கிறது.

கலைச் சொற்கள், இலக்கண பரிபாஷைச் சொற்கள், எளிதிற் பொருள் விளங்கும் சொற்கள், இலக்கியத்தில் பயின்று வழங்காத வட சொற்கள், சிறப்புப் பெயர்கள், தொடர் மொழிகள், இலக்கியத்தில் பயின்று வராத நிகண்டுச் சொற்கள் ஆகியவை இச் சுருக்க அகராதியில் விடப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பதங்களுக்கு நேரான ஆங்கில வார்த்தைகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இது தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் நூல் என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

பிரசுரம்: மதராஸ் லா ஜெர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை—4; விலை: ரூ. 4—0—0.

நாடக ராணி

ஹிந்தி இலக்கிய உலகில் தமக்குத் தனியிடம் தேடிக் கொண்டவர் ஸ்ரீ பிரேம் சந்த். வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்தும் பார்த்துப் பார்த்து, அனுபவித்து, தம் எழுத்தின் சக்தியை அவர் அத்தனை கோணங்களிலும் சுடர் விட்டு ஒளிரச் செய்தார்.

இந்நூலில் பிரேம்சந்த் எழுதிய ஏழு சிறு கதைகள் நல்ல முறையில் மொழிபெயர்க்கப் பட்டுத் தொகுக்கப் பட்டிருக்கின்றன.

ஒரு நாடக நடிகையின் மாசு நீங்கிய உள்ளம் "நாடக ராணி"யில் பிரதிபலிக்கிறது. அவளை உண்மையாகவே காதலித்த நிர்மல காந்தரின் கபடமற்ற உள்ளந்தான் அவளைத் தூய்மைப் படுத்தியது. கள்ளமற்ற உள்ளத்தில் பிறந்த காதலின் சக்தி எத்தகையது என்பது இக் கதையின் மூலம் நன்கு வெளியாகிறது.

விமலன் பொதுப் பணிக்கே தன்னை முழு மனத்துடன் அர்ப்பணித்து அந்தத் துறையிலேயே முழு மூச்சுடன் ஈடுபட்டான். இடையில் புகுந்தாள் மந்தனா. அவள் கணவனை விட்டுப் பிரிந்து இந்தத் தொண்டு வாழ்க்கையை மேற்கொண்டாள். இவர்கள் இருவரையும் வைத்துக் கொண்டு பிரேம்சந்த் ஓர் அற்புதச் சிறுகதையைச் சிருஷ்டித்திருக்கிறார்.

மற்றக் கதைகளும் மிகவும் நன்றாக எழுதப் பட்டு நன்றாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. ஒரு மொழிபெயர்ப்பு நூலை வாசிக்கும் நினைப்பே நமக்கு ஏற்படவில்லை. மூல நூல் போலவே அத்தனை ரஸமாக இருக்கிறது.

தமிழாக்கியவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 1-4-0.

இராமாயணச் சுருக்கம்

ராமாயணக் கதையைச் சுருக்கமாக எளிய நடையில் இந்நூல் கூறுகிறது. கம்பர் பாடல்களையும், பொருள் விளங்கச் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்நூலைத் தொகுத்தவரின் தமிழறிவும் ஸ்ரீராம பக்தியும் இந்நூலின் மூலம் நன்கு விளங்குகின்றன. கதைத்தொடர்புக்கு ஏற்றவாறு கம்பராமாயணப் பாடல்களைச் சேர்த்திருப்பது கதையின் மூலமே கம்பர் கவிதைகளையும் உணர்ந்து கொள்வதற்கு உதவியாயிருக்கிறது.

தொகுப்பாளர்: ஆ. வ. பட்டாபிராமன்; பிரசுரம்: குமாரசாமி நாயுடு அண்ட் சன்ஸ், சென்னை-1; விலை: ரூ. 2—0—0. —விஜயம்



ஒரு தொழிலின் அவசியத்தை நிர்ணயிப்பது எப்படி?

ஒரு சைக்கிள், தையல் மிஷின் அல்லது ஒரு லாந்தல் விளக்கையோ ஒருவரிடம் காண்பியுங்கள். அவரிடமே வார்ப்புபெடுத்த ஓர் எஃகுக்கட்டியையும் காண்பியுங்கள். நிச்சயமாக அவர் எஃகுக் கட்டியை திரும்பியும் பார்க்கமாட்டார். ஆயினும் தொழிற்சாலைகளிலும், இயந்திரங்களிலும், கட்டடங்களிலும்...மற்றும் நாம் நாள் தோறும் உபயோகிக்கும் நூற்றுக்கணக்கான பொருள்களைத் தயார் செய்ய எஃகானது இன்றியமையாதது.

இந்திய எஃகுத் தொழில் துவக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிரம்பவில்லை எனினும் இன்று நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அது ஒரு உயிர்நாடியாக விளங்குகிறது. பிற நாடுகள் அணுக முடியாத குறைந்த அடக்க விலையில் சுமார் 17 லக்ஷம் டன் வார்ப்புபெடுத்த எஃகு கட்டிகள் நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. இந்த 17 லக்ஷ டன்களில், 10 லக்ஷ டன்களுக்கு மேலான எஃகு, டாடா ஸ்டீல் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்திலேயே சுமார் 20 லக்ஷம் டன்கள் எஃகு உற்பத்தி செய்ய டாடா கம்பெனியார் திட்டம் செய்துள்ளனர்.

தனியார் தொழில் தேச நலனுக்காகப் பாடுபடுகிறது.

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிட்

நடந்த நாடகம்

புஷ்யன்

சென்னையிலிருந்து புறப்படும் நீலகிரி எக்ஸ்பிரஸில் இரண்டாம் வகுப்புப் பெட்டியொன்றில் எனக்காக முன்னதாக 'ரிஸர்வ்' செய்யப்பட்டிருந்த மேல் பலகையில் படுக்கையை விரித்து விட்டுக் கீழ் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தேன். நான்கே பேர்களுக்கு ஏற்பட்ட அந்தப் பெட்டியில் மற்ற இரண்டு கீழ் ஆசனங்களும் யாரோ இருவருக்கு ரிஸர்வ் செய்யப் பட்டிருந்தன. நான்காவதான மேல் பலகை காலி. அந்த மற்ற இருவர்களும் இன்னும் வரவில்லை. அவர்களும் கோயமுத்தூர்தான் போகிறார்கள், என்னைப் போலவே.

புத்தக விற்பனைக்காரன் புத்தக வண்டியொன்றைத் தள்ளிக் கொண்டே வந்தான். அவனை நிறுத்திப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது கலகல வென்று வெண்கல த்வனி கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு ஆடவனும், பெண்ணும், இரண்டு பெட்டிகள், இரண்டு படுக்கைகள், கூடைகளுடன் என் பெட்டியில் ஏறினார்கள். அவர்கள்தான் என் சக பிரயாணிகளெனத் தெரிந்து கொண்டேன். நான் உடனே புத்தக சுவாரசியத்தை விட்டு விட்டு என் சக பிரயாணிகளைக் கூர்ந்து நோக்கினேன்.

ஆடவனுக்கு வயது இருபத்திரண்டு அல்லது இருபத்து மூன்று இருக்கலாம். நீண்ட சராயைப் போட்டுக்கொண்டு, சட்டையைச் சராய்க்குள் விட்டிருந்தான். சட்டையின் முழுக் கையை முழங் கைக்குக் கீழே மடித்து விட்டு முக்கால் கையாக ஆக்கிக் கொண்டிருந்தான். அலையலையாக வாரிவிடப் பட்டிருந்த கிராப்பு அழகாக இருந்தது. அந்தப் பெண்ணுக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கலாம். சிவப்பு ஜார்ஜெட் புடவையும், கறுப்பு வர்ணத்தில் சரிகையில் இலை யொன்றைக் கைக்கு ஒன்றாகத் தைத்திருந்த வெல்வெட் ரவிக்கையையும் அணிந்திருந்தாள். புடவையின் தலைப்பு தோள்பட்டையை ஒயிலாக அணைத்துக் கொண்டு பின்புறம் தொங்கியது. ரவிக்கையின் முதுகுப் புறத்தில் குண்டாகத் துணியில் தைத்த பித்தான்கள் காட்சியளித்தன. தன்னுடைய நீண்ட கேசத்தை அவள் முதலில் இரட்டையாகப் பின்னி, பாதிக்குமேல் ஒற்றையாக மாற்றிப் பின்னியிருந்தது புது மாதிரியாக இருந்தது. கூந்தல் பின்னல்கள் இரண்டையும் ஒரு மல்லிகைச் சரம் பிணைத்துக் கொண்டிருந்தது. அவளுடைய முகம் சந்திரனைப் போல் பளீரெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அழகிய முகம். தங்க நிற மேனி. இருவருடைய அழகும் பொருத்தமாய் இருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் படைக்கப் பட்டாற் போல் அத்தனை அழகாய் இருந்தார்கள்.

ரயில் வண்டி சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டதும் நான் என் இடத்தில் ஏறிப் படுத்துக் கொண்டேன். சிறிது நேரம் ஒரு நாவலைப் படிப்பதில் ஈடுபட்டேன். ஆனால் அதில் அதிக நேரம் லயித்திருக்க முடியவில்லை.

அவர்கள் இருவரும் எதிர் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு உலகையே மறந்தவர்களாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இன்றுதான் நம்முடைய கடைசிச் சந்திப்பு, இல்லையா தங்கம்...உன்னை அவ்வளவு அவசரமாய் வரச் சொல்லி உன் தகப்பனார் கடிதம் போட்டதற்கு என்ன காரணமாக இருக்கும்? எனக்கென்னவோ சந்தேகமாக இருக்கிறது. உன் கல்யாண விஷயமாக ஏதாவது முடிவு செய்திருக்கப் போகிறாரோ என்றுதான்.........இல்லாவிட்டால்......"

"சேகர்......அப்படி ஒன்றும் இராது... அவர் கொஞ்சம் கண்டிப்புப் பேர்வழிதான். ஆனாலும் என்மேல் அவருக்குத் தனி பிரியம்......அப்படி ஒன்றும் அவர் என் கல்யாண விஷயத்தில் என்னைக் கேட்காமல் ஒன்றும் நிச்சயிக்க மாட்டார்...... வேறெதாவது இருக்கும்......" என்றாள் அந்தப் பெண் தங்கம்.

"தங்கம், எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது...நான் ஒரு ஏழை...என்னால் உன் தகப்பனாருக்கு எதிராகப் போய் உன்னை மணம் செய்து தரும்படி கேட்க முடியாது...நீதான் உன் தகப்பனாருக்குச் சொல்லி நம் விவாகத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்......" என்றான் சேகர்.

"நீங்கள் கவலைப் படாதீர்கள்...சேகர். என் தகப்பனார் என் கல்யாணப் பேச்சை எடுத்தால் நான் உடனே நம் காதலைத் தெரிவித்து உங்களை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ளச் சொல்கிறேன். அவர் என் வேண்டுகோளுக்கு மாறாக ஒன்றும், எதையும் செய்யவே மாட்டார்...அப்படி அவர் ஏதாவது செய்ய முற்பட்டால் கல்யாணத்துக்கு இரண்டு நாட்கள் முன் காணாமல் போய் விடுவேன். என்னை ஓரிடத்தில் சந்திக்கும்படி உங்களுக்கு எழுதுவேன். அப்புறம் நாம் இருவரும் ரிஜிஸ்தர் விவாகம் செய்து கொள்ளலாம். ....ஆனந்தமாய் வாழலாம்..." என்றாள் தங்கம்.

'அடே, அப்பா! இந்தப் பெண்ணுக்குத்தான் அவன்மீது, என்ன காதல், எவ்வளவு தைரியம்!' என்று வியந்தேன்.

"தங்கம், இது நிஜந்தானா? உன் தகப்பனாருடைய பேச்சை, அன்பைப் புறக்கணித்து விட்டு, அவருடைய ஐசுவரியத்தை உதறித் தள்ளி விட்டு, என்னுடன்—ஏழையான என்னுடன்—வாழ்வதற்கு வந்துவிடுவாயா? தங்கம்! உன்னை நான் காதலியாக அடைந்தேனே. நான் பாக்கியசாலி!" என்று தழுதழுக்கக் கூறினான் சேகர்.

நான் தூக்கம் வராமல் — தூங்குவது போல் பாசாங்கு செய்தேன். அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்கக் கேட்க என் உள்ளம் ஏனோ பூரிப்படைந்து கொண்டிருந்தது. ஆம், இவ்வளவு அன்பு கலந்த காதலர்களைக் காணும்போது, அவர்களுடைய காதல் சம்பாஷணைகளைக் கேட்கும் போது, அவர்களுடைய அன்பைக் கண்டு பெருமிதம் கொள்ள வேண்டியது தானே? அவர்கள் பாட்டுக்கு இன்னும் என்னென்னவோ அன்பு மொழிகளைப் பேசிக் கொண்டே இருந்தார்கள், தாங்கள் இருக்கும் இடம் மறந்து. நான் தான் தூங்கிக் கொண்டிருக்கிறேன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களே!



ரயில் காட்பாடி ஸ்டேஷனில் நின்றது. எனக்குத் தாகமாக இருந்தது. தூக்கத்திலிருந்து எழுபவன் போல் எழுந்து, "இது என்ன ஸ்டேஷன், காட்பாடியா?" என்று சேகரைப் பார்த்துக் கேட்டேன்.

"ஆமாம் ஸார்!" என்றான் அவன்.

"ஒரே தாகமாய் இருக்கிறது" என்று கூறிக் கொண்டே மேல் பலகையிலிருந்து கீழே இறங்கினேன். ஒரு சோடா வரவழைத்துக் குடித்தேன். அவர்களுடன் பேச்சுக் கொடுக்க எனக்கு மிகவும் ஆவலாயிருந்தது. மெதுவாக, அவர்களுடன் பேச்சுக் கொடுக்கலானேன்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று பேச்சைத் தொடங்குவதற்காக அறிந்தும் அறியாதவன் போல் கேட்டேன்.

"கோயமுத்தூர் போகிறோம்..." என்று சொன்னான் சேகர்.

"நீங்கள் கூட கோயமுத்தூர் தான் போகிறாப் போல் இருக்கிறது?" என்று சேகர் என்னைப் பார்த்துக் கேட்டான். அவனும் ரிஸர்வேஷன் காகிதத்தில் பார்த்திருப்பான் அல்லவா?

"ஆமாம்" என்ற பாவனையுடன் என்னுடைய தலையை ஆட்டினேன்.

"கோயமுத்தூரில் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள் தங்கம்.

"கொஞ்சம் 'பிரைவேட்' அலுவலாகப் போகிறேன்" என்றேன். என் அலுவலை அவளிடம் சொல்ல ஏனோ மனம் எழவில்லை.

அதற்குமேல் கிளறிக் கேட்பது நாஸூக்கல்ல என்பதை நாகரிகப் பெண்ணான அவள் அறியாமலிருப்பாளா?

"நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? காலேஜில் படிக்கிறீர்களா?" என்று கேட்டேன் சேகரை.

"ஆமாம் பி. எஸ்ஸி. கடைசி வருஷம் பரீட்சை எழுதியிருக்கிறேன். தங்கம் இண்டர் பரீட்சை எழுதியிருக்கிறாள்" என்று கூறினான்.

நான் மறுபடியும் நாவலைப் படிப்பதற்கு ஆரம்பித்தேன்.

திடீரென்று, "ஏன் ஸார், உங்களுக்குக் காதலில் நம்பிக்கையிருக்கிறதா? காதல் மணத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?" என்று கேட்டான் சேகர்.

நான் திடுக்கிட்டேன். "ஏன், திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"தெய்விகக் காதல் என்ற நவீனத்தைப் படித்துக் கொண்டிருக்கிறீர்களே, அதனால் தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன்" என்று சொன்னான் அந்த வாலிபன்.

"காதலில் நம்பிக்கையில்லாமல் இருக்க முடியுமா? ஆனால் நமக்கு ஏற்படுவது எல்லாம் காதல் என்று அவசரப்பட்டு எண்ணி விடக் கூடாது. உண்மையான காதலானால் யாரும் போற்ற வேண்டியது தானே?" என்றேன்.

"பாருங்கள், ஸார்! சாதாரணமாக இந்தக் காதல்-பவித்திரமான, உண்மையான தெய்விகக் காதல்-எப்போதும் பொருளாதார வித்தியாசமுள்ள இருவரிடையேதான் பற்றிக்கொள்கிறது. நானும் தங்கமும் ஒருவரை யொருவர் காதலிக்கிறோம். நீங்கள் சொல்லுவதுபோல் எங்கள் காதல் மிகவும் உண்மையானது. இதில் எங்கள் இருவருக்குள்ளும் எந்தவிதமான சுயநலமும் இல்லை......ஆனால் இது நிறைவேறுமா என்பதுதான் சந்தேகமாய் இருக்கிறது...! எனக்குத் தாய் தந்தையர் யாரும் இல்லை. என் தகப்பனார் ஏதோ கொஞ்சம் பணம் சேர்த்து வைத்து இருக்

தார். அதைக் கொண்டு என் மாமா என்னை இது வரை படிக்க வைத்து விட்டார். இனி என்னுடையது என்று சொல்லிக் கொள்ளக் காலணா இல்லை. இந்தத் தங்கமோ கோயமுத்தூரில் ஒரு பெரிய ஆலை முதலாளியின் மகள். இன்று நான் இரண்டாவது வகுப்பில் வருவதுகூட அவளுடைய தயவில்தான். அப்படியிருக்க, சுலபத்தில் எங்களுடைய காதல் நிறைவேறுமா? நீங்களே சொல்லுங்கள். தங்கம் சொல்கிறாள்: 'அவளுடைய அப்பா மிகவும் நல்லவராம். அவளுடைய பேச்சுக்கு எதிர் சொல்ல மாட்டாராம். அவரிடம் தங்கம் சொல்லி எங்கள் மணத்துக்குச் சம்மதிக்கச் செய்து விடுவாளாம்.' எனக்கென்னமோ அது நடக்கும் என்று தோன்றவில்லை" என்றான் சேகர்.

அவன் இவ்வளவு சகஜமாகத் தன் காதல் விவகாரங்களை என்னிடம் சொல்லி என் அபிப்பிராயத்தைக் கேட்டதைக் கண்டு என்னுடைய உள்ளம் நெகிழ்ந்தது.

தங்கத்தைப் பார்த்தேன். ஒரு குழந்தை, 'எங்கப்பா எனக்கு மோட்டார் வாங்கித் தருவாரே. என்னை ரயிலில் அழைச்சுண்டு போவாரே' என்று திடமாக நம்பித் தன் தோழர்களிடம் சவால் விடும்போது அதன் முகத்தில் தோன்றும் பெருமிதம் அவள் முகத்தில் குடி கொண்டிருந்தது.

"ஏன் தங்கம் சொல்வது போல் நடக்கக் கூடாது? நிறைவேறும் காதலும் உண்டல்லவா? தங்கத்தினுடைய அப்பாவுக்கு அவள் ஒரே பெண்ணாக இருப்பாள். ('ஆம்' என்று தங்கம் தலையாட்டினாள்.) பார்த்தீர்களா? ஒரே பெண்ணானதால் பெண் கல்யாணமானதும் தன்னைப் பிரிந்து விடப் போகிறாளே என்று அவளுடைய பிரிவைத் தாங்க முடியாமல் அவள் தந்தை அவளை என்றும் தம்முடனே வைத்துக் கொள்ளலாம் என்று ஏழையான பிள்ளையாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க எண்ணம் கொண்டிருக்கலாம். அப்போது உங்கள் காதலும் நிறைவேறலாம் அல்லவா?" என்றேன்.

என் பேச்சைக் கேட்டதும் சேகருக்குப் பூரிப்பு உண்டாயிற்று. "ஸார், நீங்கள் தெய்வம் போல் கூறினீர்கள். உங்கள் வாக்குப் பலிக்க வேண்டும்" என்றான்.

தங்கத்தின் முகம் மலர்ந்திருந்தது.

"நிச்சயமாய் அவ்விதம் நடக்கும் சேகர். கவலைப்படாதீர்கள். உங்கள் இருவரையும் பார்த்ததுமே நீங்கள் ஒருவருக்கொருவர் படைக்கப்பட்டவராகவே காணப்படுகிறீர்கள். கடவுள் உங்கள் பங்கில் கட்டாயம் இருப்பார்" என்றேன்.

"கடவுள் அந்தச் சபாபதியினுடைய உள்ளத்தில் இந்த எண்ணத்தை உண்டாக்குவாராக" என்றான் சேகர் அதேசமயம்.

சபாபதி என்ற பெயரைக் கேட்டதும் திடுக்கிட்டேன். "சபாபதி யார்? தங்கத்தின் தகப்பனாரா?" என்று கேட்டேன்.

"ஆமாம், கோவை 'தங்கம் டெக்ஸ்டைல்'ஸின் முதலாளி" என்றான் சேகர்.

அதைக் கேட்டதும் என் மனம் தடுமாறியது. என்ன செய்வதென்று புரியவில்லை. என் உடல் வியர்த்துக் கொட்டியது.

"என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று கேட்டான் சேகர்.

"ஒன்றுமில்லை.........ஒரு முக்கியமான ஜோலி நாளை சென்னையில் இருக்கிறது. இப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது... அதை மறந்து பிரயாணம் துவங்கி விட்டேன் ...... அதனால் நான் ஜோலார்ப் பேட்டை வந்ததும் இறங்கி எதிர் வண்டி பிடித்துப் போக வேணும்" என்றேன்.



"அடடா...டிக்கட் கோயம்புத்தூர் வரையில் வாங்கியிருக்கிறீர்களே....அதுவீணாய்ப் போகுமே......"

"போனால் போகிறது. நான் நாளைக் காலை சென்னையில் இராவிட்டால் தலையே போய் விடும்......" என்றேன்.

வண்டியும் ஜோலார்ப் பேட்டையை அடைந்தது. நான் இறங்கினேன். "உங்கள் விவாகத்துக்கு என்னை அழைக்க மறந்து விடாதீர்கள்" என்றேன்.

"உங்களை எப்படி ஸார் மறக்க முடியும்? விலாசம் கொடுங்கள்" என்றான் சேகர். விலாசத்தைச் சேகரிடம் கொடுத்தேன்.

நான் ரயில்வே தபால் நிலயத்துக்குப் போய் அவசரம் அவசரமாகக் கடிதம் ஒன்றை எழுதினேன்.

ஸ்ரீ சபாபதி அவர்களுக்கு,

சுந்தரம் நமஸ்காரம். தங்கள் பெண் தங்கத்தைக் காண என்னை வரும்படி கோரிய அழைப்புக்கிணங்க புறப்பட்டு வந்து நடு வழியில் ஜோலார்ப்பேட்டையில் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு இக் கடிதம் எழுதுகிறேன். தங்கள் பெண் தங்கத்துடன் ஒரே பெட்டியில் தான் பிரயாணம் செய்தேன். தங்கத்துடன் அவளுடைய நண்பனும் காதலனுமான சேகர் என்பவனும் பிரயாணம் செய்தான். அவர்கள் இருவரும் பழகிய விதத்திலிருந்து இருவரும் ஒருவரை யொருவர் மனமாரக் காதலிக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது.

சேகர் நல்ல அழகன். பி. எஸ்ஸி. படித்திருக்கிறான். அவனும் என்னைப்போல் ஏழைதான். எந்தக் காரணத்துக்காக எனக்குத் தங்கத்தை மணம் செய்விக்கத் தீர்மானித்தீர்களோ அதற்குச் சேகரும் தகுதியுடையவனே. ஆகவே, தாமதியாமல் சேகருக்கும், தங்கத்துக்கும் விவாகம் செய்து வைத்து விடுங்கள்.

சுந்தரம்.

இதைத் தபாலில் சேர்த்துவிட்டு எதிர் வண்டியில் சென்னை வந்து சேர்ந்தேன். ஒரு மாதம் பதிலே இல்லை.

* * *

அன்று ஒரு திருமண அழைப்பிதழ் வந்தது. அது தங்கத்தின் திருமணம்தான். அவள் காதலன் சேகர்தான் அவளை மணக்கப் போகிறவன். என் மனம் சந்தோஷமடைந்தது; விவாகத்துக்குப் போக ஆசைப்பட்டேன். ஆனால் முடியவில்லை.

ஒருநாள் திடீரென்று சேகரும், தங்கமும் என்னைத் தேடிக்கொண்டு வந்தனர்.

"வாருங்கள், வாருங்கள், உங்கள் காதல் நிறைவேறியது குறித்து மிகவும் சந்தோஷம்......" என்றேன்.

"எல்லாம் உங்களுடைய தியாகத்தினால் தான். நீங்கள் மகா புருஷர் சார்....அவ்வளவு செல்வத்தையும், இவ்வளவு அழகான தங்கத்தையும் க்ஷணத்தில் தியாகம் செய்து விட்டீர்களே......" என்றான்.

"ரொம்பவும் புகழாதீர்கள்......நீங்கள் சந்தோஷமாய் இருந்தால் அதுவே எனக்குத் திருப்தி......" என்றேன்.

"ஒரு விஷயம் சார்......உங்களிடம் ஒரு நாடகமாடி விட்டோம், அதற்காக மன்னிக்க வேண்டும்..." என்றான் சேகர்.

"என்ன விஷயம், புதிர் போடுகிறீர்கள்?" என்றேன், புரியாமல்.

"அன்று நீங்கள் வண்டியில் வந்த போதே நீங்கள் தங்கத்தைப் பார்க்கத்தான் வருகிறீர்கள் என்று எங்கள் இருவருக்குமே தெரியும்" என்றான் சேகர்.

"என்ன?" என்றேன், வியப்புடன்.

"ஆமாம் ஸார், தங்கத்தின் தகப்பனார் அவளுக்கு முன்பே உங்கள் புகைப்படத்தை அனுப்பி, நீங்கள் அவளைப் பார்க்க வரப் போவதாகவும், அதனால் பரீட்சை முடிந்த அன்றிரவே புறப்பட்டு வரும்படியும் எழுதியிருந்தார். நீங்கள் பரீட்சை தினத்துக்கு அடுத்த நாள் புறப்பட்டு வரப்போவதால் அன்றே நாங்களும் புறப்பட எண்ணினோம். தங்கத்தின் எண்ணம் என்னவென்றால் என்னை அழைத்துக் கொண்டு போய் அவளுடைய அப்பாவிடம் எங்கள் காதலைச் சொல்லி விடலாம் என்பது. நீங்களும் அதே பெட்டியில் இருக்கவே, உங்களுடன் பேசி உங்கள் மனசை மாற்றினால் என்ன என்ற ஆசை உண்டாயிற்று. உடனே உங்களிடம் பேச்சுக் கொடுத்தோம். ஆனால் நீங்கள் அவ்வளவு சீக்கிரமாக உங்களுடைய மேன்மையான எதிர் காலத்தைத் தியாகம் செய்து விட்டு ஜோலார்ப்பேட்டையில் இறங்கிப் போனதும் தங்கமும் நானும் மிகவும் பச்சாத்தாபமடைந்தோம். உங்களைக் கண்டு உங்கள் மன்னிப்பைப் பெறும் வரை மனச் சாந்தி ஏற்படாது போல் இருந்தது. எங்களை மன்னித்தேன் என்று சொல்லுங்கள்" என்று உணர்ச்சியுடன் சொன்னான் சேகர். தங்கம் நாணத்தால் தலை குனிந்திருந்தாள்.

"இதில் மன்னிக்க வேண்டியது ஒன்றுமில்லை. இதைக் கேட்டு எனக்கு மேலும் சந்தோஷமாக இருக்கிறது. உங்கள் காதல் வாழ்வு மேன்மையுடன் இருக்க வேண்டுமாய்க் கடவுளைப் பிரார்த்தனை செய்கிறேன். அதுதான் என்னால் செய்ய முடியும்" என்று கூறினேன்.

அவர்கள் மேலும் உபசார வார்த்தைகள் கூறி விட்டுப் போய் விட்டார்கள்.

அவர்கள் கலகலவென்று சிரித்துக் கொண்டு, அழகு நடை நடந்து போன காட்சி என் உள்ளத்தில் அழியாமல் பதிந்து போய் விட்டது.

ஒவ்வொரு இரவும் அதே கதை தான். குழந்தை நிலையில்லாமல் அயர்ந்து போயிருந் தான். பகலிலோ அதிலும் மோசம். தாயார் ஆத்திரப்பட்டிருந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.





ஒரு நாள் அவள் அண்டை வீட்டுக்காரி யின் யோசனையைக் கேட்டாள். அவள் சொன்னாள் "குழந்தை சந்தோஷமாயும் ஆரோக்கியமாயுமிருக்க அவனுக்கு உணவு கணக்காய் புகட்ட வேண்டும்" தவிர 'க்ளாக்ஸோ'வை வாங்கும்படி அவள் வற்புறுத்திச் சொன்னாள்.

'க்ளாக்ஸோ' ஒரு புஷ்டியான பால்-உணவு உறுதியான எலும்பும் பற்களும் வளர விடமின் 'டி'யும் ரத்தத்தை வளம்பெறச் செய்ய இரும்புச் சத்தும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.





அப்பாடா! குழந்தை எவ்வளவு விரைவில் வளர்ச்சியடைந்தான் என் பதைநீங்கள் நம்பவே மாட்டீர்கள். விரை வில் அவனுக்கு ஒரே ஆனந்தம் தான்! இரவு முழுவதும் தேர்ந்தியாய் தூங்க லானான். நிதானமாய் எடையும் அதிகமாயிற்று.

Glaxo

'க்ளாக்ஸோ' குழந்தைகளின் மிகச் சுத்தமான பால் உணவு

D. 34

பாலர் பகுதி

உபதேச



திருமாலிருஞ் சோலையில் ஒரு சந்நியாசி. அவரிடம் மிகப் பிரீதி கொண்ட சிஷ்யர்களில் ஒருவன் செவிடு. மற்ற சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்யும் போது தன் காதில் கேட்கவில்லையே என்று குருவிடம் ஒரு நாள் சொல்லிக் கொண்டான். "மற்றவர்களுக்கு நீங்கள் உபதேசம் செய்யுங்கள். உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்குப் போதும்" என்றான் இந்தச் சீடன்.

"மகனே, நீ சொன்னது எனக்கு ரொம்பத் திருப்தி தருகிறது. ஆனால் உனக்கும் தினம் ஒரு வாக்கியமாக ஓலையில் எழுதித் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு நீ உன் உள்ளத்தை வளர்ப்பாயாக" என்றார்.

அப்படியே செய்து வந்தார். தினம் ஒரு ஓலை பெற்றுக் கொண்டு சீடன் மிக பக்தியாக அவற்றைப் பத்திரமாகக் கட்டி வைத்தான். மூன்று ஆண்டு கழிந்தது. குருவானவர் மேலுலகம் சென்று விட்டார். சீடன்



மொழிகள்

ராஜாஜி





தான் சேமித்து வைத்த பெருஞ் சுவடியை அச்சுக்குக் கொடுத்துப் புஸ்தகம் வெளியிட்டான். மற்றச் சீடர்கள் 'நம்முடைய குருவின் உபதேசத்தை இவன் ஒருவனுக எப்படி வெளியிடலாம்' என்று ஆட்சேபித்து ராஜாவிடம் விவகாரம் கொண்டு போனுர்கள். 'பிரசுரிக்கக் கூடாது' என்று ராஜா உத்தரவிட்டான். செவிட்டுச் சீடன், "சுவடி என்னிடம் இருக்கிறது. நான் வேறு ஒருவருக்கும் கொடுக்க மாட்டேன்" என்றான். ஊர் இரண்டு கட்சியாய்ப் போய் விட்டது.

'நல்ல உபதேசங்கள், பிற்காலத்துக்குப் பயன்படும் பொருள், வீணய்ப் போயிற்றே' என்று ஒரு கட்சியின் வாதம்.

'குருவினுடைய உபதேச மொழிகளில் இவனுக்கு ஏது பிரசுரிக்கும் உரிமை!' என்று மற்றொரு கட்சி.

"நான் செவிடனு யிருந்ததால்தானே இந்த உபதேச மொழிகள் பிறந்தன!" என்று அந்தச் சீடன் வாதாடிக் கொண்டே யிருந்தான். இது சிலருக்கு நியாயமாகவே பட்டது.

வாதம் முடிவதற்குள் ஓலைச் சுவடிகள் கறையானுக்கு இரையாகி விட்டன. அதன் மேல் சண்டையும் நின்றது!

சந்யாசியை ஊரார் மறந்து விட்டார்கள்!



23. கன்னத்தில் அறை!

பிச்சைக்காரன் அந்த இடத்தை விட்டுப் போனதும், ஆனந்தன் குண்டுமணியைப்பார்த்து, "டேய்இந்த ரமணியைப் பார்த்தாயா! என்னைப் போலவே உயரம்! நிறமும் என் நிறம்தான்! அதனுல்தான்எனக்கும் இவனுக்கும் வித்தியாசம் தெரியாமல், பேனுவை நான் திருடினதாக என்னைப் பிடித்து ஜெயிலுக்குள்ளே தள்ளி விட்டார்கள் அந்தப் பட்டணத்துப் போலீஸ்காரர்கள்! சரி, அதைப் பற்றி இப்போது என்ன பேச்சு?" என்ருன். பிறகு அந்தப் பையனிடம், "ரமணி! நல்ல வேளையாக நீ அகப்பட்டு விட்டாய். மூன்று நாட்களாக உன்னைத்தான் தேடித் தேடி அலுத்துப் போனேம். பத்து நாட்களுக்கு முன்பு நாடகக் கொட்டகையிலே நீ பட்டுத் துணியைத் திருடி விட்டதனுல்தானே முதலாளி உன்னைப் பிடித்து வெளியே தள்ளினுர்? அதற்குப் பிறகு......"

—ஆனந்தன் முழுவதையும் கூறி முடிக்கவில்லை. அதற்குள் 'பட்'டென்று பலமாக ஓர் அறை விழுந்தது அவன் கன்னத்திலே! ஆனந்தனுக்கு அறை கொடுத்தது வேறு யாருமல்ல; அந்தப் புதுப் பையனேதான்!

ஆனந்தனுக்கு அறை விழுந்ததும், குண்டுமணி கன்னங்கள் இரண்டையும் கைகளால் மறைத்துக் கொண்டு எடுத்தான் ஓட்டம்! 'குடுகுடு' என்று கீழே ஓடி வந்து விட்டான். திரும்பியே பார்க்கவில்லை! மலைக்கோட்டை வாசலில் உள்ள பூக்கடைகளுக்குப் பக்கத்திலே வந்து நின்ற பிறகுதான் அவன் திரும்பிப் பார்த்தான்!

ஆனந்தனுக்கு அறை கொடுத்து விட்டு, "டேய் அயோக்கியப் பயலே! என்னைத் திருடனென்ரு சொல்கிருய்? பட்டுத் துணியாம்; பேனுவாம். நான் திருடினேனும்! என்னடா உளறுகிருய்?" என்று சீறினுன் அந்தப் பையன்.

"ஐயையோ! முழுவதையும் கேளேன். அதற்குள் அவசரப்படுகிருயே!" என்று கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டே கூறினுன் ஆனந்தன்.

"உன் பேச்சைக் கேட்கத் தேவை இல்லை. பாதாம் அல்வா, பாசந்தி எல்லாம் வாங்கித் தருவதாகச் சொன்னதைக் கேட்டதும் 'நான்தான் ரமணி' என்று கூறி உங்களை ஏமாற்ற நினைத்தேன். ஆனுல், என்னையே நீங்கள் ஏமாற்றிப் போலீஸில் பிடித்துக் கொடுக்கவல்லவா பார்க்கிறீர்கள்! நான் ரமணியுமில்லை; மண்ணுங்கட்டியும் இல்லை" என்ருன் அந்தப் பையன்.

"நீ ரமணி இல்லையா?" என்று ஏமாற்றத்துடன் கேட்டான் ஆனந்தன்.

"இல்லை! என் பெயர் பழனியாண்டி. உறையூரில் என் மாமா சுருட்டு வியாபாரம் செய்கிருர். அவர் வீட்டுக்கு வந்தேன். மலைக் கோட்டையையும் பார்த்து விட்டுப் போக வந்தால், என்னைப் பிடித்துப் போலீஸில் கொடுக்கவா திட்டம் போடுகிறீர்கள்? மடப் பயல்களா!......டேய், இப்போதே இந்த இடத்தை விட்டு ஓடுகிருயா, மண்டையைப் பிளக்கட்டுமா?" என்று வலது கையை ஓங்கிக் கொண்டே ஆனந்தனின் அருகிலே வந்தான் அந்தப் புதுப் பையன் பழனியாண்டி.

பாவம், ஆனந்தன் பதில் எதுவும் கூருமல் மெதுவாக அந்த இடத்தை விட்டு நழுவி விட்டான். தன்னுடைய அருமை நண்பன் குண்டுமணி எங்கே என்று சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் அங்கே இருந்தால்தானே! அடிவாரத்தில் அல்லவா இருக்கிருன்?

சோர்ந்து போய்க் கீழே இறங்கி வந்தான் ஆனந்தன். மாணிக்க விநாயகர்

கோயிலுக்குப் பக்கத்திலே அவன் வந்ததும், குண்டுமணி அருகிலே ஓடிப் போய்த் துக்கம் விசாரித்தான்.

"போடா பயங்கொள்ளிப் பயலே! அவன் என்னை ஒரு அறை அறைந்ததற்கு, அவனுக்கு நீ ஒன்பது அறைகள் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டாமோ? ஆள்தான் ஆனைக் குட்டி மாதிரி இருக்கிறாய்! என்ன பிரயோசனம்?" என்று கோபமாகக் கூறினான் ஆனந்தன்.

'பாவம், இந்த அறையை வாங்கவா இவ்வளவு தூரம் ஏறிப் போனோம்? சரி, வருத்தப்பட்டு என்ன செய்வது? பெரிய காரியங்களிலே ஈடுபட்டால், இப்படித்தான் பல கஷ்டங்கள் ஏற்படும். கவலைப் படாதே! எப்படியும் இன்னும் இரண்டு நாட்களில் ரமணியைக் கண்டு பிடித்து விடலாம்" என்று ஆறுதல் கூறினான் குண்டுமணி.

உடனே ஆனந்தன், "குண்டுமணி, இனிமேல் என்னாலே இப்படி அறை வாங்க முடியாது. இன்றைக்குத் தபாலிலே மாமாவுக்கு ஒரு கடிதம் போடப் போகிறேன்" என்றான்.

"கடிதத்திலே என்ன எழுதப் போகிறாய்? அறை வாங்குவதற்குப் பட்டணத்திலேயிருந்து 'ஸ்பெஷ'லாக ஆள் அனுப்பச்சொல்லி எழுதப்போகிறாயா?"

"உனக்கு எல்லாம் வேடிக்கைதான். அடையாளத்தை வைத்து ரமணியைக் கண்டு பிடிக்கப் போனதால்தானே இந்தக் கஷ்டமெல்லாம்? மாமாவுக்கு எழுதி ரமணியினுடைய 'போட்டோ' இருந்தால், உடனே அனுப்பச் சொல்லப் போகிறேன். போட்டோ இருந்தால் சுலபமாக அவனைக் கண்டு பிடித்து விடலாம் அல்லவா?"

"ஆமாம்! இப்படி அலையவும் வேண்டாம்; அறை வாங்கவும் வேண்டாம்" என்று சிரித்துக் கொண்டே கூறினான் குண்டுமணி.

*   *   *

மானேஜர் மதுரநாயகம் கன்னத்தில் கை வைத்தபடி தமது அறையில் உட்கார்ந்திருந்தார். அவர் முகம் மிகவும் வாட்டமாக இருந்தது.

அப்போது, "சார், நீங்கள் சொன்னபடி 'போர்டு' எழுதி முடித்து விட்டோம். வந்து பார்க்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே அந்த அறைக்குள் வந்தார் சுதர்சன்.

ஸ்ரீ முருகன் பால நாடக சபாவிலே சுதர்சன் தலைமை ஓவியராக இருக்கிறார். மிகவும் அழகாகப் படங்கள் வரைவார். படங்களைப் பார்ப்பவர்கள், பார்த்தவுடனேயே அந்த இடத்தை

விட்டுப் போய்விட மாட்டார்கள். சிறிது நேரம் அங்கேயே நின்று, படம் முழுதும் ஆசை தீரப் பார்த்து விட்டுப் பிறகுதான் போவார்கள்.

அன்று காலையில் விசேஷமாக ஒரு 'போர்டு' எழுத வேண்டுமென்று மதுர நாயகம் சுதர்சனிடம் கூறியிருந்தார்.

அதன்படி, 'சீனத் தூது கோஷ்டியினரே, வருக! வருக!' என்று ஆங்கிலத்தில் ஒரு போர்டு எழுதினார் சுதர்சன். அந்தப் போர்டின் வலது பக்கம் சீன தேசத்தின் படமும், இடது பக்கம் ஒரு சீனரும், ஓர் இந்தியரும் தோள்மேல் கை போட்டு நிற்பது போலவும் வரைந்திருந்தார். அதை எழுதி முடிக்கும் போது சரியாக மாலை நாலு மணி. எழுதி முடித்தவுடன்தான், சுதர்சன் மானேஜரிடம் வந்தார். 'எழுதி முடித்தாய் விட்டது' என்று கூறினார். ஆனால், அவர் கூறியது மதுரநாயகத்தின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவர் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"என்ன சார், கவலையாக இருக்கிறீர்களே!" என்று கேட்டார் சுதர்சன்.

"ஒன்றும் இல்லை. ரமணியைப் பற்றித்தான் கவலை......"

"ஏன் சார், திருச்சியிலிருந்து ஒரு விதமான தகவலும் வரவில்லையா?"

"காலையிலே ஒரு கடிதம் வந்தது. மூன்று நாட்களாக என் அக்காள் மகன் ஆனந்தனும் அவன் சிநேகிதனும் திருச்சியிலும், சுற்றுப் புறத்திலும் தேடு தேடென்று தேடிப் பார்த்து விட்டார்களாம். கிடைக்கவில்லையாம். 'ரமணியின் போட்டோ இருந்தால் உடனே அனுப்பி வையுங்கள்; சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம்' என்று எழுதியிருந்தான். ரமணியின் போட்டோ இங்கே இருந்தால்தானே, அனுப்புவதற்கு? 'ரமணியின் போட்டோ எதுவும் இல்லை. எப்படியாவது அடையாளத்தை வைத்துக் கண்டு பிடியுங்கள். தேடுவதை நிறுத்த வேண்டாம். ஒரு வாரத்தில் கிடைத்து விட்டால் நல்லது. இல்லாதபோனால், நானே நேரில் வருகிறேன்' என்று சற்று முன்புதான் பதில் எழுதிப் போட்டேன்......ம்.....ஒரு போட்டோ இருந்தால் எவ்வளவு உதவியாயிருக்கும்?" என்று கூறிப் பெருமூச்சு விட்டார் மதுரநாயகம்.

இதைக் கேட்டதும் சுதர்சன் சிறிது நேரம் யோசனை செய்தார். பிறகு, "சார், சார்! எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்றுகிறது!" என்றார்.

இதைக் கேட்டதும், "யோசனையா! அது என்ன? சீக்கிரம் சொல்" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டார் நாடகசபா மானேஜர் மதுரநாயகம். (தொடரும்)


எவ்வளவு காலம் உழைக்கிறது...

என்ன

புதுமை!



501 ஸோப்பைக் கொண்டு சலவை செய்யப்படும் துணி மணிகள் நீடித்துழைப்பதுடன் புதுமையும் அடைகின்றன. இந்த ஸோப்புகள் பார்களாகவும், சிறு தூள்களாகவும் விற்கப்படுவது தவிர, 501 ஸ்பெஷலுமாகக் கிடைக்கும். இவை பணம் மிச்சப்படுத்துகின்றன, துணிகளை மிகவும் பாதுகாக்கின்றன, வீட்டுச் சலவை வேலையை உங்களுக்கு எவ்வளவோ சுலபமாகவும் செய்கின்றன



501

சலவை ஸோப்புகள்

டாடா தயாரிப்பு

TATA PRODUCT

இந்திய மூலதனத்தைக் கொண்டு, இந்திய நிர்வாகத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது

FS 8708



36. தொங்கும் தோட்டம்

"காளிதாஸ மகாகவி ரகுவம்சம் என்ற அருமையான காவியத்தில் அஜ மகாராஜனை இந்துமதி சந்திக்கும் கட்டத்தில் ஓர் உதாரணம் சொல்கிறான். சுயம்வர மண்டபத்தில் வீற்றிருக்கும் அரசர்களையெல்லாம் ஒவ்வொருவராக இந்துமதிக்கு அறிமுகப் படுத்துகிறாள் தோழி ஸுநந்தை. அஜன் இருக்கும் இடம் வந்ததும், அவனுடைய வர்ணனை பிரமாதம் ஆகி விடுகிறது. 'குடிப்பிறப்பு, அழகு, இளமை, அடக்கம் முதலிய நற்பண்புகள் உடைய உனக்கு, இத்தனை நற்பண்புகளும் கொண்ட இந்த அஜமகாராஜர் சமமானவர். அவரை நீ வரிப்பாயாக. ரத்தினம் பொன்னோடு சேர்ந்தது போலாகும்!' என்கிறாள். அடடா! அந்த உதாரணம்தான் இப்பொழுது எனக்கு நினைவு வருகிறது" என்றான் ராமநாதன் சந்திரிகாவைப் பார்த்து.

பம்பாய் நகரத்துத் "தொங்கும் தோட்டத்தி"லே ராமநாதனையே மருண்டு மருண்டு பார்த்துக் கொண்டிருந்த சந்திரிகா இப்பொழுது கேட்டாள்: "நீங்கள் ரகுவம்சம் படித்திருக்கிறீர்கள் என்று தெரிந்து சந்தோஷப்படுகிறேன். ஆனால் இந்த உதாரணத்துக்கும் நீங்கள் சற்று முன்பு குறிப்பிட்ட என்னுடைய வாழ்க்கை வரலாற்றுக்கும் என்ன சம்பந்தம்?"

ராமநாதன் சொன்னான்: "சந்திரிகா! உன்னுடைய வாழ்க்கை வரலாறு எனக்குத் தெரிய வந்ததிலிருந்து, உன்னிடம் எனக்குள்ள அநுதாபம் கொஞ்சநஞ்சமல்ல. ஏற்கனவே உன்னிடமிருந்த அன்பு, இந்த வரலாற்றைத் தெரிந்து கொண்டதிலிருந்து இன்னும் பல மடங்கு அதிகரித்திருக்கிறது."

சந்திரிகா சொன்னாள்: "அதற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எனக்குக்கூடத் தெரியாத விவரங்கள் என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? என் ஆவலை இப்படித் தூண்டி விடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!"

ராமநாதன் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தான். பிறகு பேசினான்: "சந்திரிகா, நீ ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண். சிறு குழந்தையாக இருந்தபோது, உன்னை அபகரித்துக்கொண்டு போன ஒரு துஷ்டப் பெண் உன் வாழ்க்கையை வேறு எப்படியோ மாற்ற வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் ரயில் வண்டியில்—"

இப்படி ராமநாதன் சொல்ல ஆரம்பிக்கும்போதே சந்திரிகாவின் கண்களிலிருந்து 'பொல பொல' என்று கண்ணீர்த் துளிகள் பொங்கி வழிய ஆரம்பித்தன. இதை ராமநாதன் கவனித்தான்.

"சந்திரிகா! உன்னுடைய இதயத்தின் ஆழமான அந்தரங்க உணர்ச்சிகளைக் கிளறி விடுவதற்கு வருந்துகிறேன். ஆனாலும்—"

"மிஸ்டர் ராமநாதன்! என்னுடைய வாழ்க்கையில் அந்த ரயில் வண்டிச் சக்



திப்பை யார் நினைவூட்டினாலும் என் உணர்ச்சிகளை என்னால் அடக்க முடிகிறதில்லை. கொடும் நரகத்திலிருந்து என் வாழ்க்கையைக் கடைத்தேற்றிய அந்த மகா புருஷர், அந்தப் புண்ணிய சீலருடைய கருணையை எப்படிச் சொல்லுவேன்! ரயில் வண்டியிலே அவரிடம் பிச்சை கேட்டேன். காலணாக் கொடுத்திருந்தால் நகர்ந்திருப்பேன். ஆனால் அவர் என்ன கொடுத்தார்? என் எதிர் காலத்தையே எனக்குக் கொடுத்தார். கலை வாழ்வையே எனக்குப் பிச்சையாக அளித்தார். என்னுடைய பெருமை, என்னுடைய நற்பண்புகள் என்று ஏதேதோ சொன்னீர்களே இப்பொழுது, அத்தனையும் அவர் எனக்குக் கொடுத்த பிச்சை. இப்பொழுதோ துரோகந்தான் செய்து விட்டேன். அந்த உத்தமருடைய—"

சந்திரிகாவுக்கு வார்த்தைகள் தடைபட்டன. ராமநாதன் ஆச்சரியத்தோடு கேட்டான்:

"துரோகமா? சந்திரிகா, நீ என்ன சொல்லுகிறாய்? உன்னுடைய இதய அந்தரங்கத்தை என்னிடம் சொல்லலாம் என்று உனக்கு நம்பிக்கை ஏற்பட்டால், தயவுசெய்து சொல்லு. நீ அவருக்கு என்ன துரோகம் செய்கிறாய்? அல்லது செய்திருக்கிறாய்? எனக்குத் தெரிந்தவரை ஒன்றும் இல்லையே—"

"நான் அங்கிருந்து மறைந்ததைவிட வேறு என்ன துரோகம் இருக்க முடியும்?" என்று கேட்டாள் சந்திரிகா.

"துரோகம் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே நீ அங்கிருந்து மறைந்தாய்? உண்மையில் ரவீந்திரனுடைய குடும்பத்துக்கு நீ உன்னுடைய நன்றியைத் தானே இந்த முறையில் செய்து காட்டியிருக்கிறாய். இதில் தவறு என்ன இருக்கிறது! அத்தனை குழப்பத்தில் நீ வெளியேறியது ஒன்றே, உன்னுடைய நல்ல குணத்துக்குச் சான்று. அப்படித்தான் நான் நினைக்கிறேன். மற்றப்படி உன் வாழ்க்கையில் ரவீந்திரனுக்கு உரிய ஸ்தானம் வேறு என்ன உண்டு? இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்!"—இப்படிச் சொல்லிவிட்டு ராமநாதன் மௌனமாக இருந்தான்.

"ரவீந்திரனுடைய ஸ்தானம்" என்ற வார்த்தைகள் சந்திரிகாவின் உள்ளத்தில் அப்படியே போய்ப் பதிந்தன. அவருடைய ஸ்தானம் என்ன? தன் வாழ்வில் அவர் வகிக்கும் ஸ்தானம் என்ன? தனக்கும் அவருக்கும் உள்ள பாசம் எத்தகையது?—சந்திரிகாவுக்கு, சாவித்திரி அம்மாளோடு தான் பேசிய அத்தனை வார்த்தைகளும் மீண்டும் நினைவுக்கு வந்தன.

"மிஸ்டர் ராமநாதன்! எனக்கே புரியாத என்னுடைய உணர்ச்சிகளைக் கடந்த ஒரு வாரமாக என் மனத்துக்குள்ளேயே நான் விமரிசனம் செய்து கொண்டிருக்கிறேன். உங்கள் சகோதரி ஏதேதோ புதிய சிந்தனைகளையெல்லாம் என் உள்ளத்தில் கிளறினார்கள்—"

"சந்திரிகா, அக்கா கொஞ்சம் அதிகமாகப் பேசுவாள். அதற்காக வருத்தப்படாதே. மொத்தத்தில் அவள் ஒரு நல்ல பெண். அதிகமாகப் பேசுகிற பெண்களை எப்பொழுதும் நல்லவர்கள் என்று வைத்துக் கொள். வார்த்தைகளைப் பேசாமல், ஒவ்வொரு வார்த்தையைச் சொல்லுவதற்கு முன்பும், ஆயிரந் தடவை மனத்துக்குள்ளேயே யோசித்து யோசித்துப் பேசுகிறார்களே, அப்படிப்பட்ட பெண்களை எளிதில் நம்பக் கூடாது. ஆனால் வெகுளித்தனமாக படபட என்று பேசுகிற பெண்களிடம் கபடம் இராது. அக்காளும் இந்த ரகத்தைச் சேர்ந்தவள். ஆனால் புத்திசாலி.



விரைவாகப் பேசினாலும் புத்தியோடு பேசுகிறவன்தான் அவன்!"

"உண்மையான பேச்சு நீங்கள் சொல்வது! உங்களிடந்தான் அவர்களுக்கு எத்தனை அன்பு இருக்கிறது! நான் இந்தப் பம்பாய்க்கு வந்து சேர்ந்த நாளிலிருந்து இதுவரை ஒவ்வொரு நிமிஷமும் அந்த அன்பை உணருகிறேன்—"

"அதாவது உணர்த்தப் படுகிறாய்! அதாவது ஒவ்வொரு நிமிஷமும் உன்னிடம் என்னைப் பற்றி ஏதாவது அவன் சொல்லிக் கொண்டே இருக்கிறான். அப்படித்தானே?"

சந்திரிகா சிரித்தாள். வானத்தில் சந்திரன் உதித்து வந்து கொண்டிருந்தான். அந்த நிலவின் ஒளியில் சந்திரிகாவின் சிரித்த முகத்தைக் கூர்ந்து பார்த்தான் ராமநாதன். மேகங்களுக்கு மத்தியில் நிலவு பிரகாசிப்பதைப் போல, எத்தனையோ சஞ்சலங்களுக்கு மத்தியில் அந்த முகத்தில் சிரிப்பு குளுமையோடு ஒளி வீசியது.

"சந்திரிகா, உன்னுடைய பிறப்பைப் பற்றியும், உன்னுடைய குடும்பத்தைப் பற்றியும் டாக்டர் சுரேஷ் பரிபூரணமாக அறிவார். அவர் திருச்சி ஜில்லாவில் வைத்திய அதிகாரியாக வருவதற்கு முன்பு, தெற்கு ஜில்லாக்களில் அதிக நாள் உத்தியோகம் பார்த்தவர். உன்னைப் பற்றி எல்லா விவரங்களும் அவருக்குத் தெரியும். ஆனால் ஏதோ சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அதுவரை அந்த விவரங்களும் இரகசியமாகவே இருக்கட்டும் என்று நினைக்கிறார்போல் தோன்றுகிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் சொல்வேன். காளிதாஸனுடைய இந்துமதி எப்படித் தனக்குப் பொருத்தமான ஒரு கணவனை வரித்தாளோ, அப்படி நீயும் ஒரு கணவனை வரித்து, உன் வாழ்வும் நிம்மதியாக அமைந்து, வாழையும் கன்றும்போல உன்னுடைய குல வம்சம் வழி வழியாக வளருமானால் டாக்டர் சந்தோஷப்படுவார். டாக்டர் மட்டும் என்ன? எல்லாருமே சந்தோஷப் படுவார்கள். ரவீந்திரனுமே சந்தோஷப்படுவார். அக்காளைப் பற்றியோ சொல்லவே வேண்டாம்."

காரின் குழலோசை கேட்டது. 'ஷாப்பிங்' சென்றிருந்த சாவித்திரி அம்மாள் திரும்பி வந்து கொண்டிருந்தாள்!

காரிலிருந்து இறங்கி 'ஸிமென்ட்' பெஞ்சை நோக்கி வரும்போதே, நிலவின் வெளிச்சத்தில் சந்திரிகாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டாள்.

"என்ன சந்திரிகா! ஏன் முகம் கலங்கியிருக்கிறது? எத்தனை சிரித்து மழுப்பப் பார்த்தாலும், கண் எல்லாம் சிவந்திருக்கிறதே. கண்ணீர் விட்டிருக்கிறாய் போல் இருக்கிறதே! பார்த்தாயா, ஆமாம்! என்ன ராமநாதா, என்னுடைய சந்திரிகா கொஞ்சம் நிம்மதியாகப் பேசிக் கொண்டிருக்கட்டும் என்று நினைத்து அவளை இங்கே விட்டுப் போனால், அவள் வருத்தப் படும்படியா பேசுவது! சில விஷயங்களில் நீ வெறும் அசடு!"

இப்படி ஒரு போடு போட்டாள் சாவித்திரி அம்மாள். அவளுக்கு உண்மையிலேயே திகைப்பு ஏற்பட்டிருந்தது. ராமநாதன் என்ன பதில் சொல்லுவது என்று தெரியாமல் குழப்பத்தோடு விழித்தான். சந்திரிகா இதைப் புரிந்து கொண்டு பேசினாள்.

"நான் வருத்தப்படும்படி அவர் எதுவும் சொல்லவில்லை அம்மா. உண்மையில் அவர் எதுவுமே பேசவில்லை. நான்தான் கழிந்த காலத்தை யெல்லாம் நினைத்து......"

"ஓ! அப்படியா! சரி சரி, நீ கழிந்த காலத்தை நினைத்து விட்டாயா! தெரியுமே. அதை நினைக்காமல் இருக்க முடியாதே உன்னால். நினைத்ததும் அழாமல் இருக்க முடியாதே, உன் கண்களால்! ஐயோ! ஐயோ! இப்படியும் ஒரு அசடு உண்டா! தம்பிதான் சில விஷயங்களில் அசடு என்று நினைத்தேன். நீயும் அப்படியே தான், சந்திரிகா! வந்து சேர்ந்தீர்களே இப்படி இரண்டு பேரும்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே அன்புக் கோபத்திலே ஒரு கொஞ்சலான கோபப் பார்வை பார்த்துக் கொண்டே 'ஸிமென்ட்' பெஞ்சில் உட்கார்ந்தான் சாவித்திரி அம்மாள்.



"சந்திரிகா, உன்னுடைய வாழ்க்கையைப் பற்றி இவனும் திருச்சியில் ஒரு டாக்டர் இருக்கிருராமே— ஒரு துப்பறியும் புலியாமே — அவரும் சேர்ந்து ஏதேதோ பெரிதாகக் கண்டு பிடித்து விட்டார்களாம்! தில்லியில் இருந்து இவன் வந்து சேர்ந்த அன்றைக்கே என்னிடம் அதைச் சொன்னுன். அப்படி என்னதான் கண்டு பிடித்திருக்கிருர்களோ! பெரிய இரகசியம் என்று என்னிடம் பயமுறுத்துகிருன்! இந்த ஆண்களே எப்பொழுதும் இப்படித் தான்! நாம் வாயாடிகள் என்பது இவர்கள் சித்தாந்தம். ரகசியம், ரகசியம் என்று அர்த்த மில்லாமல் பிரமாதப் படுத்துவார்கள். கடைசியில் நெல்லுக்குள் அரிசி இருக்கிறது, கண்டு பிடித்து விட்டோம்!—என்பார்கள். தாங்கள் தான் பெரிய புத்திசாலிகள் என்று நினைப்பு! இதை யெல்லாம் பொருட்படுத்தாதே சந்திரிகா. என் தம்பியானுலும் சரி, அந்த மாயா ¡வினேத மகா புத்திசாலி டாக்டர் ஆனுலும் சரி, ஏன்—எங்களவரே ஆனுலும் சரி, அப்படித்தான்! இது ஆண்களுக்கு ஒரு வியாதி. டாக்டர் சுரேஷால்கூட குணப்படுத்த முடியாத ஒரு வியாதி. அவருக்கே உள்ள ஒரு வியாதி!"

ராமநாதன் சிரித்துக் கொண்டே இந்த வார்த்தைகளைக் கேட்டான். சந்திரிகா இடை மறித்தாள்.

"அப்படிச் சொல்லாதீர்கள் அம்மா! டாக்டர் சுரேஷ் உண்மையிலேயே மகா புத்திசாலி. அவரால் நமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளுக்கு ஒரு அளவே இல்லை!"


"அது சரி, சந்திரிகா! அவர் கெட்டவர் என்ருே, அசடு என்ருே சொல்லவில்லையே நான். பொதுவாக ஆண்களுக்கே சில விஷயங்களில் புத்தி போதாது என்று சொல்ல வந்தேன். பாரேன், ராமநாதனுக்கு உன்னுடைய விருத்தாந்தத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்ன அவசியம் வந்தது இப்பொழுது? அர்த்தமில்லாமல், எதை யெதையோ பேசி உன்னைத் துக்கப் படுத்தி விட்டான், பார்!" என்ருள்.

"இல்லவே இல்லை அம்மா! உண்மையில் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று என் அந்தரங்கத்தில் ஏற்பட்டுள்ள என்னுடைய தாபம் வேறு யாருக்குமே புரியாது. அதை அவர் ஓரளவு புரிந்து கொண்டு பேச ஆரம்பித்தது எனக்கு அதிசயமாக இருந்தது அம்மா! என்னுடைய ஏக்கமும், பொருள் விளங்காத என்னுடைய உணர்ச்சிகளும், என்னைப் பற்றி நான் அறிந்து கொள்ள வேண்டும் என்று தவிக்கிற அந்தத் தவிப்பிலே இருந்து உண்டான குழப்பங்களும்தான் இத்தனை துக்கத்துக்கும் காரணம். நாலு பேரைப் போல் என் குடும்பத்தையும், எனது பிறப்பையும் நான் தெரிந்து கொண்டிருந்தால் என் எதிர்காலத்தை எப்படி அமைப்பது என்பதில் எனக்குச் சஞ்சலம் உண்டாக வேண்டிய அவசியமே இல்லை. என்னையும் அறியாமல் என் உள் மனத்தில் என் பெற்ருேர்களைப் பற்றிய நாட்டமும், கவலையும் என்னைக் குமைத்துக் கொண்டே இருக்கின்றன. நீங்கள்தான் யோசித்துப் பாருங்களேன். தாயார் தகப்பனுரின் அரவணைப்பில் இருந்திருந்தால் எனக்கு ஏன் இத்தனை குழப்பம் வந்திருக்க வேண்டும்! நீங்கள் கேட்டீர்களே, ஒரு கேள்வி. என்னுடைய எதிர்காலத்தை நான் எப்படி வகுத்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை முதன் முதலாகக் கிளறியது

உங்களுடைய அந்தக் கேள்விதான். அந்தக் கேள்வி எழுந்த விநாடியிலிருந்து என் மனசில் இந்தப் புதிய ஏக்கம் குடி புகுந்தது. என்னைப் பெற்றவள் யார், என் தகப்பன் யார், இவர்கள் எங்கே இருக்கிறார்கள், இவர்களை நான் என்றைக்காவது பார்ப்பேனா—இப்படி யெல்லாம் இதுவரை இல்லாத ஏக்கம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது, அம்மா! எனக்குத் தாயும், தந்தையும், எல்லாமுமாக இருந்த அந்த உத்தமரை என்றைக்குப் பிரிந்து வந்தேனோ, அந்த நிமிஷத்திலிருந்து இந்தப் புதிய நினைப்புக்கள் என் உள் மனத்தில் என்னையும் அறியாமல் தோன்ற ஆரம்பித்தன. தாங்கள் கேட்ட கேள்விக்குப் பிறகோ இந்த நினைப்புக்கள் என்னை எப்படியெப்படியெல்லாமோ குழப்புகின்றன—''

சந்திரிகாவுக்கு மீண்டும் கண்கலங்கியது. இமைகளை மூடி விழிப்பதற்குள், கண்ணீர்த் துளிகள் 'குபு குபு' என்று கொட்டின.

"பார்த்தாயா! பார்த்தாயா! சந்திரிகா பழையபடியும் வருத்தப்பட ஆரம்பித்து விட்டாயே! நான் ஒன்றும் பேசுவதற்குள்ளேயே இப்படி வருத்தப்படுகிறாயே! சரிதான். ராமநாதனிடமும் இப்படித்தான் அழுதிருப்பாய். நான் அவனைப் போய்க் கோபித்தேனே. என்ன ராமநாதா, அடடே! உனக்கும் கண் கலங்குகிறதா! சரியாய்ப் போச்சு! நானும் அழ வேண்டியதுதான் பாக்கி! கருதி சேர்ந்து விடும்!''



இதைக் கேட்டதும் ராமநாதன் சிரித்து விட்டான். அடுத்த விநாடி சந்திரிகாவும் சிரித்து விட்டாள்.

"நல்ல பிள்ளைகள்! ஊம்! புறப்படலாமா! நேரம் ஆகிறது!" என்றாள் சாவித்திரி.

மூவரும் காரிலே வந்து ஏறிக் கொண்டார்கள். அவசரத்தில் சந்திரிகா பின் ஸீட்டில் போய் ஏறினாள். ராமநாதனும் வழக்கம் போல் பின் ஸீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"சரி; நீங்கள் இருவரும் தனியாகப் பேசிக் கொண்டிருந்த அந்தத் துப்பறியும் கதைகளை இப்பொழுதும் தொடர்ந்து பேசுங்கள். நான் ஒரு காதால் அதைக் கேட்டுக்கொண்டே காரை ஓட்டுகிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே 'ஸ்டியரிங்' கைப் பிடித்தாள் சாவித்திரி அம்மாள்.

* * *

அன்றிரவு சந்திரிகா ஒரு விநோதமான கனவு கண்டாள்:

இருள் கப்பிப் படர்ந்திருந்த கருவானம் மேகக் கூட்டங்களுக்குள் கையிலே ஒரு பிச்சைத் தட்டு ஏந்திய வண்ணம் சந்திரிகா நடக்கிறாள். பின்னால் ஒரு பயங்கரமான பெண் குரல் "போ", "நில்", "பாடு" என்று அதிகாரம் செய்கிறது. சந்திரிகா ஏதேதோ நாடோடிப் பாடல்களைப் பாடுகிறாள். இதென்ன! திடீரென்று நிலவு உதிக்கிறது. பூரண சந்திரன். சந்திரிகா படுத்திருக்கிறாள். எங்கே? அந்தச் சந்திர வட்டத்துக்குள்ளேதான்! இதென்ன ஆச்சரியம்! யாரோ வந்து அவளுடைய கையைப் பிடிக்கிறார்கள்! பயங்கரமான பிடியில்லை. அன்புப் பிடி அது! சந்திரிகா பதறி எழுந்திருக்கிறாள். தன்னுடைய பிச்சை ஓட்டை நீட்டுகிறாள். என்ன ஆச்சரியம்! அந்த ஓட்டுக்குள் எதையோ போட்டான் அந்த மனிதன்! என்ன அதிசயம்! அது காசு இல்லை. காலணா விழ வேண்டிய இடத்தில் ஒரு மனித இதயம் விழுந்தது. ஓசைப் படாமல் விழுந்தது. காலணா என்றால் எத்தனை ஓசை கேட்கும். இது ஓசையே செய்யாமல் விழுந்தது. மனித இதயம் அல்லவா! மறுவிநாடி திகைப்போடு பார்த்தாள் சந்திரிகா. சந்திர வட்டத்தைச் சுற்றி நட்சத்திரங்கள் தெரிந்தன. அந்த நட்சத்திரங்களுக்குள்ளே ஒன்றில் திருச்சி தெரிந்தது. இன்னொன்றில் மாட மாளிகைகளோடு பம்பாய் நகரம் தெரிந்தது. பிறிதொன்றில் மாதுங்காவும் மாதர் சங்கக் கட்டடமும் தெரிந்தன. இன்னொரு நட்சத்திரத்துக்குள்ளே வேறு ஏதோ ஒரு ஊர் தெரிந்தது. ஆனால் எல்லா நட்சத்திரங்களும் தன்னைப் பார்த்துக் கண் சிமிட்டின!

சந்திரிகா கண்களை மூடிக் கொண்டு புரண்டு படுத்தாள். மீண்டும் அதே வானம்! அதே முழு நிலவு. சந்திரிகா அதே சந்திர வட்டத்துக்குள் அயர்ந்து நித்திரை செய்கிறாள். இதோ ஒரு மனித உருவம்! தன்னை அணுகி வருகிறது. இதோ தன்னைத் தொட்டு விட்டது.

சந்திரிகா பதறி விழித்தாள். எங்கிருந்தோ யாரோ பாடுவதுபோல் ஒரு மெல்லிய குரல் வந்தது.

கனவு கண்டதிலே—ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை—எவனோ
என்னகம் தொட்டுவிட்டான்!

'ஐயோ! கனவுதானா!' எத்தனை பதறி விட்டாள் சந்திரிகா. பதறிக் கொண்டே கண் விழித்தாள்.

LDT துங்காவில் விடிந்து கொண்டு வந்தது. விடியற்காலக் கனவுதான் கண்டிருக்கிறாள் சந்திரிகா! விடியற் காலம் கனவு கண்டால், பலிக்கும் என்று சொல்வார்களே, அப்படியானால் இந்தக் கனவின் பொருள் என்ன?

சந்திரிகா பலமாக யோசனை செய்தாள். கட்டிலுக்கு மேல் 'கூரை விசிறி' சுழன்று கொண்டிருந்தது. அதைப் போல் சுழன்றது அவளுடைய மனமும்.



சாவித்திரி அம்மாளைச் சந்தித்ததும், பிறகு அவள் பேசிய விதமும், ராமநாதன் தில்லியில் இருந்து இங்கே வந்ததும், அவன் நடந்து கொண்ட விதமும், எல்லாமாகச் சேர்ந்து புதிய எண்ணங்களைத் தோற்றுவித்திருந்தன அல்லவா? அதன் விளைவாகத்தான் இப்படியெல்லாம் சொப்பனம் உண்டாகிறது போலும் என்று நினைத்தாள் சந்திரிகா.

ராமநாதன் பெருந் தன்மையான மனிதர்! அவருடைய மனத்தில் உள்ள எண்ணத்தை வெளியிடுவதற்கு இத்தனை அவர் தயங்குவதிலிருந்தே அவர் எவ்வளவு நல்லவர் என்று தெரிகிறதல்லவா!—இவ்வாறு நினைத்தாள் சந்திரிகா. மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள். உடனே ரவீந்திரனுடைய ஞாபகம் வந்தது. அதைத் தொடர்ந்து 'குபீர்' என்று கண்ணீர் வந்தது. அடுத்த கணம் சாவித்திரி அம்மாள் கேட்ட கேள்வி ஞாபகம் வந்தது. அன்போடு பேசவும், தன்னைக் கட்டுப்பாட்டோடு பாதுகாக்கவும் கூடிய ஒரு மனிதர்—அப்படி ஒருவர் தனக்கு ஏற்பட்டால் தான் தன் எதிர்காலம் சீராக அமையும். ஆனால் அப்படிப்பட்ட ஒருவர் யார்? நிச்சயம் அந்த ஸ்தானத்தை ரவீந்திரன் வகிக்க முடியாது. அவர் கல்யாணியின் கணவர். அப்படியானால்? வேறு யார் அது? சாவித்திரி அம்மாளுடைய எண்ணமும், ராமநாதன் எண்ணமும் இந்த நாலைந்து நாளில் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அப்படியானால் அந்த ஸ்தானத்தை ராமநாதன் வகிப்பதா? தன்னுடைய இதய வாசலில் தன்னையும் அறியாமல் ராமநாதன் நுழைகிறாரா? "என்னகம் தொட்டு விட்டது" ராமநாதனா? மனித மனம் என்பது இத்தனை விசித்திரமான காரியமா?—ஒன்றும் புரியவில்லையே! பம்பாயின் தொங்கும் தோட்டத்தைப் போல் அல்லவா இப்பொழுது அவளுடைய மன நிலையும் தொங்கிக் கொண்டிருந்தது!

தனக்கும் உலகத்தில் மற்றப் பெண்களைப்போலத் தாயும் தகப்பனும் இருந்தால், இந்தக் கவலைகளை எல்லாம் அவர்களே எடுத்துக் கொண்டிருப்பார்களே! ஐயோ! ராமநாதன் சொன்னாரே, அது உண்மையாக இருக்குமா! தன்னுடைய பெற்றோர்கள் இன்னும் இந்த உலகில் இருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? எந்த நிலையில் இருக்கிறார்கள்? அவர்களுக்கு இப்படி ஒரு மகள் இருக்கிறாள் என்று தெரியுமா? அல்லது இந்த விஷயம் அவர்களுக்குமே தெரியாதபடி இரகசியமாகவே இருக்கிறதா? ஒன்றும் புரியவில்லையே! ஐயோ, அவர்களைத் தான் எப்பொழுது பார்க்கப் போகிறாள்? டாக்டர் சுரேஷ் அந்த விவரங்களை இரகசியமாக வைத்திருக்கிறார் என்று சொன்னாரே ராமநாதன்? அதில் என்ன நோக்கம் இருக்கக் கூடும்? ஏன் இவர்கள் இதை இப்படி இரகசியமாக வைத்திருக்க வேண்டும்? இதில் அப்படி என்ன புதிர் இருக்கக் கூடும்?

சந்திரிகாவினுடைய மனம் சாவி கொடுத்தால் ஓடுமே அந்த ரயில் வண்டியைப் போல ஓடியது. ஆனால் தண்டவாளத்தின் மேலேயே ஓடியது. தண்டவாளத்தை விட்டு இறங்கி விடவில்லை. மீண்டும் மீண்டும் பொம்மை ரயிலைப் போல் சுற்றிச் சுற்றி நினைவுத் தண்டவாளத்திலேயே ஓடிக்கொண்டிருந்தது, அந்த மனம்!

இதோ! ஓடுகிற ரயில்—பொம்மை ரயில் இல்லை, நிஜ ரயில்—அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்ததும் நிற்குமே, அப்படித் திடீரென்று நின்றது சந்திரிகாவின் மன ஓட்டம். காரணம் சாவித்திரி அம்மாள் உள்ளே வந்து ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போட்டாள்.

"யாரோ திருச்சியிலிருந்து உன்னைப் பார்க்க வந்திருக்கிறாரம்மா!"

"என்னைப் பார்க்கவா? திருச்சியிலிருந்தா?" என்று கேட்டாள் சந்திரிகா.

"ஆமாம். அவர் பெயர் உஸ்தாத் மீரானும்!" என்றாள் சாவித்திரி. (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram



BLUE BAND MARGARINE
ரொட்டி, பிஸ்கோத்துகளில் உபயோகித்தால்
எவ்வளவு சுவைமிகுந்தது . . .
புளூ பாண்ட் மார்கரீன்
கேக், பேஸ்டிரீஸ் செய்வதற்குக்
கூட மிக்கச் சிறந்தது!
உங்கள் குடும்பத்தினர் எல்லோருமே புளூ பாண்ட் மார்கரீனை மிக விரும்புவார்கள். பிஸ்கட், ரொட்டி அல்லது சாண்ட்விட்ச் முதலியவைகளின்மேல் தடவி உண்டால் மிகச் சுவையைத் தரும். புளூ பாண்ட் பைஸ், கேக், பேஸ்டிரீஸ் முதலியவை சுட (பேகிங்) செய்வதற்குக்கூட உபயோகிக்கலாம். வைட்டமின்கள் 'ஏ'யும், 'டீ'யும் சேர்த்துள்ளன!
BLUE BAND MARGARINE
மார்கரீன்
புளூ பாண்ட் மார்கரீன்
—குறைந்த செலவு, ஆனால் மிகவும் நல்லது

BB. 24-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon